TB
031(6) [illegible]
136356

# உமா வாசகம்

## ஆறும் புத்தகம்

[இலங்கைப் பாடசாலைகளின் உபயோகத்திற்கென இலங்கைக் கல்விப் பகுதியாரின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1955
MADRAS

திருத்திய பதிப்பு

கலைவாணி புத்தக நிலையம்
130, திரிகோணமலை வீதி, கண்டி

பதிப்புரிமை] 1955 [விலை சதம் 1–25

திருத்திய முதற் பதிப்பு—செப்டம்பர், 1955

TB
031
N55

சென்னை-600 008
136356

Kabeer Printing Works, Madras (3008)

# முன்னுரை

'உமா வாசகம்' என்னும் பெயருடன் வெளி வரும் இத்தொடர் 'நூல்கள் 'இலங்கைக் கல்விப் பகுதியாரின்' புதிய பாடத்திட்டத்தைத் தழுவி, நம் நாட்டு இளைஞர்கள் கற்றுப் பயனடையும் வண்ணம் எழுதப் பெற்றவையாகும்.

ஆறும் வகுப்புக்கென அமைந்த இந்நூற்கண் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பாடமும் காலத்திற் கேற்ப எழுதப்பட்ட புதுப்புதுப் பாடங்களாகும். மாணவ மாணவிகளின் மனோநிலையையும், அவர் தம் தமிழறிவின் எல்லையையும் மனதிற் கொண்டு இஃது இயற்றப் பெற்றுள்ளது. அன்றியும் மொழி வளர்ச்சிக்குரிய புதிய பாடங்களுடன் விசேட செய்யுட்பகுதியும், பயிற்சியும் சேர்க்கப்பட்டுள்ளன.

மேனாட்டு நூல்களையொப்ப இந்நூல் சகல சிறப்புக்களும் நிறைந்து விளங்க வேண்டுமென்பது எமது பேரவா. இதன் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் எவர்க்கும் இது எளிதில் புலனாகும்.

எல்லா மதத்தவர்களுக்கும் ஏற்ப எழுதிய இந்நூலினை நம் நாட்டுச் சிறுவர்கள் கற்றுப் பயனடைய ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர்களை அன்பாய் வேண்டுகிறோம்.

கண்டி,
9-9-'55.

பதிப்பாளர்,
**கலைவாணி புத்தக நிலையம்**

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **உரைநடைப்பகுதி** | | |
| 1. | மகாத்மா காந்தி | ... | 1 |
| 2. | மாண்டவன் மீண்ட மாயம் | ... | 9 |
| 3. | சேர். ஒலிவர் குணத்திலக்க | ... | 17 |
| 4. | கவியரசர் கம்பர் | ... | 21 |
| 5. | வெண்ணிப் பறந்தலைப் போர் | ... | 26 |
| 6. | மார்க்கோபோலோ–I | ... | 32 |
| 7. | புலவர் தூது | ... | 40 |
| 8. | தமிழ்நாட்டுச் சிற்பக்கலை | ... | 46 |
| 9. | பொன்னும் வெள்ளியும் | ... | 53 |
| 10. | மார்க்கோபோலோ–II | ... | 58 |
| 11. | கண்ணகி வழக்குரைத்தல் | ... | 64 |
| 12. | மானம் காத்த மன்னன் | ... | 71 |
| 13. | நட்புப்பேறு | ... | 77 |
| 14. | கவிமணி | ... | 82 |
| 15. | மின்சாரம் | ... | 89 |
| | **செய்யுட்பகுதி** | | |
| I. | **கடவுள் வணக்கம்** | ... | 95 |
| II. | **காதைப்பகுதி** | | |
| | 1. நளவெண்பா : சுயம்வர காண்டம் | ... | 96 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 2. | சீருப்புராணம் : நபி அவதாரப் படலம் ... | 103 |
| 3. | இரட்சணிய சரிதப்படலம் : குமாரப் பருவம் ... | 104 |
| 4. | பஞ்சதந்திரம்: வேடன் கதை ... | 106 |
| 5. | குசேலோபாக்கியானம்: குசேலர் சுசீலைக்கு நல்லறிவு புகட்டல் ... | 108 |
| 6. | பாஞ்சாலி சபதம்: துகிலுரிதல்... | 109 |
| III. | நீதிப்பகுதி | |
| 1. | திருக்குறள் ... | 112 |
| 2. | நன்னெறி ... | 114 |
| 3. | திரிகடுகம் ... | 114 |
| 4. | நான்மணிக்கடிகை ... | 115 |
| 5. | சிறுபஞ்சமூலம் ... | 115 |
| IV. | பல்சுவைப்பகுதி | |
| 1. | ஈழமண்டலச் சிறப்பு ... | 116 |
| 2. | தமிழ் ... | 117 |
| 3. | பொய் வருணனை ... | 118 |
| 4. | காத்தான் சத்திரம் ... | 119 |
| 5. | ஆறுமுக நாவலர் ... | 119 |



மகாத்மா காந்தி

# உமா வாசகம்

## ஆறும் புத்தகம்

### 1. மகாத்மா காந்தி

பாரத நாட்டின் மேற்குக்கரையில் **கத்தியவார்** என்னும் தீபகற்பம் உளது. அங்குள்ள **போர்பந்தர்** என்னும் ஊரில் 1869-ம் ஆண்டில் காந்தியடிகள் பிறந்தார். அவர் தந்தையார் வணிக குலத்தைச் சேர்ந்தவர்; இராசக் கோட்டைச் சிற்றரசரிடம் அமைச்சராயிருந்தவர்; வாய்மை, நேர்மை என்னுஞ் சிறப்பியல்புகள் வாய்ந்தவர். அவருடைய மனைவியாரின் பெயர் **புத்தளிபா** என்பது. அவ்வம்மையார் கடவுள் பக்தியும், சமயப் பற்றும் நிறைந்தவர்; இந்து சமயத்துக்குரிய விரதங்கள் எத்தனையுண்டோ, அத்தனையும் மேற்கொள்ளும் வழக்கமுடையவர்; பொறுமைக்கு இருப்பிடமானவர்.

இத்தகைய பெற்றோர்க்குப் பிறந்த மைந்தர் எவ்வாறிருப்பர்? '**மகனறிவு தந்தையறிவு**', என்பதும், '**தாயைப் போல் சேய்**', என்பதும் நம் நாட்டு முதுமொழிகள். இவற்றிற்கிணங்கக், காந்தியடிகள் தந்தையார் வாயிலாக வாய்மை, நேர்மை ஆகிய பண்புகளையும், தாயார் மூலமாகச் சாந்தம், சமயப்பற்று, கடவுள் பக்தி ஆகிய உயர்ந்த குணங்களையும் பெற்றார்.

உயர்குணங்களுக்கு உறைவிடமாய் விளங்கிய காந்தி அடிகளும் பள்ளி வாழ்க்கையில் பல தவறுகள் செய்துள்ளார். ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு சேருமானால், அந்தப் பால் முழுதும் நஞ்சாகும். அதுபோல, நற்குணங்கள் நிறைந்த பலரிடையே துர்க்குணங்கள் நிறைந்த சிலர் சேரினும், நல்லவர் தீயவராய் மாறிவிடுவர். அவ்வாறே நம் அடிகளும் தீயவர் உறவால் தீய ஒழுக்கங்களை மேற்கொண்டார். ஆயினும், அவர் தம் தவற்றை யுணர்ந்து, உடனே திருந்திவிட்டார். இந்நெறியை நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையிற் கடைப்பிடிக்க வேண்டும்.

உள் நாட்டில் படிப்பு முடிந்த பிறகு, காந்தியடிகள் வழக்கறிஞர் படிப்புக்காக இங்கிலாந்துக்குப் போக விரும்பினர். அதற்கு அவருடைய அன்னையார் ஒப்புக்கொள்ளவில்லை. வெள்ளையர் நாட்டிற்குச் சென்றால், மாமிசம் உண்ணல், மதுபானம் அருந்தல் போன்ற தீயபழக்கங்கள் தம் மைந்தருக்குப் படிந்துவிடும் என்று பயந்தார் அவ்வம்மையார். அதை அறிந்த அடிகள், அன்னையார் கால்களில் விழுந்து வணங்கி, "அம்மா, நான் மதுபானம் அருந்தமாட்டேன்; மாமிசத்தைத் தொடமாட்டேன்," என்று சத்தியம் செய்தார்; அதன்படியே நடந்துகொண்டார். எத்தனையோ இடையூறுகளுக்கிடையே தம் அன்னையாருக்களித்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றினர்.

காந்திமகான் மூன்றாண்டுகள் இங்கிலாந்தில் தங்கிப் 'பாரிஸ்டர்' பரிட்சையில் தேறி, இந்தியாவுக்குத் திரும்பி இராசக் கோட்டையில் வழக்கறிஞர் தொழிலை நடத்தத் தொடங்கினர்; ஆனால்,

சில நாட்களுக்குள் ஒரு வழக்குக் காரணமாகத் தென்னுப்பிரிக்காவுக்குச் சென்றூர். அக்காலத்தில் வாணிகம் செய்து பொருள் திரட்டவும், கூலி வேலே செய்து வயிறு வளர்க்கவும் பல இந்தியர் அங்குச் சென்று குடியேறியிருந்தனர். அவர்களே அங்கு வசித்த ஆங்கிலேயர் மிகத் தாழ்வாகவும், கொடுமையாகவும் நடத்தினர். படித்தவர், பணக்காரர் முதலிய எல்லாஇந்தியரையும் ஆங்கிலேயர் '**கூலிகள்**' என்றே வழங்கி வந்தனர். அன்றியும், வண்டிகளிலும் சிற்றுண்டிச் சாலேகளிலும், பிற பொது இடங்களிலும் இந்தியரை வெள்ளேயர் தம் அருகிலிருக்கவும் விடுவதில்லே.

அத்தகைய நிலே, அடிகள் மனத்தைப் புண்படுத்தியது. இந்தியருக்கு வெள்ளேயர் செய்து வந்த கொடுமைகளே எங்ஙனமாவது போக்க வேண்டுமென்று அவர் தீர்மானித்தார். ஆட்சி உரிமையும், படையின் பலமும் பெற்றிருந்த ஆங்கிலேயரோடு மறப்போர் தொடுக்க இயலாதென்பதை அறிந்த அடிகள், அறப்போர் தொடுத்தார். அவர் தொடுத்த போரில் குண்டு, துப்பாக்கி முதலிய படைகளே நீக்கித் '**துன்புறுத்தாமை**' என்னும் படையைத் துணேயாகக் கொண்டார். இந்த அறப்போர்தான் '**சத்தியாக்கிரகம்**' எனப்படுவது. தாம் மேற்கண்ட போரில் அடிகள் வெற்றிகண்டார்.

காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் இருந்தபோது, அங்கு வாழ்ந்திருந்த இந்தியர் ஒவ்வொருவரும் அரசினரிடமிருந்து அனுமதிச் சீட்டுப் பெற வேண்டுமென்னும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அவ்வனுமதிச் சீட்டில் அதற்குரியவர் கல்விகற்றவராயினும், கல்வியற்றவ ராயினும், தம் கைவிரல்

பத்திலும் மையொற்றி அடையாளம் வைக்க வேண்டும்; பிறகு அச்சீட்டை எங்குச் சென்றாலும் எடுத்துச் செல்லவேண்டும். அந்த அவமானத்தை நீக்க அடிகள் அறப்போர் தொடுத்து வெற்றியும் கண்டார். அரசினரும் சமாதானம் செய்துகொண்டனர். அதன்படி விருப்பமுள்ளவர் மட்டும் சீட்டுப் பெறலாமெனவும், விருப்பமற்றவர் சீட்டுப் பெற வேண்டுவதில்லையெனவும் முடிவு செய்யப்பட்டது. அப்போது சிலர் சீட்டுப் பெற விரும்பினர். மற்றவர் அதை எதிர்த்தனர்.

சீட்டுப் பெற விரும்பியவர்களுள் காந்தியடிகள் முதன்மையானவர். ஒரு நாள் அவரும், அவருடைய நண்பர் சிலரும் சீட்டைப் பெறுதற்குப் புறப்பட்டனர். காந்தியடிகளின் நண்பரான மீர் ஆலம் என்ற பட்டாணியரும், அவர் நண்பர்கள் சிலரும் அவர்களை வழிமறித்தனர். அதைக் கேளாமல் சென்ற அடிகளை அவர்கள் நையப் புடைத்தார்கள். அவர் உதடு கிழிந்தது; முன் பற்கள் விழுந்தன. மூர்ச்சித்துக் கீழே விழுந்த அவரைச் சிலர் தூக்கிச் சென்று சிகிச்சை அளித்தனர். இதற்குள் மீர் ஆலமும் அவர் நண்பர்களும் கைது செய்யப்பட்டார்கள். காந்தியடிகள் நினைவு பெற்றெழுந்தவுடனே, "மீர் ஆலம் எங்கே?" என்றார்; அவர் கைது செய்யப்பட்ட செய்தியை அறிந்தார்; அவர்களைச் சிறையிலிருந்து அப்பொழுதே விட்டுவிட வேண்டுமென்றும், அவர்களைத் தண்டிக்கக் கூடாதென்றும் காந்தியடிகள் கடிதம் எழுதிப் போலீஸ் அதிகாரிக்கு அனுப்பினார். அதற்கிணங்க அதிகாரி அவர்களை விடுதலை செய்தார்.

மகாத்துமாவின் இச்செயல் இயேசுநாதரின் இறுதிச் செயலை ஒத்திருக்கின்றதன்றோ? இயேசு நாதரைப் பகைவர்கள் சிலுவையிலறைந்த போது, அவர், "ஆண்டவரே, இவர்கள் தங்கள் அறியாமையால் செய்த இச்செயலுக்காக இவர்களை மன்னிக்கவேண்டும்," என்று ஆண்டவரை வேண்டிக் கொண்டாரல்லவா? அங்ஙனமே தீமை புரிந்தார்க்கும் நன்மையே செய்ய வேண்டுமென்ற ஒப்பற்ற கொள்கைக்காகவே உத்தமர் காந்தியடிகள் இறுதிக்காலத்தில் தம் உயிரை அர்ப்பணம் செய்தார்.

மகாத்துமா காந்தியடிகள் காட்டிய நல்வழிகள் இன்னும் எத்தனையோ உண்டு. 'ஜாதி' என்னும் சொல்லையே அவர் விரும்பியதில்லை. ஒரு நாள் காந்தியடிகள் வட இந்தியாவிலுள்ள ஓர் ஊருக்குப் போயிருந்தார். அன்று மாலை ஒரு பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்துக்கு வந்த ஹரிஜனங்கள், சிறிது தூரத்தில் தனியே அமர்த்தப்பட்டார்கள். காந்தியடிகள் பேச்சுமேடைக்கு வந்தார். அவர் தூரத்தில் அமர்ந்திருந்தவர்கள் ஹரிஜனங்களென்பதை அறிந்துகொண்டார். மேடையை விட்டு இறங்கி அவர்களிடையே போய் அமர்ந்தார். உயர் ஜாதியினரும் வேறு வழியின்றி ஹரிஜனங்களுடன் கலந்து அமர்ந்தனர். அது கண்ட அடிகள் பேரானந்தமடைந்தார்.

மத சம்பந்தமாகக் காந்தியடிகள் கொண்டிருந்த கொள்கை நாம் கருத்தில் வைக்கத் தக்கது. அவர் தம்மை வைணவர் என்று சொல்லிக் கொள்வது வழக்கம். ஆனால், அவருக்கு எல்லா

மதங்களிடத்தும் பற்றுண்டு. அவர் ஒவ்வொரு மதத்திற்குமுரிய நூல்களை நன்கு ஆராய்ந்தவர். "'கடவுள் ஒருவரே,' என்பது எல்லா மதங்களும் கூறும் உண்மை. ஆதலால், மதம் காரணமாக மக்கள் ஒருவரையொருவர் வெறுப்பதும், ஒருவரோ டொருவர் சண்டையிடுவதும் அறியாமை காரண மாகவும், ஆணவம் காரணமாகவும் நிகழ்வன," என்பது காந்தியடிகளின் கருத்து. எல்லா மதத்தின ரும் ஒன்றுபட்டு வாழவேண்டுமென அவர் விரும்பி னர்; அம்முயற்சியில் தம் ஆருயிரையு மிழந்தார்.

அடிகள் தென்னப்பிரிக்காவில் தமது அறப் போரை முடித்துக்கொண்டு, 1914-ல் இந்தியாவுக்கு வந்தார். அவர் விரும்பியிருந்தால், தாம் வழக்கறி ஞர் தொழிலில் அளவற்ற செல்வம் திரட்டியிருக் கலாம்; அரசர் போல வாழ்ந்திருக்கலாம். ஆனல், தந்நலமற்ற அவர், அயலார் ஆட்சியிலிருந்து தம் நாட்டுக்கு விடுதலை பெறும் வேலையில் முனைந்தார்; ஆயுதமின்றி அறப்போர் நிகழ்த்தினர்; தம் முதுமையைக் கருதாமல் முப்பதாண்டுகள் உழைத்து வெற்றி கண்டார். 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள், 15-ஆம் நாள் நள்ளிரவில் பாரத நாட்டைச் சூழ்ந்திருந்த அடிமையாட்சி என்னு மிருள் மறைந்து, **சுதந்தரம்** என்னும் சூரியன் உதிக்கக் கண்டு, அடிகள் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தார். ஆனல், இந்திய மக்களை நல்வழிப் படுத்தவும், இந்திய நாடு மேலும் மேலும் முன்னே றவும் அவர் நீண்ட நாள் வாழவில்லை. நாடு சுதந் தரமடைந்த ஐந்து திங்களுக்குள்ளேயே **நாதுராம் விநயகக் கோட்சே** என்னும் தீயவனல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாட்டின் விடுதலைக்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றனையும் அர்ப்பணித்த தியாக மூர்த்தியாம் மகாத்மா காந்தி அவர்களை, நாம் கருத்திற் கொள்ளல் சிறந்த மார்க்கம் ஆகும். அதற்கு நாம் செய்யத்தக்கது யாது? அஃது அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நிற்றலேயாம். ஆகவே சாதிவேறுபாடு, சமயப்பூசல், மது பானம், வேலையில்லாத் திண்டாட்டம் முதலாய பேய்கள் நாட்டில் நின்றும் வெளியேற வெற்றி காண்போமாக. நமது நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையும் அதுவேயாகும்.

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) புத்தளிபாவின் அரிய குணங்கள் யாவை ?

(ஆ) காந்தியடிகள் தம்மைப்பற்றிய தீய ஒழுக்கங்களி னின்று எவ்வாறு தம்மை விடுவித்துக்கொண்டார் ?

(இ) காந்தியடிகள் இங்கிலாந்துக்குச் செல்வதற்கு முன் மேற்கொண்ட விரதங்கள் யாவை ?

(ஈ) மகாத்துமா தென்னுப்பிரிக்காவில் 'அறப்போர் தொடுக்க நேர்ந்த காரணம் யாது ?

(உ) 'மீர் ஆலம்' என்பவர் யார்? அவரும் அவர் துணை வரும் காந்தியடிகளை ஏன் புடைத்தனர் ?

(ஊ) இயேசு நாதரின் இறுதிச் செயலோடு மகாத்துமாவின் எந்தச் செயலை ஒப்பிடலாம் ?

(எ) காந்தியடிகள் மத சம்பந்தமாகக் கொண்டிருந்த கருத்து யாது ?

(ஏ) பாரத நாட்டில் சுதந்தர சூரியன் எப்போது உதிக்க லானுன் ?

(ஐ) காந்தியடிகட்கு நாம் செய்யத்தக்கது யாது?

2. கீழ் வரும் சொற்ளுெகுதிகளே வாக்கியங்களாக அமைக்க:

(அ) மதத்திற்கும் ஒவ்வொரு உரிய நன்கு நூல்களே ஆராய்ந்தவர்.

(ஆ) தம்முடைய தாய் நாட்டவர்க்கும் உடல், பொருள், உயிர் தாய் நாட்டுக்கும் மூன்றையும் உதவியவர் அவர்.

(இ) இச்செயல் ஒத்திருக்கிறதன்ருே மகாத்துமாவின் இறுதிச்செயலே இயேசு நாதரின்.

3. பொருள் எழுதுக:

உத்தமர், இயலாது, ஒப்புயர்வு, அமைச்சர், வாய்மை, நேர்மை, உறைவிடம், நஞ்சு, களவாடு, வழக்கறிஞர், இடையூறு, கொடுமை, போர் தொடுக்க, துன்புறுத்து, சத்தியாக்கிரகம், நையப் புடைத்தார், சிகிச்சை, அர்ப்பணம், தியாகம்.

4. வாக்கியங்களில் அமைக்க:

இயலாது, கடமை, வாய்மை, ஒழுக்கம், உறுத்தியது, ஆறுதல், பொருள் திரட்ட.

## 2. மாண்டவன் மீண்ட மாயம்

பண்டைக் காலத்தில் வடஇந்தியாவில் **மட்டி புரம்** என்ற சிற்றூர் ஒன்றிருந்தது. அதன் புறத்தே இருந்த மரங்கள் செறிந்த சோலையொன்றில் முற்றுந்துறந்த முனிவரொருவரின் ஆசிரமம் இருந்தது. அதற்கு **மௌட்டிய மடம்** என்று பெயர். அதன் தலைவராய் விளங்கியவர் **பரமார்த்தர்** என்னும் குருசிரேட்டர். அற்புதமான சீடர் ஐவரை அவர் தம் பூர்வ புண்ணியவசத்தால் பெற்றிருந்தார். **மட்டி, மடயன், மூடன், மிலேச்சன், பேதை** என்பன அச்சீடர்களின் பெயர்கள்.

ஒரு நாள் குருவும், சீடரும் ஏதோ வேலை காரணமாக அயலூருக்குப் போக நேரிட்டது. வழியில் ஆறு ஒன்று குறுக்கிட்டது. அதன் கரையை அடைந்தவுடனே மட்டி என்னுஞ் சீடன், குருநாதர் முன்னே வந்து அவரடிகளில் விழுந்து வணங்கி, "குருநாதரே, அடியேன் கூறுவதைச் சிறிது கேட்டருளக் கோருகிறேன் : இந்நதி கொடியது. என் தந்தையார் இதைப் பற்றிய செய்தியொன்றை எனக்குக் கூறியுள்ளார். அதனை அவர் உரைத்தவாறே தெரிவிக்கின்றேன்; கேளுங்கள் : ஒரு நாள் என் தந்தையாரும் அவர் நண்பரொருவரும் உப்புப்பொதி ஏற்றப்பட்டிருந்த இரண்டு கழுதைகளை ஓட்டிக்கொண்டு இவ்வாற்றைக் கடந்து சென்றார்களாம். கோடைகாலமாதலின் நட்டாற்றில் கழுதைகளை நிறுத்திக் குளிப்பாட்டித் தாங்களும் குளித்துக் கரையேறினார்களாம். அந்தோ! என்னென்று சொல்வது இந்நதியின் கபடச் செயலை! சிறிதும் சந்தில்லாதபடி

தைக்கப்பட்டிருந்த கோணிப் பையின் வாய் சற்றும் திறவாதிருக்க, தோலிருக்கச் சுளை விழுங்கியது போலக் கோணியினுள்ளிருந்த உப்பையெல்லாம் இந்த ஆறு தின்றுவிட்டதாம். ஆதலால், நம்முள் எவரையேனும் இது விழுங்கிவிடக்கூடும். இந்நதி விழித்திருக்கும்போது நாம் இதனைக் கடத்தலாகாது,'' என்று பயபக்தியுடன் மொழிந்தான்.

அது கேட்ட அனைவரும் வியப்பெய்தினர். ''மட்டி சொல்வதில் உண்மையிருக்க வேண்டும். 'ஜாக்கிரதைக்குப் பயமில்லை,' என்பர் பெரியார். ஆதலால், நாம் ஆறு தூங்கும் நேரத்தை அறிந்து அதனைக் கடத்தலே சிறந்தது,'' என்றார் குருநாதர்.

உடனே மடயன் குருநாதரைப் பார்த்து, ''நீங்கள் இங்கேயே இருங்கள். நான் சென்று நதி விழித்திருக்கிறதா, தூங்குகிறதா என்பதை அறிந்து வருகிறேன்,'' என்று கூறிச் சுருட்டுப் பற்ற வைப்பதற்காகத் தான் கையில் வைத்திருந்த கொள்ளிக்கட்டையோடு ஆற்றை அணுகினன்; நீரில் இறங்காமல் சிறிது தூரத்திலேயே நின்று, கொள்ளிக்கட்டையைத் தண்ணீரில் தோய்த்தான். உடனே அது சுரீரென்று புகைந்ததைக் கண்டு, துள்ளிக் குதித்து ஓடி வந்தான். ''ஐயா, நதியைக் கடக்க இது தருணமன்று! அது விழித்திருக்கிறது! நான் அருகிற்சென்று தொட்டவுடனே, அது பாம்பெனச் சீறிப் பாய்ந்தெழுந்து, என்னைப் பற்றித் தின்ன வந்தது! அடியேன் உங்கள் கிருபா நோக்கம் பெற்றவனுகையால், உயிர்தப்பி வந்து சேர்ந்தேன்!'' என்று நடுநடுங்கிக் கொண்டே கூறினுன்.

சிறிது நேரங்கழித்துக் குருநாதர், "யாராவது சென்று ஆறு தூங்கிவிட்டதா என்பதை அறிந்து வந்தால், நாம் சீக்கிரம் மடத்தையடையலாம்," என்ருர்.

அது கேட்ட மூடன், குருநாதர் ஆணையைச் சிரமேற்ருங்கி, கொள்ளிக்கட்டையைக் கையிலெடுத்துக்கொண்டு, விரைவாயோடினுன்; மிக்க பயத்துடன் தொலைவில் நின்று, கொள்ளிக்கட்டையை மெல்லத் தண்ணீரில் நனைத்தான். முன்னமே அக்கட்டையின் நெருப்பு அணைந்திருந்தமையால், எவ்வித ஓசையும் எழவில்லை. அது கண்ட அவன் மகிழ்ச்சி மிக்கவனுய், ஒரே பாய்ச்சலாய்க் குருநாதரிடம் ஓடி வந்து, "குரு சிரேட்டரே, எழுந்திருங்கள்! ஒரு விணுடி கூடத் தாமதித்தல் கூடாது! நதி நன்ருய்த் தூங்குகின்றது! புறப்படுங்கள் சீக்கிரம்!" என்ருன்.

அதைச் செவியுற்ற அனைவரும் ஆற்றை, அணுகி, வாயைத் திறவாமல் மூச்சை அடக்கிக்கொண்டு, மெல்ல மெல்ல அடிமேலடி வைத்து, நதியைக் கடந்து கரையேறி விட்டார்கள்.

அப்போது அவர்கள் அடைந்த ஆனந்தத்தை அளவிட்டுக் கூறல் இயலாது. "நாமனைவரும் நம் குருநாதரின் அருள் விசேடத்தாலன்ருே, நதியால் விழுங்கப்படாமல் கரை ஏறினுேம்!" என்ருன் பேதை.

இதற்குள் குருநாதருக்குத் தம் அருள் விசேடத்தில் ஐயம் பிறந்துவிட்டது. அவர், "அது கிடக்கட்டும்; நாம் அனைவரும் வந்து சேர்ந்து விட்டோமா என எண்ணிப் பாருங்கள்," என்று கூறினர்.

உடனே மட்டி எண்ணத் தொடங்கினன். அவன் தன்னை (எண்ணுது) விலக்கி மற்றவரை மட்டும் எண்ணி, ஐந்து பேர் மட்டுமே இருக்கக் கண்டு, "ஐயையோ! இப்பொல்லாத நதி நாம் அறியாதபடி நம்முள் ஒருவரை விழுங்கி விட்டதே! என்ன செய்வது!" என்று கதறத் தொடங்கினன். மற்றச் சீடர் ஒவ்வொருவரும் மட்டியைப் போலவே கணக்கிட்டு, "ஐயோ! நம்முள் ஒருவன் மாண்டானே! என்ன செய்வோம்!" என்று வாயிலும், தலையிலும் அறைந்து கொண்டு அழத் தொடங்கினர். குரு சிரேட்டர் என்ன செய்வார்! பாவம்! அவரும் கணக்கிட்டார். விதி யாரை விட்டது! அவர் கணக்கும் மற்றவர் கணக்கே போன்றதாயிற்று. ஆதலால், அவரும் ஒப்பாரி வைக்கத் தொடங்கினர்.

அவர்கள் இங்ஙனம் அழுதுகொண்டிருந்த போது, ஒரு வழிப்போக்கன் அவ்விடத்தை அடைந்தான். அவன் அவர்கள் படும் துன்பத்தைக் கண்டு, அவர்களை அணுகி, "ஏனையா இவ்வாறு புலம்புகிறீர்கள்? உங்களுக்கு என்ன நேர்ந்தது?" என்று வினவினன். தங்கள் துக்க மேலீட்டால் ஒருவரும் வழிப்போக்கனுக்கு விடை கூற முன் வரவில்லை. ஆயினும், வழிப்போக்கன் பல முறை கேட்டபின், மிலேச்சன் சிறிது மனம் தேறி, "ஐயா, எங்கள் துன்பத்தை என்னென்று கூறுவது! நாங்கள் ஆறுபேர் ஒரு வேலை நிமித்தம் பிரயாணம் தொடங்கினேம். இந்த ஆறு குறுக்கிட்டது. இதன் கொடுமையை முன்னமே அறிந்திருந்த நாங்கள், முன் சாக்கிரதையாய் இது தூங்குந்தருணம் பார்த்து இதைக் கடந்தோம்.

அப்படியிருந்தும் பாழாய்ப்போன இந்நதி அறு வருள் ஒருவரை விழுங்கிவிட்டது. நாங்கள் இனி எப்படி உயிர் வாழ்வோம்!'' என்று அழுது கொண்டே கூறினன்.

அது கேட்ட வழிப்போக்கன் அவர்களை எண் ணிக் கணக்கிட்டான்; அறுவர் இருக்கக் கண் டான்; அவர்களுடைய அறிவின்மையை நன்கு தெரிந்து கொண்டான்; குறும்புத்தனம் நிறைந்த அவன், தன் குறும்பை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புக் கிடைத்ததையெண்ணி மகிழ்ந்தான்; உடனே அவர்களை நோக்கி, "ஐயன்மீர், நீங்கள் அழவேண்டா. நான் மந்திரத்தில் வல்லவன். மந்திர சக்தியாலும், என் குருநாதரின் அருளா லும் கங்கையில் மாண்டவனை நான் வருவிக் கிறேன். ஆனல், நான் சொல்கிறபடி மட்டும் நீங்கள் கேட்கவேண்டும்; அன்றியும் ஐம்பது பணம் எனக்களிக்கவேண்டும். இவற்றிற்கு நீங் கள் உடன்படுவீர்களாயின், ஒரு கணப்பொழுதில் மாண்டவனை மீண்டும் வரும்படி செய்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?'' என்றன்.

அவர்களுக்கு மந்திரவாதியிடம் நம்பிக்கை பிறந்தது. அவன் விரும்பியபடி நடந்துகொள்ள அவர்கள் உடன்பட்டார்கள்; ஆனல், ஐம்பது பணத்துக்கு எங்கே போவது எனத் திகைத்தார் கள். ஆயினும் குருநாதர் சற்று மனம் தேறியவ ராய், மந்திரவாதியை அணுகி, "ஐயா, நீர் சொல்லுகிறபடியே கேட்க நாங்கள் உடன்படு கிறோம்; ஆனல், எங்களிடம் உமக்குக் கொடுக்க ஐம்பது பணமில்லையே என்றுதான் யோசிக் கிறோம். எங்கள் வழிச்செலவுக்காக வைத்திருக்

கும் பதினைந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, உமது மந்திர பலத்தால் மாண்டவனை மீண்டும் வருவிக்கக் கோருகிறேன். உமக்குக் கோடி புண் ணியமுண்டு!'' என்ருர்.

தன் குறும்புத்தனத்துக்குப் பதினைந்து பணம் பரிசு கிடைப்பதைக் கண்ட வழிப்போக்கன், சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, '' நீங்கள் மிகவும் நல்லவர் களாய்க் காணப்படுகிறீர்கள்! உங்களிடம் என்னை யறியாமலே எனக்குக் கருணை பிறக்கிறது. ஆதலால், உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய யான் உடன்படுகிறேன். பதினைந்து பணத்தை முதலில் என்னிடம் கொடுங்கள்,'' என்ருன். ஐம்பது பணம் கேட்ட மந்திரவாதி பதினைந்து பணத்துக்குச் சம்மதித்துத் தங்கள் குறையைத் தீர்க்க உடன்பட்டது தங்கள் பூர்வ புண்ணிய மெனக் கருதிய அவர்கள், பதினைந்து பணத்தை உடனே அவனிடம் கொடுத்து விட்டார்கள்.

பிறகு மந்திரவாதி அவர்களை வரிசையாக நிறுத்தினுன். '' நான் சொல்கிறபடி செய்ய வேண்டும், தெரிகிறதா? என் கையில் உள்ள இத் தடி மந்திரசக்தி வாய்ந்தது. நான் இதனுல் ஒவ் வொருவர் முதுகிலும் ஓர் அடி கொடுப்பேன். முதலில் அடிபடுபவர் தம் பெயரைக் கூறிவிட்டு, 'ஒன்று' என்று எண்ணவேண்டும். இரண்டா வது அடி வாங்குபவர் தம் பெயரைக் கூறிவிட்டு, 'இரண்டு' என்று சொல்ல வேண்டும். இவ்வாறே ஒவ்வொருவரும் சொல்ல வேண்டும். தெரிகிறதா?'' என்று எச்சரித்தான். பிறகு தன் கைத்தடியால் தாட்சணியமின்றியும், கை கூசாமலும் ஒவ்வொரு வன் முதுகிலும் ஒவ்வோர் அடி அடித்தான். ஒவ்

வொருவனும் தன் பெயரைக் கூறிவிட்டு, ஒன்று, இரண்டு என்று கூறிக்கொண்டே வந்தபோது,



இறுதியில் அடிபட்ட குருநாதர், "அப்பா! என் பெயர் பரமார்த்தன்; ஆறு," என்றார்.

உடனே மந்திரவாதி, "பார்த்தீர்களா; இப்பொழுது ஆறு பேரும் இருக்கின்றீர்கள் அல்லவா? மாண்டவனை மீண்டும் வருவித்துவிட்டேன்! மகிழ்ச்சியாய்ப் போங்கள்," என்று கூறிவிட்டுப் பதினைந்து பணத்தையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) மௌட்டிய மடத்தில் வசித்துக்கொண்டிருந்தவர்கள் யார்? அவர்களுடைய பெயர்கள் யாவை?

(ஆ) ஆற்றின் கபடச் செயலாகக் கூறப்படுவது யாது?

(இ) ஆற்றின் தூக்கம் எங்ஙனம் சோதிக்கப்பட்டது?

(ஈ) குருவும் சீடரும் ஏன் அழுதனர்?

(உ) வழிப்போக்கன் எப்படிப்பட்டவன்? அவன் கூறிய மொழிகள் யாவை?

(ஊ) குருநாதர் வழிப்போக்கனிடம் கூறியது யாது?

(எ) வழிப்போக்கன் மாண்டவனை எவ்வாறு மீளச் செய்தான்?

(ஏ) இப்பாடத்தில் ஆற்றைக் குறிக்கும் சொற்கள் யாவை?

**2. பொருள் எழுதுக :**

ஆசிரமம், சிரேட்டர், செய்தி, பொதி, கபடம், வியப்பு, அணுகி, அளித்து, கண்கூடு, ஆணை, மகிழ்ச்சி, ஐயம், ஒப்பாரி, வாய்ப்பு, கருணை.

**3. பொருள் விளங்க வாக்கியங்களில் அமைக்க :**

கரை - கறை; கூரிய - கூறிய ; உரை - உறை ; இரங்கு - இறங்கு.

**4. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாக அப்பொருளுடைய வேறு சொற்களை அமைத்து எழுதுக :**

(அ) **பண்டைக்** காலத்தில் வடநாட்டில் மட்டிபுரம் என்னும் **சிற்றூர்** ஒன்றிருந்தது.

(ஆ) இதைப் பற்றிய **செய்தி**யொன்றை என் **தந்தையார் கூறியுள்ளார்.**

(இ) இவர்கள் **உரையாடி**க்கொண்டிருந்த போது, ஒருவன் குதிரையைச் **செலுத்திக்கொண்டு** வந்தான்.

(ஈ) அவர்கள் அடைந்த **ஆனந்தத்தை** அளவிட்டுக் கூற **இயலாது.**



## 3. சேர். ஒலிவர் குணத்திலக்க

நம் இலங்கையினை ஆங்கிலேயர் கைப்பற்றிய காலம் முதல் ஆங்கிலேயரே இலங்கைத் தேசாதி பதிகளாக இருந்துவந்தனர். சுதந்திர இலங்கை யின் இலங்கையன்னை யீன்ற பெருமகனுர் ஒருவர் இலங்கைத் தேசாதிபதியாக வரும் நாளை நாம் எதிர்பார்த்திருந்தோம். நமது ஆவல் பூர்த்தியாகி விட்டது. சுதந்திர இலங்கையின் முதலாவது சுதேச மகா தேசாதிபதியாக இராணி மாளிகை யில் வசிக்கும் பெருமை சேர். ஒலிவர் குணத்

திலக்க அவர்களுக்கே உரியதாகும். இலங்கை பெற்றெடுத்த பெரியார்களில் இவரும் ஒருவராவர்.

இப்பெருந்தகையார் 1892-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் திகதி பிறந்தார். கொழும்புமா நகரில் உள்ள வெஸ்லி கல்லூரியில் கல்வி கற்ருர். லண்டன் பல்கலைக் கழகத்தில் பீ. ஏ. பட்டம் பெற்ருர். ஆரம்பத்தில் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையின் அதிபராகக் கடமை ஆற்றினர். சிறிது காலம் செல்ல அரசாங்க சேவையில் சேர்ந்தார். முதலில் இவர் இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியில் உதவிக் கணக்குப் பரிசோதகரானுர். இதிலிருந்து அரசாங்க சேவையில் உயர்ச்சி பெற்ருர். கடுமையான உழைப்பும், இடைவிடா ஊக்கமும், சிறந்த செயற்றிறமையுமே இவரது வெற்றிக்குக் காரணமாயிற்று. 1924-ம் ஆண்டில் இவர் உதவிக் குடியேற்ற நாட்டுக் கணக்குப் பரிசோதகராக நியமிக்கப் பெற்ருர். அதே ஆண்டு யூலை மாதத்தில் இவர் இலங்கையின் பிரதம கணக்காளராகவும் நியமிக்கப்பட்டார். அப்பதவியை இவர் 1942-ம் ஆண்டு வரை வகித்து வந்தார்.

1942-ல் சப்பானிய யுத்தம் ஆரம்பித்தபோது சேர். ஒலிவர் குணத்திலக்க பொதுசன பாதுகாப்பு அதிகாரியாகவும், உணவுப்பொருள் அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். இப்பதவிகளில் முக்கிய பொதுசனக் கட்டுப்பாட்டு உணவுப்பொருள் அதிகாரியாக அவர் நாட்டு மக்களுக்கும் நேச தேசங்களுக்கும் செய்த சேவை மிகவும் சிறந்ததாகும். யுத்த காலத்தில் நம் நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்படாமைக்குச் சேர். ஒலிவரின் சேவையே காரணமென்று சொல்லவேண்டும். பொதுசன

பாதுகாப்புக்காக அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் மிகவும் சிறப்பானவையாகும். இத்துறையிற் செய்த சிறந்த சேவைகளுக்காக 1944-ம் ஆண்டில் அவருக்கு 'நயிட் கொமாண்டர்' என்ற 'சேர்' பட்டம் வழங்கப்பட்டது.

யுத்தம் முடிந்த பின்னர் இவர் நிதிக் காரிய தரிசியாக நியமிக்கப்பட்டார். இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் இவரே ஆவர். இக்காலத்தில் கௌரவ திரு. டி. எஸ். சேனநாயக்காவுடன் நெருங்கிப் பழகி இலங்கையின் சுதந்திரத்திற்குப் பக்கபலமாக விளங்கினர்.

1947-ல் சோல்பரித் திட்டம் அமுலுக்கு வந்த பின்னர், இவர் அரசியல் வாழ்வில் பெரும்பங்கு பெறலானர். அரசாங்க பதவியை விட்டு விலகி செனட்சபை அங்கத்தினராகியதோடு உள்நாட்டு மந்திரியாகவும் பதவியேற்ருர். 1948-ல் லண்டன் மாநகருக்கு இலங்கையின் தூதுவராகச்[1] சென்ருர்.

பின்னர் இலங்கை மீண்டதும் மறுபடியும் செனட்சபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டதோடு, முறையே உள்நாட்டு மந்திரியாகவும், விவசாய உணவு மந்திரியாகவும் நியமிக்கப்பட்டார். சேர். ஜோன். கொத்தலாவலை பிரதம மந்திரியாகப் பதவி ஏற்ற பின்னர், இவர் நிதி மந்திரியாகப் பதவி ஏற்ருர்.

சேர். ஒலிவர் சாதாரண குடும்பத்திற் பிறந்தவரே யெனினும், தமது விடாமுயற்சியினுலும் ஊக்கத்தினுலுமே இன்று நமது தேசாதிபதியாக விளங்குகிருர். அவரது வாழ்க்கை நம் நாட்டு மக்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

---

1. High Commissioner

இவர் குதிரைப் பந்தயங்களில் அதிக விருப்ப முடையவர். இவரது குதிரைகள் இலங்கையில் மட்டு மன்றி, மேல்நாட்டுக் குதிரைப் பந்தய மைதானங் களிலும் பந்தயங்களில் கலந்திருக்கின்றன. இப் பெரியார் இலங்கையிலும், இங்கிலாந்திலும் உள்ள பல சங்கங்களில் அங்கத்தினராவர்.

இத்தகைய பரந்த அனுபவமும், சிறந்த குண நலனும் வாய்க்கப்பெற்ற இப் பெருமகனுர் நமது தாய்நாட்டின் தேசாதிபதியாய் இருப்பது நமக்குப் பெருமையாகும்.

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) சேர். ஒலிவர் குணத்திலக்க அவர்கள் எப்போது பிறந்தார் ?

(ஆ) எங்கு கல்வி கற்ருர் ?

(இ) அவர் வகித்த முதல் உத்தியோகம் என்ன ?

(ஈ) அவர் வகித்த பதவிகளை வரிசையாக எழுதுக.

(உ) இவரது வெற்றிக்குக் காரணமாய் இருந்தவை எவை ?

(ஊ) யுத்த காலத்தில் நமக்குச் செய்த சேவை என்ன ?

(எ) இலங்கையில் சேர். ஒலிவருக்கு முன் தேசாதிபதியாய் இருந்தவர் யார் ?

**2. கீழ்வரும் வாக்கியத்தை இரண்டாகப் பிரித் தெழுதுக :**

இத்தகைய பரந்த அனுபவமும், சிறந்த குணங்களும் வாய்க்கப்பெற்ற இப்பெருமகனுர், நமது தாய்நாட்டின் தேசாதி பதியாய் இருப்பது நமக்குப் பெருமையாகும்.

**3. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :**

பெருமகனுர், எதிர்பார்த்திருந்தார், வகித்துவந்தார், வழங் கப்பட்டது, பக்கபலமாக.

**4. பொருள் எழுதுக :**

திறமை, தூதுவர், செனட்சபை, சேவை, சுதேச, எடுத் துக்காட்டு, குணநலன்.

# 4. கவியரசர் கம்பர்

“ வெண்பாவிற் புகழேந்தி ; பரணிக்கோர்
சயங்கொண்டான் ; விருத்த மென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் ; கோவைஉலா
அந்தாதிக்(கு) ஒட்டக் கூத்தன் ;
கண்பாய கலம்பகத்துக்(கு) இரட்டையர்கள் ;
வசைபாடக் காள மேகம் ;
பண்பாய பகர்சந்தம் படிக்கா(சு)
அலால்ஒருவர் பகரொ ணாதே.”

என்பது ஒரு பழையபாட்டு. இது **புகழேந்தி, சயங்கொண்டார், கம்பர், ஒட்டக்கூத்தர், இரட்டையர், காளமேகம், படிக்காசுப் புலவர்** ஆகிய சிறந்த புலவர்களின் சிறப்பை விளக்குகிறது; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான பாட்டோ, நூலோ இயற்றுவதில் மேன்மை பெற்று விளங்கினர் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது. எனவே, தமிழில் ஆக்கப் பெறும் பலவகைப் பாக்களில் **விருத்தப்பா** இயற்றுவதில் கம்பர் தலைசிறந்தவர் என்பது இதனால் நன்கு விளங்குகின்றது. கம்பரைக் **கவிச்சக்கரவர்த்தி** என்று தமிழறிஞர் கூறுகின்றனர். **‘ கம்பசூத்திரம் ’** என்னும் வழக்கும், **‘ கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும், ’** என்னும் வாக்கியமும் கம்பரின் கல்வித்திறத்தை விளக்க எழுந்தவை.

கம்பர் சோழநாட்டிலுள்ள **திருவழுந்தூரில்** ஏறத்தாழ எண்ணூறாண்டுகட்கு முன்பு பிறந்தார். அவர் வேளாண்குலத்தவரென்பர் பலர் ; இளமையில் உவச்சர் வீட்டில் வளர்ந்தமையால், உவச்சர் குலத்தவரென்று கூறுவர் சிலர். அவர் தமது இளமையிலேயே பெற்றோரை இழந்து, உவச்சர்

குலத்தவர் ஒருவரால் வளர்க்கப் பெற்ருர் ; பின்னர், திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, அங்கு அக்காலத்தில் சிறந்த கொடையாளியாக விளங்கிய சடையப்ப வள்ளல் என்புவரால் ஆதரிக்கப் பெற்று, அவர் இல்லத்திலேயே வளர்ந்து வந்தார் ; அச் சடையப்பரின் பிள்ளைகளுடன் ஓர் ஆசிரிய ரிடத்துத் தமிழ் கற்ருர். தமது ஊக்கத்தாலும், இறைவன் இன்னருளாலும் அவர் விரைவில் பெரும் புலவராஞர். அவரது புகழ் நாடெங்கும் பரவியது.

அக்காலத்தில் சோழநாட்டை ஆண்டவர் இரண்டாம் குலோத்துங்கர். அவர் தமிழ் மொழியின்மீது பேரன்புடையவர் ; தமிழ்ப் புலவர் களை ஆதரித்துத் தமிழ் வளர்த்த மன்னருள் ஒருவர். அவரது அவைக்களத்தை ஒட்டக்கூத்தர் முதலான பெரும் புலவர்கள் அலங்கரித்துத் தமிழாராய்ந்தார்கள்.

கம்பரைப்பற்றிக் கேள்வியுற்ற குலோத்துங்க மன்னர் அவரை வரவழைத்தார் ; அவர் புலமையை நேரிலறிந்து அவருக்குப் பல சிறப்புக்கள் செய் தார் ; ‘ கவிச் சக்கரவர்த்தி ’ என்னும் பட்டத்தை யும் வழங்கினுர் ; சிறு நாடொன்றையும் நன் கொடையாக நல்கினுர் ; அன்றியும், அவரைத் தம் அவைப்புலவராகவும் அமர்த்திக்கொண்டார். கம்பர் அவ்வப்போது அழகிய பாக்கள் இயற்றி மன்னரை மகிழச் செய்தார்.

ஒரு நாள் ஏதோ காரணம்பற்றி அரசருக்குப் புலவர்மீது சீற்றம் பிறந்தது. கம்பரை நோக்கி, “ நீர் இனி எமது நாட்டில் இருத்தல் கூடாது. விரைவில் வெளியேறுக !” என்று ஆணையிட்டார், அரசர். கம்பநாடர் வெகுண்ட மன்னரை நோக்கிக்,

"கொல்லிமலை நாடாளும் கொற்றவா, நீ முனிந்தால், இல்லையோ எங்கட்கிடம்?" என்று கூறிச் சோழநாட்டை விட்டகன்ருர். பண்டைப் புலவரின் பண்பு இதுவே. தன்மதிப்பே அவர்தம் தனிப் பண்பு. பட்டம் பதவிகளை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், மானத்தையே பெரிதாக மதிப்பது அவர் மனப்பாங்கு.

சோழநாட்டை விட்டகன்ற கம்பர், ஆந்திர நாட்டை அடைந்தார். அங்குள்ள ஓரங்கல் என்னும் சிறுநாட்டை அக்காலத்தில் பிரதாபருத்திரர் என்னும் அரசர் ஆண்டு வந்தார். கம்பநாடர் தம் நாட்டிற்கு வந்திருந்த செய்தியை அவர் அறிந்தார்; உடனே தம் பிரதானிகளை அனுப்பி அவரை அழைத்துவரச் செய்தார்; புலவருக்கு நல்வரவு கூறி, பரிசுகள் வழங்கித் தம் அவையில் இருக்குமாறு அவரை வேண்டிக் கொண்டார். கம்பரும் அதற்கிசைந்து, அங்கு வீற்றிருந்து, ஆந்திர அரசரைத் தம்முடைய இனிய தமிழ்ப் பாக்களால் மகிழ்வித்து வந்தார்.

சில நாட்கள் கழிந்தன. கம்பநாடரில்லாக் குலோத்துங்கரின் சபை சந்திரனில்லா வானம் போலப் பொலிவிழந்து காணப்பட்டது. மன்னர் மனத்தில் கம்பநாடரைப் பற்றிய நினைவு அடிக்கடி தோன்றித் துன்புறுத்தத் தொடங்கியது. அவருக்குத் தாமிழைத்த துன்பத்தைப்பற்றி அரசர் எண்ணி யெண்ணி வருந்தினர்; இறுதியில் கம்பநாடர் தங்கியிருந்த இடத்தைக் கண்டறிந்து வரும்படி ஏவலாளரைப் போக்கினர். பிரதாபருத்திரரின் சபையில் அவர் தங்கியுள்ளார் என்பதை அறிந்த குலோத்துங்கர், அவசர புத்தியால் தவறு செய்த

தம்மை மன்னித்து, மீண்டும் தம் நாட்டிற்கு வந்து, தம் அவையை அலங்கரிக்க வேண்டுமென்று கோரிக் கம்பருக்கு ஓலையனுப்பினர். அறியாமையால் செய்த தீமையை மறந்து விடுவதே அறிஞரின் பண்பாதலால், கம்பர், சோழமன்னரை மன்னித்து, மீண்டும் சோழநாட்டை அடைந்தார்.

கம்பர் சோழநாட்டுக்குத் திரும்பிய பின்பு, சடையப்ப வள்ளலின் வேண்டுகோளாலும், சோழ அரசரின் தூண்டுதலாலும் இராமாயணத்தை இயற்றத் தொடங்கினர்; பல வடமொழிப் பண்டிதர்களை வால்மீகி இராமாயணத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்டு, நாளொன்றுக்கு எழுநூறு செய்யுட்களாகப் பாடித் தம் காவியத்தை முடித்தார்.

கம்பராமாயணம் பன்னீராயிரஞ் செய்யுட்களாலியன்றது. அவற்றுள் இறுதியிலுள்ள ஆயிரத்தைந்நூறு பாடல்கள் ஒட்டக்கூத்தரால் பாடப்பட்டவை. மற்றவை கம்பரால் பாடப்பட்டவை. கம்பர் நன்றியறிதல் மிக்கவர். அவர் தம்மை இளமையில் பாதுகாத்த சடையப்ப வள்ளலைத் தாம் இயற்றிய இராமாயணத்தில் பத்திடங்களில் புகழ்ந்து பாடித் தம் நன்றியை வெளிப்படுத்தியுள்ளார்.

அக்காலத்தில் புலவர் எவரேனும் நூலியற்றினுல், அதனைக் கற்றவர் நிறைந்த சபையில் படித்துக் காட்டுவது வழக்கம். சபையிலுள்ள அறிஞர், அந்நூலின்கண் ஏதேனும் ஐயமெழுப்பினுல், நூலாசிரியர் தக்க விடைகூறி, அந்த ஐயத்தை நீக்கவேண்டும். பின்பு சபையார் அந்நூலுக்குப் புகழுரை கூறுவர். இந்த முறைக்கு ‘ அரங்கேற்றுதல் ’ எனப்படும். கம்பர் தாமியற்றிய இராமாய

ணத்தைத் திருவரங்கத்தில் பெரும்புலவர் பலர் முன்னிலையில் அறங்கேற்றினர். அக்காலத்திலும், இக்காலத்திலும் அவர் நூலைப் புகழாத தமிழ்ப் புலவர் எவருமிலர். இராமாயணத்தைத் தவிர சட கோபர் அந்தாதி, ஏரெழுபது திருக்கை விளக்கம் முதலாய நூல்களும் கம்பரால் இயற்றப்பட்டன வாகும். கம்ப்நாடர் வாழ்க்கையைப் பற்றிய கதை கள் பற்பல. அவற்றைப் படித்தறிய வேண்டுவது தமிழ் மாணவ மாணவிகள் கடமையாம்.

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) கம்பர் எவ்வகைச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர் ?

(ஆ) வசை பாடுவதில் வல்ல புலவர் யார் ?

(இ) கம்பர் எப்போது, எங்கே பிறந்தார் ?

(ஈ) கம்பர் தம் இளமைப்பருவத்தில் எங்கு வளர்ந்தார் ?

(உ) கம்பர் ஏன் சோழ நாட்டை விட்டகன்றார் ?

(ஊ) கம்பராமாயணத்தைப் பற்றிச் சிறு குறிப்பு ஒன்று எழுதுக.

(எ) 'அரங்கேற்றம் ? என்பது யாது ?

(ஏ) கம்பர் இயற்றிய சில நூல்களின் பெயர் தருக.

**2. சொல்லியபடி செய்க :**

(அ) கம்பர் திருவழுந்தூரில் பிறந்தார். (வாக்கியத்தைத் 'திருவழுந்தூர்' என்று தொடங்கி எழுதுக.)

(ஆ) கம்பர் இளமையிலேயே பெற்றோரை இழந்து, உவச்சர் குலத்தவர் ஒருவரால் வளர்க்கப் பெற்றார். (இதனை இரண்டு வாக்கியங்களாக எழுதுக.)

(இ) சிறு நாடொன்றை நன்கொடையாக நல்கினர். ('நல்கினர்' என்பதற்குப் பதில் 'நல்கப்பட்டது' என்னும் சொல்லை அமைத்து வாக்கியத்தை எழுதுக.)

**3. பொருள் எழுதுக :**

ஒழுக்கம், அறிஞர், திறம், வள்ளல், இல்லம், இன்னருள், அவைக்களம், நன்கொடை, வெகுண்டு, சீற்றம், பண்பு, மனப் பாங்கு, அகன்ற, பிரதானி, இசைந்து, பொலிவு.

# 5. வெண்ணிப் பறந்தலைப் போர்

சோழ மன்னருள் தலைசிறந்தவர் கரிகாற் சோழர். அவர் நாட்டு மக்களுக்கு நன்மை புரிந்து நற்புகழ் பெற்றவர்; செங்கோல் தவருத செம்மல்; வடநாட்டில் தம் படையைச் செலுத்தி, இமயத்தில் வெற்றிக்கொடி நாட்டிய வீரர். அவரது மாட்சிமை தங்கிய ஆட்சி, அவர் புகழை மேன்மேலும் ஓங்கச் செய்தது. அது கண்ட அவருடைய பங்காளிகள் பொருமையால் மனம் புழுங்கிஞர்கள். எக்காரணம் பற்றியேனும் அரசாட்சியைக் கவர எண்ணிய அவர்கட்கு வாய்ப்பொன்றும் நேரவில்லை. எனவே, அவர்கள் தங்களாலாகாத காரியத்தைப் பிறர் மூலமாகவேனும் செய்துமுடிக்க வேண்டுமென நிச்சயித்தார்கள்; இறுதியில் ஒரு சூழ்ச்சியை மேற்கொண்டார்கள்.

அக்காலத்தில் சேரநாட்டை ஆண்டு வந்தவர் நெடுஞ்சேரலாதர் என்பவர். அவரது தலைநகரம் **மாந்தை** என்பது. அவரும் கரிகாலருக்கு ஈடானவர்; ஈகையிற் சிறந்தவர்; வீரம் நிறைந்தவர்; நேரிய முறையில் நாட்டை ஆட்சிபுரிந்து, குடிமக்களின் அன்பையும் ஆதரவையும் நிரம்பப் பெற்றவர்; ஆயினும், திருமாவளவர் என்னும் கரிகாற் சோழரின் புகழ் தம் புகழைச் சிறிது மங்கச் செய்தது கண்டு, அவரிடம் சற்று அழுக்காறு கொண்டிருந்தார்.

அதையறிந்த கரிகாற்பெருவளத்தாருடைய பங்காளிகள் சேரமன்னரை அடைந்தார்கள்; அவரைச் சோழவரசர் இகழ்ந்து பேசியதாகக் கற்பனைக் கதைகள் கூறிக் கலகம் செய்தார்கள்.

ஏற்கெனவே சேரலாதர் மனத்திற்பொருமைத் தீ புகைந்துகொண்டிருந்தது. புல்லரின் பொய்யுரையும் புகைந்துகொண்டிருந்த நெருப்பில் நெய் பெய்தது போலாயிற்று. பொருமைத்தீ, போர்ச் சுவாலை கக்கத் தொடங்கியது. 'கெடுமதி கண்ணுக்குத் தோன்ருது,' என்னும் முதுமொழிக் கிணங்க, வஞ்சகரின் சூழ்ச்சி வயப்பட்ட சேர மன்னர், சோழநாட்டின்மீது படையெடுக்க நிச்சயித்தார்.

தன் வலியும் மாற்ருன் வலியும் ஒப்பிட்டறிந்தே வீரர் போரிலிறங்குவது முறையாதலால், சேர மன்னர் சோழ வேந்தரின் படைவலியை நன்கு ஆராய்ந்தார். எவ்வாற்ருனும் தம்மைக்காட்டிலும் மாற்ருர் வலியவர் என்றறிந்த சேரலாதர், சில சிற்றரசர்களின் துணையை நாடிப்பெற்ருர். நல்ல நாளில் நன்னிமித்தங்களுக்கிடையே தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படையாகிய நால்வகைப் படைகளுடனே சேரலாதரும், சிற்றரசர்களும் சோழநாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

நெடுஞ்சேரலாதர் தம்மீது போர் தொடுக்கக் கருதிப் படைதிரட்டிய செய்தியை ஒற்றர் மூலம் அறிந்தார் சோழ மன்னர்; போருக்குக் காரணமறியாது சிறிது திகைத்தார்; ஆயினும், தம் படைவலியை நன்கறிந்திருந்தும், தம்மீது போர் தொடுக்கத் துணிந்த சேரலாதர்பால் கரிகாலர்க்குக் கடுஞ்சினந் தோன்றியது. காரணமின்றிக் கடும் போர் தொடங்கி, நாட்டின் அமைதியைக் குலைப்பதோடன்றி, வீரர்களுயிரையும் விண்ணுலகேற்றத் துணிந்த மதிகெட்ட மன்னர்க்கு நற்புத்தி கற்பிக்க

வேண்டுவது தமது கடமையென மதித்தார் கரிகாலர்.

கரிகாலர் சிறிதும் காலம் தாழ்த்தவில்லை; படைகளைத் திரட்டுமாறு படைத்தலைவர்கட்குப் பணித்தார்; சேரர் படை தம் நாட்டகத்தே புகுந்து போர் தொடங்குமாயின், தம்முடைய குடிகளுக்கு நேரக்கூடிய துன்பங்களை அரைக்கணத்தில் ஆராய்ந்தறிந்தார்; ஆகவே, தம் தலைநகருக்குச் சிறிது தூரத்தில் இருந்த வெண்ணிப் பறந்தலை என்னும் ஊரின் புறத்தே தங்கி, சேரர் படைக்கு நல்வரவு கூறக் காத்திருந்தார்.

சேரர் படையும் வந்து சேர்ந்தது. இரண்டு சேனைகளும் இரண்டு கடல்களையொத்திருந்தன. இருவர் படைகளிலும் போர் முரசங்கள் முழங்கின; சங்கொலிகள் கிளம்பின; "சோழ நாட்டுக்கு வெற்றி!", "சேர நாட்டுக்கு வெற்றி!" என்னும் குரலொலிகள் மாறி மாறி எழுந்தன; குதிரைகள் கனைத்தன; களிறுகள் பிளிறின; காலாட்கள் ஆரவாரம் செய்தார்கள். இரு படைகளும் எதிர்த்து மோதின. வாட்படைகள் ஒன்றோடொன்று தாக்கின. மின்னலோடு மின்னல் இணைந்தது போலக் காணப்பட்டது. கேடயங்கள் ஒன்றோடொன்று முட்டியதாலெழுந்த ஒலி, கேட்டார் மனத்தைத் திடுக்கிடச் செய்தது. கதையோடு கதை மோதியதாலெழுந்த ஒலி, இடியோசை எழுவதுபோன்றிருந்தது. தேரோடு தேர் முட்டியதானது, மலையை மலை முட்டியது போன்றிருந்தது. கலத்தைக் கலம் தாக்கினாற்போல யானைகள் ஒன்றையொன்று தாக்கிப் போரிட்டன. படை வீரர்கள் ஆரவாரத்துடன் போர் புரிந்தமை, புலியைப் புலியும், சிங்கத்தைச்

சிங்கமும் எதிர்த்துப் போரிடுவது போலக் காட்சி யளித்தது.

போர்க்களமெங்கும் பேரொலி பிறந்தது. களத்தினின்றெழுந்த புழுதிப் படலம் கார்மேகம் போலக் கதிரவனை மறைத்தது. வீரர்களுடைய விழிகள் கோபக்கனலைக் கக்கின. அம்புகளும், ஈட்டிகளும் அழல் ஒளியென விளங்கின. நாண் ஒலி காது செவிடுபடும்படி எழுந்தது. போர்க் களம் இரத்தக் களமாய்க் காட்சியளித்தது. எங்கும் ஒரே பிணக்குவியல்! சிறிது நேரத்தில் சேரர் படை சிதைந்தது. வீரர் பின் வாங்கினர். சோழர் படையின் வெற்றி முரசு விண்ணைப் பிளந்து கொண்டெழுந்தது.

நிலைமையைக் கண்ட நெடுஞ்சேரலாதர், அப் படைவீரர்களிடையே புகுந்து, வீரம் நிறைந்த சில சொற்களைக் கூறினர். அவை சேரர் படையில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பின. அவர்கள் மீண்டும் போர்புரிய முனைந்தார்கள். அஞ்சி யோடிய ஆட்கள் ஆண்மையோடு திரும்பியதைக் கரிகாலர் கண்டார். ஏற்கெனவே இரு படைகளி லும் எண்ணற்ற வீரர் இறந்தனர். எஞ்சி நின்ற வர் வீணே மடிதல் கூடாதென மன்னர் விரும் பினர்; தாம் ஏறியிருந்த குதிரையை விரைவாய்ச் செலுத்தித் தம் படையின் முன்னணியில் வந்து நின்றார்; அங்ஙனமே பகைவர் படையின் முன் னணியில் நெடுஞ்சேரலாதர் நிற்கக் கண்டார். சோழ மன்னர் தம் வேலாயுதத்தை எடுத்துச் சுழற்றிச் சேரமன்னர் மார்பிற் குறி வைத்து எய்தார். குறி பிழைக்கவில்லை. அந்தோ! மன்னர் மண்ணில் வீழ்ந்தார்! அது கண்ட சேரர்படை

எடுத்தது ஓட்டம்! மீண்டும் சோழர் படையில் வெற்றிமுரசு ஒலித்தது.

தரையில் விழுந்த சேரலாதர் இறக்கவில்லை; மூர்ச்சித்துக் கிடந்தார்; மயக்கந் தெளிந்து எழுந்தார்; தாம் மட்டும் தனியே நின்றது கண்டு வருந்தினர்; பகைவர் வேல் தம் மார்பில் பாய்ந்து முதுகுப்புறத்தில் ஊடுருவிச் சென்றிருந்ததை அப்போதுதான் உணர்ந்தார். உண்மை வீரனுக்கு முகத்திலும் மார்பிலும் ஏற்படும் புண்கள் மதிப்பிட முடியா அணிகலன்கள். புறப்புண்ணை வீரர் விரும்பார். ஆகவே, புறப்புண் தாங்கிய சேர மன்னர் மனம் வேதனையடைந்தது. அதனை அறிந்த சோழ வேந்தர், அவரிடம் கண்ணியமாய் நடந்து கொண்டார்; விருப்பமிருந்தால், தமக்கடங்கி அரசு செலுத்தலாமெனக் கூறினர். மானத்தையே மதித்த மன்னர், அதனை விரும்பவில்லை. புறப் புண் பெற்ற பின்பு தாம் உயிர்வாழ விரும்பவில்லை யென்று கூறிவிட்டார்; போர்க்களத்தை விட்டு அகன்றார்; தம் வாளைப் பூமியிற் புதைத்தார்; அதன் எதிரில் வடக்கு நோக்கியமர்ந்தார்; உண்ணா விரதத்தை மேற்கொண்டார். வேலால் நீங்காதிருந்த அவரது உயிர், விரதத்தால் நீங்கியது. சேரலாதர் புகழ் நாடு முழுதும் பரவியது.

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) கரிகாற்சோழரின் சிறப்புக்குக் காரணம் என்ன ?

(ஆ) அவரது சிறப்பையொத்த சிறப்புடன் அக்காலத்தில் வாழ்ந்த சேர மன்னர் யார் ?

(இ) சோழ மன்னர்மீது சேர மன்னர் பொருமை கொள்ளக் காரணம் யாது ?

(ஈ) அப்பொருமையை வளர்த்தவர் யாவர் ? அதற்குக் காரணம் என்ன ?

(உ) சேரமன்னரும் சோழமன்னரும் எங்கே போர் செய்தனர் ?

(ஊ) அப்போரை வருணித்து எழுதுக.

(எ) போரின் முடிவு யாது ?

(ஏ) சேரர் எவ்வாறு இறந்தார் ? ஏன் ?

**2. கீழ் வரும் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக :**

நற்புகழ், மாட்சி, வாய்ப்பு, இறுதியில், சூழ்ச்சி, கருதி, அமைதி, திரட்டு, நல்வரவு.

**3. பொருள் எழுதுக :**

தலைசிறந்த, செம்மல், மாட்சிமை, வாய்ப்பு, சூழ்ச்சி, ஈகை, புல்லர், முதுமொழி, வயப்பட்ட, மாற்ருன், நிமித்தம், விண்ணுலகு, பணித்தார், கணம், பிளிறின, கதை, புழுதி, படலம், முனைந்தனர்.



## 6. மார்க்கோ போலோ–I

இன்று நாம் வாழ்வது இயந்திர உலகம். உணவு சமைக்க இயந்திரம்—உடை தோய்க்க இயந்திரம்—எதற்கும் இயந்திரம்; இயந்திர உதவியால் மனிதன் மாட்சியுற்று விளங்குகிருன். எனவே, இக்காலத்தில் கொழும்பிலிருந்து ஆயிர மைலுக்கு அப்பாலுள்ள தில்லி நகரத்துக்கு ஆகாய விமானத்தில் சில மணி நேரங்களில் பிரயாணம் செய்ய முடிகிறது. பண்டைப் பிரயாண நிலே இதுவன்று. இலங்கையிலிருந்து காசிக்குச் செல்ல அக்காலத்தில் ஆறு மாதமாகுமென்பதை நூல்களின் வாயிலாக நாம் அறிகிருேம். அக்காலத்திற் பிரயாணஞ் செய்தவர்கள் அடைந்த

இன்னல்கள் எண்ணற்றவை. பிரயாண மார்க்கத்திலிருந்த ஊர்கள் ஒன்றுக்கொன்று அதி தூரத்திலிருந்தன. செப்பனிட்ட வீதிகள் இல்லை ; வழியெல்லாம் காடுகள் ; விலங்குகளின் தொல்லை ஒரு பக்கம் ; கொள்ளைக்கூட்டத்தவர் பயம் மற்றொரு பக்கம். இத்தனைத் துன்பங்களுக்கிடையே சமயப் பற்றினாலும், வாணிக முயற்சியினாலும், நாடாராயும் நாட்டத்தினாலும் தூண்டப்பெற்று, மனவலியும், உடல்வலியும் மிக்க சிலரால் அக்காலத்தில் பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய அரிய பெரிய பிரயாணங்களைச் செய்து அழியாப் புகழ் பெற்றவருள் ஒருவர் **மார்க்கோ போலோ**[1] என்பவர்.

இத்தாலி என்பது ஐரோப்பிய நாடுகளுள் ஒன்று. அது செல்வம் மலிந்தது ; புகழ் நிறைந்தது ; தொன்மை வாய்ந்தது. அதன்கண் வனப்பும், வாணிக முயற்சியும் வாய்ந்து விளங்கியது **வெனிஸ்**[2] நகரம். பிற நகரங்களுக்கில்லாத தனிச் சிறப்பொன்று அதற்குண்டு. அதன்கண் புழுதி நிரம்பிய தெருக்களும், அவற்றிற் பெருமுழக்கம் புரியும் வண்டிகளும் காணப்படா. தெருக்களுக்கும், வண்டிகளுக்கும் பதிலாகக் கால்வாய்களும் தோணிகளும் காட்சியளிக்கும். இத் தனிச் சிறப்பேயன்றி, மற்றொரு பெருஞ்சிறப்பும் அதற்குண்டு. கீழ்நாட்டு வணிகர்களும், மேல்நாட்டு வணிகர்களும் கூடித் தங்கள் வாணிகப் பண்டங்களை மாற்றிக்கொள்ளும் ஒப்பற்ற வாணிகத் தலமாகவும் அது விளங்கியது.

---

1. Marco Polo 2. Venice

வெனிஸ் நகரத்தின் ஒருபால் அமைந்திருந்த பரந்ததொரு மரக்கலத் துறையில் பட்டாடைகள் நிறைந்த சீனக்கலங்களும், ஏலக்காய் முதலிய நறுமணப் பொருள்களும், முத்து, இரத்தினம் முதலிய விலைமிக்க பண்டங்கள் ஏற்றப்பட்ட பாரதநாட்டுப் பாய்மரக் கலங்களும், பாரசீகம் முதலிய பிற கீழ்நாட்டுக் கலங்களும் காட்சி யளிக்கும். இவற்றைப் பெறுவதற்குப் பிரான்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய மேல்நாட்டு வணிகர்கள் அங்குத் திரள் திரளாகக் காணப்படுவார்கள்.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த வெனிஸ் நகரத்தில் 13-ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் முயற்சி மிக்க வணிக சகோதரர் இருவர் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் மூத்தவர்க்கு நிக்கோலோ போலோ[1] என்பது பெயர். இளையவர் பெயர் மேபியோ போலோ[2] என்பது. அவர்களுள் மூத்தவர் புதல்வரே மார்க்கோ போலோ என்பவர். போலோ சகோதரர்கள் ஊக்கமும் முயற்சியு மிக்கவர்களாதலின், அவர்கள் அடிக்கடி வாணிக நிமித்தம், அயல் நாடுகட்குச் செல்வது வழக்கம். அங்ஙனமே அவர்கள் மார்க்கோ போலோ நான்கு வயதுடையவராயிருந்தபோது ஆசிய நாடுகட்குச் சென்றவர்கள், சுமார் பத்தாண்டளவும் தாய்நாடு திரும்பவில்லை.

மார்க்கோ போலோ இளைஞராயிருந்தபோது வெனிஸ் நகரத்து மற்றச் சிறுவர்கள் போலவே தாமும் அடிக்கடி கப்பல் துறைக்குச் செல்வார்.

1. Nicolo Polo 2. Maffeo Polo

ஆனால், அவர் மற்றவரைப்போலக் கடலிற் குதித்துக் கப்பல்களைச் சுற்றி விளையாடுவதில்லை ; கடற்கரையில் இருந்த கடைகளில் கப்பலோட்டிகள் அமர்ந்திருந்தால், . அவர்களுடன் இருப்பார் ; அவர்கள் தாங்கள் செய்த பிரயாணங்களைப் பற்றிக் கூறும் வரலாறுகளைக் கேட்பார். சிலர், ஒற்றைக்கண் உள்ள மக்களுடைய நாட்டுக்குப் போய்த் திரும்பியதாகக் கூறுவர். மற்றும் சிலர், பேய்களும் பைசாசங்களும் வாழும் நாட்டுக்குச் சென்று வந்ததாகக் கூறுவர். வேறு சிலர், மனிதரைப் புசிக்கும் மக்களைக் கண்டு வந்ததாகச் சொல்லுவர். இன்னும் சிலர் தலையேயின்றித் தோள்களில் கண்களைப் பெற்று வாழ்பவரின் நாட்டைக் கண்டு வந்ததாக நவில்வர். இத்தகைய விந்தை மிக்க செய்திகளைக் கேட்டு வியப்படைவதில் மார்க்கோ போலோவுக்கு நிரம்ப ஆசை உண்டு. ஆதலால், அவர் கரை நோக்கி வரும் கலங்களுக்காக நாட்கணக்கில் காத்துக்கொண்டிருந்து, அவை கரையருகில் வந்தவுடனே மிக்க ஆவலோடு ஓடிச்சென்று மாலுமிகளை அணுகி, அவர்களின் பிரயாணங்களைப் பற்றிய செய்திகளைக் கேட்டு மகிழ்வார். இதனால், பிற நாடுகளைக் காண வேண்டுமென்ற விருப்பம் அவர்பால் நாளுக்குநாள் வளரத் தொடங்கியது. அவர் சிற்சில சமயங்களில் அயல் நாட்டுப் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த தம் தந்தையாரைப்பற்றியும், சிறிய தந்தையாரைப்பற்றியும் நினைந்து வருந்துவார் ; 'அவர்கள் என்று வருவார்களோ !' என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருப்பார்.

ஒரு நாள் வெனிஸ் நகரத்துக் கப்பல்துறை

யில் ஒரு மரக்கலம் வந்து நின்றது. அதிலிருந்து ஆடம்பர உடைகளணிந்த இருவர் இறங்கினர். அவர்களுக்குச் சொந்தமான பல மூட்டைகளும், சிப்பங்களும் இறக்கப்பட்டன. அவர்களைக் கரையிலிருந்த அனைவரும் வியப்புடன் நோக்கினர். மார்க்கோ போலோவும் அப்போது அங்கிருந்தார். கலத்தினின்று இறங்கிய தனவந்தர்களே தம்முடைய தந்தையாரும், இளைய தந்தையாருமாவர் என்பதை அறிந்தபோது மார்க்கோ போலோவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் விரைந்தோடி அவர்களைத் தழுவிக்கொண்டார். தாங்கள் நாட்டை விட்டுச் சென்றபோது சின்னஞ்சிறுவராயிருந்தவர் இப்போது உடற்கட்டு மிக்க பதினைந்தாண்டு நிரம்பிய இளங்காளையாய் விளங்குவதைக் கண்டு அவர்கள் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தார்கள்.

மார்க்கோ போலோ தம் தந்தையாரும் சிறிய தந்தையாரும் பிரயாணஞ் செய்த போது, கண்ட புதுமைகளைக் கூறும்படி வேண்டினர். அதற்கு நிக்கோலோ போலோ கூறிய விவரங்கள் வினோதமானவை : “குழந்தாய், நாம் வசிக்கும் வெனிஸ் நகரமே உலகிற்சிறந்த நகரமென நம் நாட்டவர் கருதுகின்றனர். அது பிற நகரங்களைக் கண்டறியாதவர் கூற்று. அவர் கிணற்றுத் தவளையை ஒத்தவர். வனப்பிலும் வளத்திலும் வெனிஸ் நகரைக்காட்டிலும் சிறந்த நகரங்கள் ஆசியாக் கண்டத்தில் உள்ளன. கதே[1] என்று வழங்கும் சீன நாட்டில் யாங்ட்சி கியாங் என்னும் ஆற்றங்கரையில் ஹாங்சோவ்[2] என்னும் நகரம்

1. Cathay 2. Hongchow

இருக்கிறது. அது நமது நகரத்தைப் போலவே கால்வாய்கள் நிறைந்தது. ஆனல், அந்நகரத்தில் குறுக்கிலும் நெடுக்கிலுமாகப் பன்னீராயிரம் பாலங்கள் உள்ளன. அவை அனைத்தும் திண்மை மிக்கவை; கருங்கற்களால் ஆனவை. அந்நகரம் நமது நகரத்தைப்போலப் பதின்மடங்கு பரப்புடையது. அதன் முதன்மையான தெரு ஒன்று இருநூறடி அகலமுள்ளது. அதன் இரு புறங்களிலும் அரண்மனைகளும், கோவில்களும், வீடுகளும், கடைகளும், தோட்டங்களும் காட்சி அளிக்கின்றன. அந்நகரின் கடைகளில் பட்டுத் துணியும், நறுமணப் பொருள்களும், முத்து, இரத்தினம் முதலியவையும் விற்பனைக்காகக் குவியல் குவியல்களாகக் காணப்படுகின்றன. விலை மதிக்க முடியாத அணிகலன்களைப் பூட்டிக் கொண்டு, பட்டாடைகளை அணிந்துகொண்டு, ஆடவரும் மகளிரும் அக்கடைகளுக்குத் திரள் திரளாக வந்து பொருள்களை வாங்குவது கண் கவர் காட்சியாகும்.'' என்று நிக்கோலோ போலோ கூறி முடித்தார்.

இச் செய்திகளைக் கேட்ட மார்க்கோ போலோவும், பிறரும் ஆச்சரியமுற்றனர். அன்றியும், அவர்கள் போலோ சகோதரர்கள் சீன நாட்டுக்குச் செல்ல நேர்ந்த காரணத்தை அறிய விரும்பினர்கள். அவர்கள் விருப்பத்திற்கிணங்கி நிக்கோலோ போலோ, "நாங்கள் வெனிஸ் நகரத்தை விட்டுப் பாரசீகக் காட்டின் வழியே பொக்காரா[1] என்னும் நகரை அடைந்தோம். அங்குச் சீனப் பேரரசர்

1. Bokhara

குப்ளே கான்[1] தமது தலைநகராக்கிக்கொண்டிருந்த பீக்கிங்[2] நகரத்துத் தூதர்களைச் சந்தித்தோம். அவர்கள் எங்களைத் தங்கள் நாட்டிற்கு வரவேண்டும் என்றும், தங்கள் பேரரசரைக் காண வேண்டும் என்றும் வற்புறுத்தி அழைத்துச் சென்றார்கள். நாங்கள் அவர்கள் விருப்பத்திற்கிணங்கிச் சீன நாட்டை அடைந்தோம். பீக்கிங் நகரில் சீனப் பேரரசர் குப்ளே கானுடைய பேட்டி எங்களுக்குக் கிடைத்தது. அவர் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார்; நமது நாட்டைப் பற்றியும், நம் நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும், நமது சமயத்தைப் பற்றியும் விவரமாகக் கூறும்படி கேட்டார். எங்கள் பணிவு மிக்க மொழிகளையும், நாங்கள் சபையில் நடந்து கொண்ட நல்ல முறைகளையும் கண்ட குப்ளேகான், நம் நாட்டுக் குருமார்களைக்கொண்டு தம் நாட்டுக் குடிகளைச் சீர்திருத்த நிச்சயித்துள்ளார். ஆதலால், நூறு குருமார்களைத் தமது நாட்டுக்கு அனுப்பி உதவ வேண்டுமென்று போப்பாண்டவருக்கு[3] ஒரு விண்ணப்பமெழுதி எங்களிடமீந்து எங்களைப் பிரயாணப்படுத்தி அனுப்பினர். நாங்கள் போப்பாண்டவரைக் கண்டு, கானுடைய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, நூறு குருமார்களோடு விரைவில் புறப்பட 'நிச்சயித்துள்ளோம். இம்முறை நாங்கள் புறப்பட்டுச் செல்லும்போது மார்க்கோ போலோவையும் உடனழைத்துச் செல்ல முடிவு செய்துள்ளோம்,'' என்று கூறி முடித்தார்.

1. Kublai Khan 2. Peking 3. Pope

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) முற்காலப் பிரயாணத்துக்கும், இக்காலப் பிரயாணத்துக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை ?

(ஆ) முற்காலத்தில் எக்காரணங்களால் பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன ?

(இ) வெனிஸ் நகரத்தின் சிறப்புக்கள் யாவை ?

(ஈ) மார்க்கோ போலோ எந்த நூற்றுண்டில் வாழ்ந்தவர் ? அவர் தந்தையார் பெயர் யாது ?

(உ) மார்க்கோ போலோ தம் இளமையை எவ்வாறு கழித்தார் ?

(ஊ) ஹாங்சோவ் நகரின் சிறப்பைக் கூறுக.

(எ) நிக்கோலோ போலோ தம் சீன யாத்திரையைப் பற்றிக் கூறியன யாவை ?

(ஏ) போலோ சகோதரர்களை ஆதரித்த சீனப் பேரரசர் யார் ? அவருடைய சிறப்பியல்புகள் யாவை ?

**2. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுதுக :**

(அ) அக்காலத்தில் பிரயாணத்தை —— அடைந்த —— எண்ணற்றவை. [துணிந்தவர், செய்தவர், மேற்கொண்டவர், நன்மைகள், துன்பங்கள்]

(ஆ) அதன்கண் புழுதி—தெருக்களும், அவற்றில்—செய்யும் வண்டிகளும் காணப்படா.

[கிளம்பிய, மலிந்த, படிந்த, அடையாளம், ஆரவாரம், கூச்சல்]

**3. எதிர்ச்சொற்கள் கூறுக :**

மாட்சி, துன்பம், வன்மை, புகழ்ச்சி, பரந்த, இளைஞர், சிலர்.

**4. பொருள் எழுதுக :**

மாட்சி, இன்னல், விலங்கு, நாட்டம், தூண்டப்பெற்று, மலிந்தது, தோணி, திரள், நிமித்தம், பைசாசம், சிப்பம், காளை, அணிகலன், விண்ணப்பம்.

## 7. புலவர் தூது

ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் தமிழ்நாடு மூன்று பெரிய இராச்சியங்களாகப் பிரிந்திருந்தது. அவை சேரநாடு, சோழநாடு பாண்டியநாடு என்பவை. அவற்றையாண்ட அரசர்கள் முறையே சேரர், சோழர், பாண்டியர் ஆவர். அவர்களை மூவேந்தரென்றும், முடியுடை மன்னர் மூவர் என்றும் கூறுவர். அக்காலத்தில் அம் மூவரேயன்றி, வேறு பல சிற்றரசர்களும் தமிழ் நாட்டின் சிறு சிறு பகுதிகளை ஆண்டுவந்தார்கள். அவர்களுக்குக் 'குறுநில மன்னர்கள்' என்னும் பெயர் வழங்கிவந்தது.

அக் குறுநில மன்னர்களுள் ஒருவர் தொண்டைமான் இளந்திரையர் என்பவர். அவர் சோழ மன்னர் ஒருவருக்கும் பீலி வளை என்ற நாககன்னிகைக்கும் பிறந்தவர். பீலி வளையின் விருப்பத்தின்படி சோழ மன்னர் தம் நாட்டின் ஒரு பகுதியை இளந்திரையருக்கு ஈந்தார். அப் பகுதிக்குத் தொண்டை நாடு என்பது பெயர். இளந்திரையர் காஞ்சீபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டு, தொண்டை நாட்டை ஆண்டு வந்தார்.

தொண்டைமான் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்தவர் ; முடியுடை மன்னர் மூவரோடு சேர்த்து எண்ணப்படும் பெருமையும் வீரமும் நிறைந்தவர் ; தமிழ்ப் புலமை நிரம்பியவர் ; செந்தமிழ்ச் செய்யுட்கள் பலவற்றை அவர் இயற்றியுள்ளார். அவர் அதியமான் என்ற மற்ெருரு சிற்றரசர்பால் எக் காரணத்தாலோ பகை கொண்டார்.

அதியமான் என்பவர் கடையெழு வள்ளல் களுள் ஒருவர். தம்மை அடைந்த இரவலர்க்கு வரையாது பொருள் வழங்குபவர் வள்ளல் எனப் படுவர். அதியமான் ஒரு வகை வீரர்களாகிய மழவர்களுக்குத் தலைவர்; சேரமானுக்கு உறவினர்; ஒரு தருணத்தில் ஏழு அரசர்களைப் போரில் வென்றவர். தகடூர் என்பது அவர் தலைநகரம். அஃது இக்காலத்துள்ள மைசூர் இராச்சியத்தில் இருப்பதாகக் கூறுவர். அதியமான் ஊரைச்சார்ந்த ஒரு மலை உண்டு. அதற்குக் குதிரைமலை என்பது பெயர். அதியமானுக்கு அதிகமான் நெடுமா னஞ்சி, நெடுமானஞ்சி, எழினி என்னும் வேறு பெயர்களும் வழங்கிவந்தன.

அதியமான் புலவர்களைப் போற்றி ஆதரிக்கும் பண்புடையவர். ஔவையார், பரணர் முதலிய பெரும்புலவர்கள் அதியமானைப் புகழ்ந்து பாடி யுள்ளார்கள். ஒருநாள் அதியமான் தமது குதிரை மலையின் மீதிருந்த இயற்கைக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு வந்தார்; அப்போது மலையின் ஒரு பிளவில் இருந்த கருநெல்லிமரத்தில் ஒரு கனி இருக்கக் கண்டார். அக்கனியைத் தின்றவர் நெடுநாள் உயிர்வாழ்வர் என்பது அவருக்குத் தெரியும். அவர் தனியே இருந்தமையால், ஆபத் துக்குள்ளாகக் கூடிய இடத்தில் அம்மரம் இருந்த தையும் பொருட்படுத்தாமல், அதில் ஏறி அக்கனி யைப் பறித்தார்.

தாம் பறித்த கருநெல்லிக் கனியைத் தின்று, அதன் பயனை அடைய அதியமான் எண்ணவில்லை. தாம் நீண்டநாள் வாழ்ந்திருப்பதைவிடத் தம்மைப் போன்ற அரசர் பலருக்கு அறிவுரை கூறி நல்வழிப்

படுத்தும் பெருமையுடைய ஔவையார் அதைத் தின்று நீண்ட ஆயுளைப் பெறட்டும் என்று எண்ணியது அவர் மனம். அவரது தந்நலமற்ற தன்மையைப் பாருங்கள்! அவர் விரும்பியபடியே அக்கனியைக் கொண்டுவந்து தம்மரண்மனையில் இருந்த ஔவையாருக்கு அளித்தார். அவரும் அதைத் தின்று அதியமானைப் புகழ்ந்து பாடினர்.

அத்தகைய அதியமானோடு போர்தொடுக்க எண்ணிய தொண்டைமான், பெரியதொரு படையைத் திரட்டினர்; புத்தம்புதிய போர்க்கருவிகள் பலவற்றைச் செய்வித்தார்; அவற்றிற்கு மெருகிட்டு, நெய் பூசி, மலர் மாலையும் மயிற்பீலியும் அணிவித்து, ஆயுதச்சாலையில் அழகுபெற அமைத்தார்; அதியமான் ஒப்பற்ற வீரராதலின், அவரை எதிர்க்கத் தக்க தருணத்தை எதிர்நோக்கி இருந்தார்.

அச்செய்தி அதியமானுக்கு எட்டியது. ஆனல், அதியமான் மனத்தில் அப்போது போர் புரியும் எண்ணம் எழவில்லை. "நாம் தொண்டைமானுடன் போர் தொடுத்தால், வீரர் பலர் வீணில் மடிவர்; நாடு நாசமாகும்; குடிமக்கள் இடர்ப்படுவார்கள். ஆதலால், போர் தொடுக்காமல் இருப்பதே நலம்," என்று அவர் எண்ணினர்; அரும்பெரும் புலவராகிய ஔவையாரை அணுகி, "அம்மையீர்! தொண்டைமானிடம் தூது சென்று போரைத் தடுக்கத் தக்கவர் நீரே. என் பொருட்டும், என்னுடைய குடிகள் பொருட்டும் நீவிர் இதனைச் செய்ய வேண்டுகிறேன்," என்ருர்.

அதியமான்பால் அளவற்ற அன்பு கொண்டிருந்த ஔவையார் அதற்கிசைந்து, உடனே

தகடூரை விட்டுப் புறப்பட்டார்; பல நாட்கள் நடந்து காஞ்சீபுரத்தை அடைந்தார். அருந்தமிழ் மூதாட்டியாராகிய ஔவையாரின் வரவை அறிந்த தொண்டைமான், அவருக்கு நல்வரவு கூறிப் பெரிதும் உபசரித்தார். ஔவையார் நெடுநேரம் தொண்டைமானுடன் பற்பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார்; பின்பு தாம் தூதுவந்த காரியத்தைத் தெரிவித்தார்; தம் இன்னுரைகளால் தம் கருத்தைத் தொண்டைமான் நன்கு உணரும் படிச் செய்தார். அவ்வுரைகளைக் கேட்ட தொண்டை மானுக்குப் போரில் இருந்த விருப்பம் விரைவில் மாறிவிட்டது.

ஆயினும், தம் ஆயுத பலத்தை ஔவையார் அறிந்து சென்று, அதியமானுக்கு அறிவிக்க வேண்டும் என்னும் அவா தொண்டைமான் உள்ளத்தில் தோன்றியது. ஆகவே, அதற்கு முன்னர் ஔவையார் தம் அரண்மனைக்கு வந்த தில்லையாதலால், அதனை அவருக்குக் காட்டுவது போல அழைத்துச் சென்றார்; அரண்மனையின் பல பகுதிகளையும் காட்டிக்கொண்டே படைக்கலக் கொட்டிலுள் நுழைந்தார்; அங்கிருந்த படைக் கலங்களை ஔவையாருக்குக் காட்டி நின்றார். அவற்றைக் கண்ட ஔவையார், தொண்டைமான் கருத்தை அறிந்தார்; அதியமான் வீரத்தை அவர் நன்குணரும்படி செய்ய நிச்சயித்தார்.

"காஞ்சீபுர வேந்தரே! உமது அரண்மனையின் வன்மையையும், படைக்கலங்களின் பெருமையை யும் என்னென்றுரைப்பேன்! ஆ! புத்தம்புதிய படைக்கலங்கள்! எவ்வளவு அழகாகச் செய்யப் பட்டுள்ளன! இவற்றின் கைப்பிடிகள் எவ்வளவு

அழகாயுள்ளன! ஒவ்வொன்றும் மெருகிடப்பட்டு மின்னுகின்றதே! நெய் பூசப்பெற்ற இவை பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பெற்றல்லவா காட்சி யளிக்கின்றன! தொண்டைநாட்டு மன்னரே! உம் முடைய படைக்கலங்களின் பெருமையை எவ்வாறு புகழ்வேன்! இவற்றை நோக்க அதியமானுடைய ஆயுதங்கள் எம்மாத்திரம்! அவை பகைவரைக் குத்திக்குத்தி நுனி மழுங்கியும், அடி முரிந்தும், அலகு கைப்பிடி உடைந்தும், இரத்தக்கறை நிறைந்தும் கொல்லன் கொட்டிலிற் கிடக்கின்றன. அவற்றிற்கு இவ்வளவு அழகும் பெருமையும் எங் ஙனம் அமையும்?'' என்று கூறினர் ஔவையார்.

ஔவையார் கூறிய சொற்களின் ஆழ்ந்த பொருளைத் தொண்டைமான் அறிந்தார்; தமது படைக்கலங்களைப் புகழ்வது போல இகழ்ந்தும், அதியமான் படைக்கலங்களை இகழ்வது போலப் புகழ்ந்தும் பேசிய ஔவையாரின் அறிவைக் கண்டு வியந்தார். தம்முடைய படைக்கலங்கள் போரில் பயன்படுத்தப்படாமையால் புத்தம்புதிய வையாய்க் காட்சி அளித்தன; அதியமானுடை யவை அடிக்கடி போரில் உபயோகிக்கப்பட்டமை யால் உடைபட்டுக் கொல்லன் உலைக்களத்திற் கிடந்தன. இவ்வளவு நுட்பமாகத் தம்மை இகழ்ந்த ஔவையார்மீது தொன்டைமான் சினம் கொள்ள வில்லை. அதற்கு மாருக, அவருக்கு ஔவையா ரிடம் இருந்த மதிப்பு மேலும் அதிகரித்தது. ஔவையார் மொழிகளுக்கிணங்கித் தொண்டை மான் போரைத் தவிர்த்தான்.

அக்காலப் புலவர்களின் நுட்ப அறிவைக் கவனித்தீர்களா? அதுமட்டுமன்று; தாம் விரும்பி

யதை மன்னனுயிற்றே என்று மறைக்காமல் கூறும் மனவன்மையைக் கவனியுங்கள். அரசர்களுக்கு அறிவு புகட்டும் ஆற்றல் ஔவையாரிடம் மட்டு மன்றி, அக்காலப் புலவர் எல்லாரிடத்தும் இருந்தது என்பதை விளக்கப் பண்டைய நூல் களில் பற்பல செய்திகள் உண்டு.

### பயிற்சி

**1. விடை எழுதுக:**

(அ) தமிழ் நாட்டையாண்ட மூவேந்தர் யாவர்?

(ஆ) குறுநிலமன்னர் என்பார் யார்?

(இ) இளந்திரையர் என்பவர் யார்? அவர் சிறப்புக்கள் யாவை?

(ஈ) அதியமான் யார்? அவர் பெருமைகள் யாவை?

(உ) அதியமானிடம் அன்புகொண்டிருந்த புலவர் யார்?

(ஊ) அவருக்கு அதியமான் செய்த அருஞ்செயல் யாது?

(எ) அதியமான் தொண்டைமானுடன் போர் புரிய ஏன் விரும்பவில்லை?

(ஏ) தொண்டைமானிடம் தூது சென்றவர் யார்?

(ஐ) தொண்டைமானுடைய படைக்கலச் சாலையைக் கண்ட ஔவையார் கூறிய மொழிகள் யாவை?

(ஒ) அவற்றின் உட்பொருள் யாது?

**2. பொருத்தமான வினைமுற்றுக்களைக் கோடிட்ட இடங் களில் முக்காலங்களிலும் அமைத்து எழுதுக:**

(அ) நானும் என் நண்பனும் கோட்டைக்கு—

(ஆ) நானும் நீயும் பந்து—

(இ) நானும், நீயும் மணியும் வேலைகளை—

**3. கட்டுரை வரைக:**

ஔவையார் தூது சென்ற வரலாற்றை உன் சொந்த உரைநடையில் சுருக்கி வரைக.

# 8. தமிழ்நாட்டுச் சிற்பக்கலை

'சிற்பக்கலை' என்பது யாது? மண்ணினுலும், மரத்தாலும், உலோகங்களாலும், பாறைகளாலும் அழகிய உருவங்களைத் தோற்றுவிக்கும் கலையே சிற்பக்கலை என்பது. '**கலை**' என்னும் சொல்லுக்கு '**வித்தை**' என்பது பொருள். இத்தகைய சிற்பக்கலை பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் உன்னத நிலையில் இருந்தது. சிறிது சிறிதாக இது தன்னிலை கெட்டு, இப்போது மறைந்து வருகிறது. சிற்பக்கலையின் சிறப்பைத் தெரிவிக்கும் கோவில்கள் பல தமிழ் நாட்டிலுண்டு. அவற்றுள் **மகாபலிபுரத்தில்** உள்ள கோவில்கள் முதன்மை வாய்ந்தவை.

மகாபலிபுரம் என்பது ஒரு சிற்றூர். இது சென்னை மாகாணத்திலுள்ள செங்கற்பட்டுக்குக் கிழக்கே கடற்கரையோரத்தில் சென்னைக்குத் தெற்கே ஏறத்தாழ முப்பத்தைந்து மைல் தூரத்தில் உள்ளது. இது ஆழ்வார்களால் '**திருக்கடன் மல்லை**' என்று குறிக்கப்படும் ஒரு வைணவத் தலமாகும். ஆங்கிலேயர் இதனை **ஏழு கோவில்கள்**[1] என்னும் பெயராற் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ் நாட்டு வரலாற்றில் இது **மாமல்லபுரம்** என்று வழங்கப்பட்டுள்ளது.

இக்காலத்தில் ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கும் இத்தலம், பண்டைக் காலத்தில் சிறந்ததொரு கப்பல் துறையாய் விளங்கியது. '**கலங்கள் இயங்கும் மல்லை, கடல் மல்லை**' என்று ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த **பூதத்தாழ்**

1. Seven Pagodas

வார் இத் தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதனால், இதன் பழைமை விளங்குகிறது. அன்றியும், அக்காலத்தில் இதற்குக் 'கடன் மல்லை' என்ற பெயர் வழங்கி வந்ததென்பதும், விளங்குகிறது.

இது கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்து வந்த பல்லவ மன்னர்களுடைய துறைமுகப் பட்டினமாய் விளங்கி வந்ததென்பதைச் சரித்திர மூலமாக நாம் அறிகிறோம். அன்றியும், இது தன் பெருமை குன்றியுள்ள இக்காலத்திலும் இதற்குப் பெருமை அளித்து வரும் பஞ்ச பாண்டவ ரதங்கள் என்னும் கற்கோவில்களைக் கட்டுவித்த பல்லவ மன்னரான நரசிம்மவர்மருக்கு வழங்கி வந்த மஹாமல்லர் என்னும் பட்டப்பெயர் காரணமாக மஹாமல்லபுரம் என்னும் பெயரைப் பெற்றதெனச் சரித்திரம் கூறுகிறது.

முற்காலத்தில் சிறந்த துறைமுகப் பட்டினமாய் விளங்கிய மகாபலிபுரம், இக்காலத்தில் ஒரு சிற்றூராகவே இருக்கிறது. ஆயினும், இக்காலத்திலும் யாத்திரிகர்கள் இதை நாடிச் செல்கின்றார்கள். இதற்குக் காரணம், இது தென்னிந்தியச் சிற்பக்கலைக்கு இருப்பிடமாய் விளங்குவதேயாம்.

இவ்வூரிலிருந்து அரை மைல் தூரத்தில் ஐந்து சிறு கோவில்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் தனித்தனி பாறையைக் குடைந்து அமைக்கப் பெற்றது. அவற்றிற்குப் பஞ்ச பாண்டவ ரதங்கள் என்னும் பெயர் வழங்கி வருகிறது. குருகுல வீரர்களாய பாண்டவர்கட்கும், அந்த இரதங்களுக்

கும் தொடர்பேதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஐந்து கோவில்கள் அங்கு இருப்பதால், இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம்.



பாண்டவ ரதங்களுள் மிகப் பெரியதும், சிறந்த வேலைப்பாடமைந்ததும் **யுதிஷ்டிர ரத**மாகும். அது மூன்று நிலைகளை உடையது. அந் நிலைகளின்மீது ஏறிச் செல்லப் படிகளுண்டு. மேலே சென்றால், **பிரமன், திருமால், சிவன், கிருஷ்ணன்** முதலிய கடவுளரின் திருவுருவங்களும், வேறு பல உருவங்களும் கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவரும் வனப்புடன் காணப்படுகின்றன. மற்ற நான்கு கோவில்களுக்கும் **பீமரதம், அருச்சுன ரதம், நகுல ரதம், சகாதேவ ரதம்** என்னும் பெயர்கள் வழங்குகின்றன. அவற்றிற்கு மேல்மாடங்கள் இல்லை. எனினும், அவை வேலைத்

திறன் மிகுதியும் உடையனவாகவே விளங்கு கின்றன. பாண்டவ ரதங்களின் அருகில் யானை, குதிரை, சிங்கம், இடபம் ஆகிய பிராணிகளின் உருவங்கள் காட்சியளிக்கின்றன. அவற்றைத் தொலைவிலிருந்து காண்பவர் உயிருள்ள பிராணி களாகவே மதிப்பர்.

பாண்டவ ரதங்களைவிடப் பேரழகு வாய்ந்தன வாய்க் கருதப்படும் சிற்பங்கள் அவ்வூரில் உள்ள திருமால் கோவிலின் பின்புறமுள்ள பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **அருச்சுனன் தவம் புரியும் காட்சி, கண்ணபிரானுர் கோவர்த்தன மலையைக் குடையாய்த் தாங்கிய காட்சி, மகிஷாசுர வதம், வராகாவதாரம்** ஆகியவை முதன்மையானவை. அவற்றுள் அருச் சுனன் தவம் என்னும் அற்புதச் சிற்பம், இரண்டு பெரிய பாறைகளிற் செதுக்கப்பட்டுள்ளது. அதன் அழகு, வார்த்தைகளால் வருணிக்கத் தக்கதன்று. அருச்சுனன் ஒரு காலைத் தூக்கியும், ஒரு காலை ஊன்றியும் நின்று, இரண்டு கைகளையும் மேலே தூக்கிப் பாசுபதமென்னும் கணையைப் பசுபதி யினிடம் பெறுவதற்காகக் கடுந்தவம் புரிவது போலக் காட்சியளிக்கிறது அச் சிற்பம். ஊண் உறக்கமின்றி இடையருத தவத்தில் ஈடுபட்டு நிற்கும் அவன் உடல், இளைத்து எலும்புகள் தோன்றுமாறு காணப்படுகிறது. அவனைச் சூழ்ந்து தவத்தால் மெலிந்து வாடிய முனிவரும், இன்னிசைக் கருவிகள் ஏந்திய எழில் மிகுந்த கந்தருவரும் நிற்கின்றனர். வில்லும் கணையும் ஏந்திய வேடர் குழுவும், பூதகணமும் தொடர்ந்து வரச் சிவபெருமான் வேட்டுவர்போல அருச்சுனன்

முன்னே நிற்கின்றூர். அவற்றைக் கண்ணுல் கண்டு களிக்க முடியுமேயன்றி வாயால் வருணித்தல் முடியாத காரியம்.

பாய்ந்து செல்வதுபோலக் காணப்படும் சிங்கத்தின்மீதமர்ந்து, எட்டுக் கைகளிலும் பல்வகைப் படைகளைத் தாங்கிப் பகைவனுகிய மகிஷாசுரனேடு துர்க்காதேவி போர்புரிவதுபோலச் செதுக்கப்பட்டுள்ளது ஒரு சிற்பம். அது காண்போருடைய கண்ணேயும், கருத்தையும் ஒருங்கே கவரும் பெருமையுடையது. ஆதிசேடனுடைய முடியின்மீது ஒரு காலே ஊன்றிக்கொண்டு, பூமிதேவியை ஒரு கையால் அணைத்துக்கொண்டு, அமரர்கள் போற்ற நிற்கும் ஆதிவராக மூர்த்தியின் திருவுருவத்தின் அழகை யாரால் வருணிக்க முடியும்! இத்தகைய சிறந்த அமைப்புடன் காணப்படும் எல்லாச் சிற்பங்களைப் பற்றியும் ஒரு புத்தகமாக எழுதலாமேயன்றி, ஒரு பாடமாக எழுதுவது இயலாத செயலாம்.

மகாபலிபுரத்தின் கடற்கரையோரத்தில் ஒரு பண்டைய கோவில் உளது. அதில் ஒரு பகுதியில் சிவலிங்கமும், மற்ருெரு பகுதியில் பள்ளிகொண்டுள்ள திருமாலின் பெரிய சிலேயும் கவனிப்பாரற்ற நிலேயில் இருக்கின்றன. அச் சிவலிங்கம் உருட்சியாயிராமல் பன்னிரண்டு பட்டைகள் உடையதாயும், பாதிக்குமேல் தகர்த்தெறியப்பட்டும் உள்ளது. அக்கடற்கரைக் கோவிலின் மேற்குப் புறத்தில் சிறு கற்களில் செதுக்கப்பட்ட பற்பல உருவங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒரு குரங்கின் உருவம் கண்டு களிக்கத் தக்கது.

அவையன்றி, அவ்வூரின் மேற்புறமுள்ள சிறு

குன்றுகளின்மீது எண்ணிலாச் சிற்பங்கள் இணையற்ற எழிலுடன் காணப்படுகின்றன. அங்குப் பல குகைக்கோவில்களும் உள்ளன. அக்கோவில்களிலும் அழகு நிறைந்த அரிய சிற்பங்கள் காட்சியளிக்கின்றன. அன்றியும், மகாபலிபுரத்தைச் சூழ இங்குமங்குமாகப் பாண்டவ ரதங்களையொத்த பல கோவில்கள் காணப்படுகின்றன. ஆனால், அவையெல்லாம் எக்காரணம் பற்றியோ முற்றுப்பெறாமல் நின்றுவிட்டன.

மகாபலிபுரத்தில் காணப்படும் சிற்பங்கள் நம் தமிழ்நாட்டுப் பண்டைய சிற்பிகளின் கலைத்திறனுக்குச் சான்று பகர்கின்றன. இத்தகைய சிற்பங்கள் மகாபலிபுரத்தில் மட்டுமன்றி, தமிழ்நாடு முழுமையுங் காணப்படுகின்றன. தஞ்சாவூரிலும், திருச்சிராப்பள்ளியிலும், மதுரையிலும் உள்ள கோவில்களிலும் நம் நாட்டில் சிகிரியா டம்புலா முதலிய இடங்களிலும், காணப்படும் சிற்பங்களைப் பற்றி நம் நாட்டவரேயன்றி அயல் நாட்டவரும் பலபடப் புகழ்ந்து எழுதியுள்ளனர். தமிழ்நாட்டில் மிகப் பழைய காலத்திலேயே உன்னத நிலையிலிருந்த இச் சிற்பக்கலை இக்காலத்தில் அழிந்துவிட்டதென்றே கூறவேண்டும். சிற்பக்கலையின் நுட்பங்களை நன்கறிந்த சிற்பிகளை இக்காலத்தில் காணலரிது. இது மிகவும் வருந்தத் தக்கது. சிற்பக்கலை இத்தகைய நிலையை அடைந்ததற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். மலையோரத்திற் கிடக்கும் ஒரு கருங்கல்லைத் தன் சிற்றுளியால் செதுக்கிக் கண்ணையுங் கருத்தையுங் கவரத்தக்க ஓர் உருவமாக மாற்றுந் திறம்பெற்றவன் சிற்பி. அவனை ஒப்பற்ற கலைவாணனாக மதிக்கும் மனப்

13356

பான்மை நம் மக்களிடையே மறைந்துவிட்டது. எனவே, கலையில் வல்ல சிற்பியைக் கல் தச்சன் என்றும், அவனது ஒப்பற்ற தொழில் கல்லுடைக்கும் தொழிலென்றும் இழிந்த நிலையில் வைத்து எண்ணத் தொடங்கினார்கள் நம் மக்கள். அன்றியும், கலைகளை வளர்ப்பதே தங்கருமமென்று எண்ணிய நம் நாட்டு மன்னர்களின் மாசற்ற ஆட்சி மறைந்து, அயலார் ஆட்சி தோன்றியபின் சிற்பக்கலை சீரழிய வேறென்ன வேண்டும்? ஆயினும், நம் முன்னோரின் ஆற்றலுக்கு அறிகுறியாய் நிற்கும் சிற்பங்கள் நம்மிடையே ஒரு புதிய உணர்ச்சி தோன்றுமாறு செய்கின்றன. சீரழிந்த சிற்பக் கலையை மீண்டும் பயின்று, அதனை உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே அவ்வுணர்ச்சியாகும்.

## பயிற்சி

1. விடை எழுதுக:

(அ) 'சிற்பக் கலை' என்பது யாது?

(ஆ) சிறந்த சிற்பங்களைத் தமிழ் நாட்டில் எங்குக் காணலாம்?

(இ) மகாபலிபுரத்துக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

(ஈ) பாண்டவ ரதங்களுட் சிறந்தது எது? ஏன்?

(உ) கடற்கரையில் உள்ள கோவிலின் சிறப்புக்கள் யாவை?

(ஊ) இக்காலத்துச் சிற்பக்கலை சீரழிந்திருப்பதற்கு இரு காரணங்கள் தருக.

2. பொருள் கூறி வாக்கியங்களில் அமைத்தெழுதுக:

துறை - துரை; பாறை - பாரை; திறம் - திரம்; எறி - எரி.

3. பொருள் எழுதுக:

தலம், துறை, யாத்திரிகர், ஊண், இடையறு, கணை, அமர்ந்து, படைகள், கருத்து, அமரர்கள், தகர்த்து.

4. எதிர்ச்சொற்கள் தருக:

சிற்றூர், பழைமை, பெருமை, முற்காலம், இடையறு, எழில்.

# 9. பொன்னும் வெள்ளியும்

பூமியின்மேல் நாம் பலவகைப் பொருள்களைக் காண்கின்றோம். அவைகளில் நமக்குப் பயன்படுவன பல. அவ்வாறே பூமியின் உள்ளும் நமக்குப் பயன்படும் பொருள்கள் உள்ளன. தாதுப்பொருள்கள் பலவற்றையும் நாம் பூமியிலிருந்து எடுக்கின்றோம். பூமியைத் தோண்டி எடுக்கப்படும் பொருள்களுட் சிறந்தவை உலோகங்கள். பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் என்னும் ஐந்தும் பூமியினடியிலிருந்து எடுக்கப்படுகின்றன. அவற்றைப் '**பஞ்சலோகங்கள்**' அல்லது '**ஐம்பொன்**' என்று முன்னோர் கூறினர். பின்னர்ப் பாதரஸம் கிடைத்தது. ஆராய ஆராய, எழுபது உலோகப்பொருள்கள் பூமியிலிருந்து எடுக்கப்பட்டன. உலோகங்களோடு கலந்து காணப்படுவன தாதுப்பொருள்கள்.

உலோகங்கள் வெட்டியெடுக்கப்படும் இடத்திற்குச் '**சுரங்கம்**' என்பது பெயர். அதற்குக் '**கனி**' என்ற பெயரும் உண்டு. உலோகங்கள் தனியாக அகப்படுவதில்லை. அவை மற்றப் பொருள்களுடன் கலந்தே காணப்படும். அவ்வாறு கலந்துள்ள பொருள்களுக்குத் தாதுப்பொருள்கள் என்பது பெயர். சுரங்கங்களில் வேலை செய்பவர் தாதுப்பொருள்களை வெட்டி எடுத்துப் பொடியாக்கிப் பின்பு, சில முறைகளால் உலோகங்களைப் பிரித்தெடுக்கிறார்கள்.

உலோகங்களுள் மிகச் சிறந்தது பொன். இதனைச் செம்பொன் என்றும், வெள்ளியை வெண்பொன் என்றும், இரும்பைக் கரும்பொன் என்றும்

நாம் வழங்குகிறோம். பொன் மஞ்சள் நிறம் வாய்ந்த திண்மையான உலோகம். அது நெகிழ்ச்சியுடையது. ஆதலால், அதை மிக இலேசான தகடுகளாகச் செய்யலாம்; கம்பிகளாக இழுக்கலாம். மற்ற உலோகங்களைக்காட்டிலும் பொன் அருமையாகக் கிடைப்பதால், விலையுயர்ந்தது. பொன்னில் துருப்பிடியாது. பொன் நாணயம் செய்யவும், ஆபரணங்கள் செய்யவும் உபயோகப் படுகிறது. நகைகள் செய்யும் பொழுது பொன்னோடு சிறிது செம்பைக் கலந்து செய்வது வழக்கம். பொன் நாணயங்களிலும் சிறிதளவு செம்பு கலந்திருக்கிறது. சுத்தமான பொன்னுக்குத் **தங்கம், கனகம்** என்ற பெயர்களும் உண்டு. பொன்னின் நேர்த்தியை அளவிட்டுச் சொல்லும் அளவு, **மாற்று** எனப்படும். தங்கம் பத்தரை மாற்று அளவுள்ளது. தங்கத்திற்குப் பளபளப்பான ஒளியுண்டு. 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல,' என்ற பழமொழியும் உண்டு. **ஆடகம், கிளிச்சிறை, சாம்பூநதம், சாதரூபம்** என்ற நால்வகைப் பொன் உண்டு எனத் தமிழ் நூல்கள் கூறும்.

வெள்ளி சிறிது கெட்டியானது. வெள்ளியில் துருப்பிடியாது. இந்த உலோகம் வெண்மையாயிருத்தலால், வெள்ளி என்னும் பெயர்பெற்றது. சுத்த வெள்ளிக்குச் **சொக்க வெள்ளி** என்பது பெயர். வெள்ளியையும் தகடுகளாகவும், கம்பிகளாகவும் செய்யலாம். நகைகள் செய்யவும் நாணயங்கள் செய்யவும் வெள்ளியும் பயன்படுகின்றது. பொன்னையும் வெள்ளியையும் மிக நுண்ணிய நூலிழைபோன்ற கம்பிகளாக இழுத்

துப் பட்டு நூல்களுடன் கலந்து, ஆடைகளுக்குக் கரைகள் அமைக்கிறார்கள். அவற்றை வெள்ளிச் சரிகை, பொற்சரிகை என வழங்குவர்.

பொன்னையும் வெள்ளியையும் இக்காலத்தில் நாணயங்களாக வழங்குகிறார்கள். இந் நாணயங்கள் வியாபாரத்திற்குப் பெருந்துணை புரிகின்றன. வியாபாரத்திற்கு ஒரே நாணயமும் அதனைச் செய்ய ஒரே உலோகமும் இருத்தல் வேண்டும். அந்நிலையில் எல்லாத் தேசத்தவர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்கது பொன் ஒன்றே.

நம் நாட்டில் பொன், பெண்டிர்க்கு அணிகலன்களாய் அமைந்து விளங்குகிறது. நகைப் பைத்தியம் எக்காலத்திலும் எத்தேசத்திலுமுண்டு. நாகரிகமற்ற காட்டு மனிதரும் பொன்னைக் கட்டியான ஆபரணமாக்கி அணிந்திருந்தனர். நாகரிகம் மிக்க இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி என்னும் நாட்டு மக்களும் இன்றும் பொன்னணி பூணும் ஆசையை விடவில்லை. பொன்னைக்கொண்டு பாத்திரங்கள், நகைகள் செய்வதோடு, விமானங்கள், வாகனங்கள் முதலானவற்றிற்குத் தங்கமுலாமும் பூசுகிறார்கள்.

ஆங்கிலேயரும், பிறரும் ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் குடியேறியது பொன்னின் பொருட்டே. ஆப்பிரிக்காவில் பொற்சுரங்கங்கள் உள்ளன. ஆற்றுப் படுகைகளிலும் அவற்றை அடுத்த கற்பாறைகளிலும் ஒட்டிக்கிடந்த பொன், மக்களுக்கு ஊதியத்தை, வாழ்க்கையை அளித்தது. உலகில் ஆண்டுதோறும் இரண்டு கோடி அவுன்ஸ் பொன் கிடைக்கிறது. ஒரு கோடி அவுன்ஸ் பொன்னுக்குமேல் ஆப்பிரிக்கா நாட்டில் டிரான்ஸ்

வால் பிரதேசத்தில் கிடைக்கிறது. இந்தியாவில் குடகு, மைசூர், வயநாடு என்னும் இடங்களில் பொன் கிடைக்கிறது.



பொன் பூமியின் கீழ் அகப்படுவதன்ரே? பொற்சுரங்கத்தில் வேலே செய்பவர் பூமியில் நாலாயிரம் அடிக்குக் கீழும் செல்வர். மின்சார வண்டியும், விசிறியும் விளக்கும் அவர்களுக்கு மிகவும் பயன்படுவன. கல்லும் மண்ணும் பொற்பொடியுடன் கலந்திருக்கும், பாதரஸத்தைக்கொண்டும், கம்பளியையும், 'பொட்டாஸியம் ஸைஊட்' என்னும் உப்பைக்கொண்டும் பொன்ஊப் பிரித்தெடுக்கிருர்கள். ஒரு வண்டிப் பொற்பொடிக் கற்களிலிருந்து ஓர் அவுன்ஸ் பொன்னே கிடைக்கிறது. அதனுலேதான் பொன் மிகவும் அருமையான உலோகமாயுள்ளது.

## பயிற்சி

1. விடை எழுதுக :

(அ) பூமியில் இருந்து எடுக்கப்படுவன எவை ?

(ஆ) ஐந்து உலோகங்கள் எவை ?

(இ) பொன்னைப்பற்றி நீ அறிவன யாவை ?

(ஈ) தமிழ் நூல்கள் கூறும் நால்வகைப் பொன் யாவை ?

(உ) பொன் எங்கெங்கு கிடைக்கின்றன ?

(ஊ) பொன்னுக்கும் வெள்ளிக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

(எ) பொன் எவற்றுடன் கலந்திருக்கும் ? அதை எவ்வாறு பிரித்தெடுக்கின்றனர் ?

2. கட்டுரை வரைக :

'உலோகங்களின் உபயோகங்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

3. சொன்னபடி செய்க :

உலோகங்கள் வெட்டி எடுக்கப்படும் இடத்திற்குச் சுரங்கம் என்று பெயர். (இவ்வாக்கியத்தைக் கருத்துப் பிறழாமல் வேறு விதமாகக் கூறவும்.)

4. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :

ஆராய ஆராய, பளபளப்பு, துரு, சரிகை.

5. எதிர்ச்சொல் எழுதுக :

தன்மை, நெகிழ்ச்சி, பிரித்து, பெரும்பாலோர்.

6. பொருள் எழுதுக :

தாதுப்பொருள், இலேசான, துரு, பெரும்பாலார், கனி, அணிகலன், நெகிழ்ச்சி, நுண்ணிய.

# 10. மார்க்கோ போலோ–II

சீன நாட்டினின்று தாய்நாட்டுக்குத் திரும்பிய போலோ சகோதரர்கள், இரண்டாண்டுகள் கழித்து மறுபடியும் சீனுவுக்குப் போகப் புறப்பட்டார்கள். அப்போது குப்ளேகான் விரும்பிய வண்ணம் நூறு மதபோதகர்களை அவர்கள் அழைத்துக்கொண்டு புறப்படவில்லை. அவர்களுடன் இரண்டு பேர்களை மட்டுமே போப்பாண்டவரால் அனுப்ப முடிந்தது. அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்ட போலோ சகோதரர்கள், **மார்க்கோ போலோவையும்** தங்களுடன் அழைத்துச் சென்றுர்கள்.

வெனிஸ் நகரத்தினின்று மரக்கலத்தில் புறப்பட்ட அவர்கள் **ஏக்கர்**[1] என்னுமிடம் வரையில் கடலிற்பிரயாணம் செய்தார்கள். அங்கிருந்து **பாக்தாது**[2] பட்டணம் சென்று, அங்குச் சில நாட்கள் தங்கினுர்கள். பாக்தாது என்பது அழகிய பட்டணம். அதன் மக்கள் வான்கலை, மருத்துவக் கலை முதலிய கலைகளில் வல்லவர்களாயிருந்தார்கள். பட்டணத்தைச் சுற்றிப் பேரீந்து மரங்கள் காட்சியளித்தன. சரிகை வேலைப்பாடு நிறைந்த பட்டுடைகள் அங்குத் தயாரிக்கப் பெற்று வந்தன. இவற்றையெல்லாங் கண்டு களித்த போலோக்கள், சில நாட்களுக்குப் பிறகு பாக்தாதை விட்டுப் பாரசீக நாட்டை அடைந்தார்கள். அங்கு மார்க்கோ போலோ நோயுற்றுர். அந்நோய் நீங்க ஓராண்டு கழிந்தது.

1. Acre 2. Bagdad

மார்க்கோ போலோ முற்றிலுங் குணமடைந்த பிறகு அவர்கள் பாரசீகத்தினின்று நீங்கி, பரந்த பாலைநிலத்தின் மூலம் பிரயாணம் செய்தார்கள். அப் பாலைநிலம் உப்புமண் நிறைந்தது. அவர்கள் பல இன்னல்களுக்கிடையே அதைக் கடந்து இறுதியில் இந்துகுஷ்[1] மலையை அடைந்தார்கள்; அங்குப் புல் வெளிகளும், மரம் செறிந்த காடுகளும், நீரூற்றுக்களும் இருக்கக் கண்டு களிப்படைந்தார்கள்.

இந்துகுஷ் மலையையும், **பாமிர்**[2] மேட்டின் சரிவுகளையும் கடந்தபோது போலோக்கள் அடைந்த துன்பங்களைக் கணக்கிட்டுக் கூறமுடியாது. பாமிர் மேட்டிற் சில இடங்களில் விசித்திரமான ஆடுகளைக் கண்டதாக மார்க்கோ போலோ எழுதியுள்ளார். அந்த ஆடுகளின் கொம்புகள் பதினான்கு அங்குலக் கனமும், நாலரையடி நீளமும் இருந்தன என்று அவர் குறித்திருப்பதைப் படிக்கும் யார் தான் வியப்படையாதிருக்கக் கூடும்?

பாமிர் மேட்டைக் கடந்த போலோக்கள், **கோபி**[3]ப் பாலைநிலத்தை அடைந்தார்கள். அது மரங்களற்ற பரந்தவெளி. அங்குச் சில இடங்களில் **முணுமுணுக்கும் மணல்**[4] உண்டு என்றும், அதைப்பற்றி நாடாய்வோர் கூறும் செய்திகள் வெகு விந்தையாய் இருக்கும் என்றும் மார்க்கோ போலோ குறித்துள்ளார். அவரது குறிப்பு வருமாறு:

"கோபிப் பாலைவனத்தில் பிரயாணிகள் பலர் ஒன்று கூடிப் போவது வழக்கம். அப்படிப் போகும்

1. Hindu Kush 2. Pamir 3. Gobi
4. Whispering sand

போது தற்செயலாக ஒரு பிரயாணி கூட்டத்திற்குப் பிந்தி விட்டால், அவரிடம் அங்குள்ள தேவதைகள் அசரீரியாய் இருந்து அவர் கூட்டத்தவர் பேசுவது போலவே பேசும். சில சமயங்களில் சிறிது தூரத்தில் யாரோ பிரயாணிகள் பேசிக்கொண்டு போவது போலக் கேட்கும். தங்கள் கூட்டத்தினின்றும் பிரிய நேர்ந்த பிரயாணிகள் அந்தப் பேச்சைத் தங்கள் கூட்டத்தவரிடையே நிகழ்வதென்று எண்ணி, அது கேட்குந் திசையிற் சென்றுவிடுவார்கள். பொழுது புலர்ந்த போதுதான் அவர்களுக்கு உண்மை வெளியாகும்.''

நற்காலமாகப் போலோக்கள் அத்தகைய துன்பங்களுக்காளாகாமல், சீனநாட்டை அடைந்தார்கள். சீனப் பேரரசர் குப்ளேகான் அவர்களை நன்கு வரவேற்ருர். அவர் மார்க்கோ போலோவைக் கண்டவுடனே, அவருடைய அறிவின் திறமையை அளந்தறிந்தார்; ஆதலால், அவரைத் தமது அரண்மனையிலேயே நிறுத்திக்கொண்டார்; அவருக்குப் படிப்படியாக உயர்ந்த பதவிகளை அளித்தார். இறுதியில் மார்க்கோ போலோ குப்ளேகானுக்குத் தூதுவராயமர்த்தப்பட்டுச் சீனுவின் பல பாகங்களில் பிரயாணம் செய்தார்; அன்றியும், அவர் பர்மா, கொச்சின், சீனு என்னும் தூர நாடுகளுக்கும் அனுப்பப்பட்டார். எங்கே சென்ருலும் மார்க்கோ போலோ தம் கடமையை மிகச் சிறந்த முறையில் செய்து வந்தமையால், அவர் சீனப் பேரரசரின் நன்மதிப்புக்கு உரியவரானுர்.

இங்ஙனம் பல்லாண்டுகள் சீனுவிற் கழிந்தன. அதற்குள் போலோக்கள் அளவற்ற திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு தங்களுடைய தாய்நாட்

டுக்குத் திரும்ப முயன்றுர்கள். ஆனுல், குப்ளே கான் அதற்கு உடன்படவில்லே. அவர்களுக்கு நற் காலமாக ஒரு வாய்ப்புக் கிட்டியது. அக்காலத்தில் பாரசீகத்தை ஆண்ட மன்னர் குப்ளேகானுக்கு நெருங்கிய உறவினர். அவருக்குத் திருமணம் செய்விக்கக் குப்ளேகான் தம் நாட்டினின்றும் ஓர் அழகியை அனுப்பினுர். அம் மணப்பெண்ணுக் குத் துணேசெல்லப் போலோக்கள் அமர்த்தப்பட் டார்கள். ஆதலால், அவர்கள் சீனுவினின்றும் புறப்பட்டுச் சுமத்திரா, தென்னிந்தியா, இலங்கை முதலிய பல இடங்களில் தங்கி, இறுதியில் பார சீகத்தை அடைந்தார்கள். அங்கு மணப்பெண்ணே மாப்பிள்ளேயிடம் ஒப்படைத்து விட்டுத் தம் நாட்டை அடைந்தார்கள்.

அவர்கள் கொண்டுவந்த பொன், வெள்ளி, நவ ரத்தினங்கள் முதலியவற்றைக் கண்டு வெனிஸ் நக ரத்து மக்கள் அடைந்த வியப்பை அளவிட்டுக்கூற இயலாது. அன்றியும், வெனிஸ் மக்கள் போலோக் களின் பிரயாணத்தைப் பற்றிய செய்திகளேயறிய ஆவலோடு வந்து கூடுவார்கள். அவர்கள் ஆச்சரி யத்தில் ஆழும்படி பல செய்திகளே மார்க்கோ போலோ அவர்களுக்குச் சொல்லுவார். சீனுவைப் பற்றி அவர் கூறிய செய்திகளுள் சில வருமாறு :

சீனநாடு மிகப் பரந்தது ; அதன்கண் வெனி ஸைவிடப் பெரிய பல நகரங்கள் உண்டு. அவற் றுள் ஒன்று தலேநகரமான பீக்கிங் என்பது. அங்கேதான் குப்ளேகான் அரண்மனே இருந்தது. அது மிக விசாலமானது ; அதன் சுவர்கள் பொன் தகடுகளும், வெள்ளித் தகடுகளும் வேயப்பெற் றவை. அவற்றின்மீது விலங்குகளின் உருவங்

களும், பறவைகளின் உருவங்களும் சித்திரிக்கப் பட்டிருக்கும். பீக்கிங் நகரத்து வாணிகத்தின் பெருமையை வருணிக்க முடியாது. அங்குக் காணப்படும் பட்டாடைகளை அளவிட முடியாது. அக்காலத்திலேயே சீனுவில், இப்போதிருப்பது போலவே நோட்டுப் பணம் செலாவணியிலிருந் தது. சீனு, ஜோதிடர்கட்கும், மாந்திரீகர்கட்கும் பெயர்பெற்றது. மன்னரிடம் பதினுயிரம் மாசற்ற வெண்குதிரைகள் இருந்தன என்று மார்க்கோ போலோ கூறுகிருர்.

மார்க்கோ போலோ 1327-ஆம் ஆண்டில் மரணமடைந்தார் என்று தெரிகிறது. எனவே, அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே ஐரோப்பாவி லிருந்து ஆசியாவின் கீழ்க்கரைக்கு நிலமார்க்கமா கப் பிரயாணம் செய்த பெருமை மார்க்கோ போலோவுக்கு உரியது. அன்றியும், கீழ்நாட்டின் அக்காலச் சிறப்புக்களை மேல்நாட்டவருக்கு எடுத் துரைத்த பெருமையும் அவருடையதே. இதனுல், மேல்நாடுகட்கும் கீழ்நாடுகட்கும் தொடர்பு உண் டாயிற்று. இதுவே பிற்காலத்தில் ஐரோப்பியர் கீழ்நாடுகளிற் பரவத் தூண்டுகோலாயிற்று.

## பயிற்சி

1. விடை எழுதுக:

(அ) போலோ சகோதரர்கள் வெனிஸிலிருந்து எதுவரை மரக்கலத்திற் சென்ருர்கள்?

(ஆ) மார்க்கோ போலோ எங்கு நோயுற்ருர்? அவர் சுக மடைய எவ்வளவு காலம் ஆயிற்று?

(இ) இந்துகுஷ் மலையின் இயல்பு எவ்வாறிருந்தது?

(ஈ) பாமிர் பீடபூமியில் எவ்வகை ஆடுகள் காணப்பட்டன?

(உ) 'முணுமுணுக்கும் மணல்' என்பது யாது?

(ஊ) மார்க்கோ போலோ குப்ளேகானால் அடைந்த நன்மைகள் யாவை?

(எ) போலோக்கள் தங்கள் நாடு திரும்புவதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் யாது?

(ஏ) மார்க்கோ போலோ சீனாவைப்பற்றிக் கூறியவை யாவை?

(ஐ) மார்க்கோ போலோவின் பிரயாணத்தால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

**2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்து எழுதுக:—**

(அ) அவர்களுடன் இரண்டு பேரை —— போப்பு அனுப்பினார். [கூட, மட்டும், உடன்]

(ஆ) இக்காட்சிகளை —— —— போலோக்கள் அங்குச் சில நாட்கள் தங்கினார்கள். [கேட்டு, சொல்லி, கண்டு, விரும்பிய, மகிழ்ந்த]

(இ) பாமிர் மேட்டை —— கோபிப் பாலை நிலத்தை ——. [சென்ற, சேர்ந்த, கடந்த, கண்டார்கள், சேர்ந்தார்கள், அடைந்தார்கள்.]

**3. கீழ் வருவனவற்றுக்குத் தகுந்த தரிப்புக் குறிகள் இடுக:**

(அ) மார்க்கோ போலோ கூறியதாவது சக்கரவர்த்தியாரே நாங்கள் இங்கு வந்து பல நாட்களாயின எங்கள் ஊருக்குப் போக அன்புகூர்ந்து அனுமதியளிக்க வேண்டும்

(ஆ) நிக்கோலோ போலோ மேபியோ போலோ மார்க்கோ போலோ என்னும் மூவரும் அரசரைப் பார்த்து கான் அவர்களே நீங்கள் புரிந்த உதவிக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினர்

**4. பொருள் கூறுக:**

வான்கலை, மருத்துவக்கலை, பரந்த, வியப்பு, அசரீரி, புலர்ந்த, தூதுவர், வாய்ப்பு, ஆவல், வேயப்பெற்று, செலாவணி.



# 11. கண்ணகி வழக்குரைத்தல்

[நாடகம்]

**காட்சி—1**

நடிகர் : பாண்டிமாதேவி, தோழியர்

இடம் : பாண்டிமாதேவியின் அந்தப்புரம்

காலம் : முற்பகல்

[பாண்டிமாதேவி ஒரு பீடத்தில் அமர்ந்திருக்கின்றாள். தோழியர் அருகில் அமர்ந்துள்ளனர்.]

ஒரு தோழி : தேவியரே! மன்னிக்கவேண்டும். உங்கள் அழகிய முகம் என்றும் போல இல்லை இன்று ; சிறிது வாட்டமுற்றிருக்கின்றது ;

பொலிவிழந்து காணப்படுகின்றது. காரணம் யாதோ? உடல் நலம் இன்மையால் அங்ஙனம் உளதோ? தெரிவித்தால், உடனே ஆவன செய்யலாமே!

பாண்டிமாதேவி: பாங்கி! நீ கூறுவது உண்மையே. ஆனால், உடலில் நோய் ஒன்றுமில்லை; மனந்தான் நலிவடைந்துளது.

தோழி: கோப்பெருந்தேவியீர்! வளம் கொழிக்கும் வையை நாட்டுக்கிறைவியரே! மீனாட்சி சுந்தரர் அருளால் எல்லாச் செல்வங்களையும் பெற்று விளங்கும் உங்கள் மனம் நலிவடையக் காரணம் யாதோ? விருப்பமிருப்பின் அடியாள்மீது அன்பு கூர்ந்து அதனை வெளியிடுங்கள். இன்றே—இல்லை—இப்போதே அதனை அகற்றற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

பா-தேவி: உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டிய இரகசியம் ஒன்றுமில்லை. இன்று விடியற்காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். கடைசிச் சாமத்திற் காணும் கனவு, உடனே பலிக்கும் என்று கனாநூல் வல்லார் கூறக் கேட்டுள்ளேன். அதனாற்றான் என் மனம் கவல்கின்றது.

தோழி: பாண்டிமாதேவியீர்! நீங்கள் கூறுவது உண்மையே. ஆயினும், ஆண்டவன் அருள் பெற்றவர்களிடத்தில் 'நாளென் செயும்? வினைதான் என் செயும்? நாடி வந்த கோள் என் செயும்?' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க, இத்தீக்கனவு யாது செய்ய வல்லது? அக்கனவு இன்னதென விவரிக்கலாமன்றோ?

**பா - தேவி :** பாங்கி, விவரிக்கலாம். அதை நினைக்குந்தோறும் மனம் வேதனையுறுகின்றது! விவரிக்கவும் வாய் நடுக்குறுகின்றது! ஆயினும், கூறுவேன், கேள்: நான் கண்ட கனவுகள் பல. ஒன்றில் செங்கோலும் வெண்குடையும் நிலத்து வீழ்ந்தன; ஆசார வாயில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது. ஒரு கனவில் எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன; சூரியனை விழுங்கக்கூடிய இருள் உண்டாயிற்று. மற்ருெரு கனவில் இரவில் இந்திரவில் இட்டிருந்தது; பகலில் விண்மீன்கள் விழுந்தன. ஆதலால் வருவதோர் உற்பாதம் உண்டு. இவற்றை மன்னர்க்கு உரைப்போம் வருக.

**தோழி :** அங்ஙனமே செய்வோம். ஆரடியங்கே! நம் கோப்பெருந்தேவியார் அரசர் அவைக்குச் செல்கின்ருர். அதிவிரைவில் அட்டமங்கலங்கள் ஏந்தி வாருங்கள்.

**ஏவல் மகளிர் :** இதோ வந்துவிட்டோம் அம்மணி.

[திரை விழுதல்]

## காட்சி—2

**நடிகர் :** பாண்டியன் நெடுஞ்செழியன், கோப்பெருந்தேவி, கண்ணகி, மந்திரிகள், பிரதானிகள், வாயிற் காவலன், ஏவல் மகளிர் முதலியவர்.

**இடம் :** பாண்டியன் அவைக்களம்

**காலம் :** முற்பகல்

[பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையில் அமர்ந்திருக்கின்றான். மந்திரிமார், பிரதானிகள் அவையில் அமர்ந்திருக்கின்றனர். பாண்டிமாதேவி சபையை நோக்கி வருகின்றாள். அவளை ஏவல்மகளிர் அட்டமங்கலங்களை ஏந்திக்கொண்டு சூழ்ந்து வருகின்றனர்.]

**ஏவல் மகளிர் :** பாண்டியரின் பெருந்தேவி வாழ்க! கோப்பெருந் தேவியார் வாழ்க!

[பாண்டிமாதேவி அரசன் அருகில் வந்து வணங்குகின்றாள்.]

**நெடுஞ்செழியன் :** தேவி! மீனாட்சிசுந்தரர் அருளால் மங்களம் உண்டாகட்டும்! (தன் அரியணையின் ஒரு புறத்தைச் சுட்டி) இங்கு அமர்க. திடீரென்று நம் அவையின்கண் வரக் காரணம் யாதோ? ஏன் உன் முகம் வாடியிருக்கின்றது? உடல் நலமின்றோ? பிற காரணம் யாதேனுமுண்டோ?

**கோப்பெருந்தேவி :** நாதரே! அடியாள் இன்று விடியற்காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். அது முதல் என் உள்ளம் நடுங்காநின்றது. நம் செங்கோலும், வெண்கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன! ஆசார வாயிலில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது!

**நெடுஞ்செழியன் :** ஆ! என்ன! செங்கோலும் குடையும் நிலத்தில் வீழ்ந்தனவா! அமைச்சர் பெருமக்களே, கேட்டீர்களா கோப்பெருந் தேவி கூறியதை!

[அத்தருணத்தில் அவைக்கு வெளியே நின்ற வாயிற் காவலனைக் கண்ணகி அணுகி,]

**கண்ணகி :** வாயிலோயே! வாயிலோயே! அற நெறி மறந்த அரசனின் வாயிலோயே! 'கணவனை இழந்தாள் ஒருத்தி, கையிற் சிலம்பு பொன்று ஏந்தி வந்து வாயிலில் காத்திருக்கின்ருள்,' என்று நீதி கெட்ட நெடுஞ்செழியனுக்கு அறிவிப்பாயாக!

**காவலன் :** (அரசனை அணுகி) அரசர் பெருமானே! வாயிலில் வந்திருக்கின்ருள் ஒருத்தி; அவள் எருமைக்கடாவை வாகனமாகக் கொண்ட கொற்றவையும் அல்லள்; பிடாரியும் அல்லள்; பத்திரகாளியும் அல்லள். அவள் கண்கள் கோபக்கனலைக் கக்குகின்றன. கணவனை இழந்தவளாம்; கையிற் சிலம்பொன்று ஏந்தியுள்ளாள்.

**நெடுஞ்செழியன் :** அவள் வருக; அவளை விரைவில் உள் விடுக.

[கண்ணகி சபையில் வந்து மன்னன்முன் நிற்கின்ருள்.]

**நெடுஞ்செழியன் :** பெண்ணே, ஏன் கண்ணீர் சொரிகின்றனை? நீ யார்?

**கண்ணகி :** நான் புகார் நகரில் வாழ்வேன். அவ்வூர்ப் பெருங்குடி வணிகர் **மாசாத்துவான்** என்பவரின் புதல்வர் கோவலருக்கு மனைவியான். அவர் ஊழ்வினையால் உமது நகரில்

வந்து, என் காற்சிலம்பொன்றை விலைப் படுத்த விரும்பி, உம்மாற் கொலையுண்டார்; என் பெயர் கண்ணகி.

**நெடுஞ்செழியன் :** நன்று! கள்வனைக் கொல்லுதல் நீதிதானே?

**கண்ணகி :** தீரக் கேட்டறியாமல் கொலைக் கட்டளையிட்டுக் கோவலரைக் கொன்றமையால், உமது நீதி முறைமை கெடுவதாயிற்று; அதனைக் காட்டுவேன். என் சிலம்பின் அரி மாணிக்கம்.

**நெடுஞ்செழியன் :** என் தேவியுடைய சிலம்பின் பரல் முத்தே.

[உடனே இரண்டு சிலம்புகளும் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. கண்ணகி தன் காற்சிலம்பை எடுத்துத் தரையின் மீது வீசி எறிகிறுள். அது உடைகிறது. அதனுள் இருந்தவை அரி மாணிக்கம் என்பதை அரசன் காண்கின்றான்.]

ஆ! என்னே என் மதி! என்னே என் முறை! அந்தோ! பொற்கொல்லன் பொய்யுரை கேட்ட யானோ அரசன்! யானே கள்வன்! என் அரு மரபு என்னால் பழியுற்றதே! என் ஆயுள் கெடுவதாக!

[அரசன் அரியணையிற் சாய்ந்து மரணமடைகின்றான்.]

[திரை விழுதல்]

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) அரசியின் முகம் பொலிவிழந்ததற்குக் காரணம் என்ன ?

(ஆ) பாண்டிமாதேவி கண்ட தீக்கனவுகள் யாவை ?

(இ) கண்ணகி வாயிற்காவலனிடம் யாது கூறினாள் ?

(ஈ) காவலன் கண்ணகியை எவ்வாறு வருணிக்கிறான் ?

(உ) பாண்டியன், "நீ யார் ?" என்று கேட்டதற்குக் கண்ணகி கூறிய விடை யாது ?

(ஊ) கண்ணகி தன் வழக்கை எவ்வாறு வென்றாள் ?

(எ) தான் நீதி தவறிவிட்டதை அறிந்த மன்னன் கூறியது என்ன ?

(ஏ) இப்பாடத்திலிருந்து நீ கற்றுக்கொள்ளும் கற்பனைகள் யாவை ?

**2. கட்டுரை எழுதுக :**

இக்காட்சிகளில் அடங்கிய கதையை உன் சொந்த உரை நடையில் எழுதுக.

**3. கீழ் வருவனவற்றிற்குத் தகுந்த தரிப்புக் குறிகள் இடுக :**

பாண்டிமாதேவியீர் நீங்கள் கூறுவது உண்மையே ஆயினும் ஆண்டவன் அருள் பெற்றவர்களிடத்தில் நாளென் செய்யும் வினைதான் என் செய்யும் நாடிவந்த கோள்தான் என் செய்யும் என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க இத் தீக்கனவு யாது செய்ய வல்லது அக்கனவு இன்னதென விவரிக்கலாமன்றோ.

**4. பொருள் எழுதுக :**

பொற்கொல்லன், புகார்நகர், ஊழ்வினை, கொற்றவை, விண்மீன்.

# 12. மானம் காத்த மன்னன்

மக்களுக்கு மானமே சிறந்தது. மானம் என்பது ஒருவன் தனது நிலையில் தாழ்ந்துவிடாமலிருப்பதும், தெய்வ வசத்தால் தாழ்வு வந்தால் உயிர் வாழாமலிருப்பதும் ஆகும். 'மானம் பட வரின் வாழாமை முன்னினிதே,' என்றார் ஒரு புலவர். 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்,' என்றார் திருவள்ளுவர். மானில் ஒரு வகையான கவரிமான், தன் உடலிலுள்ள மயிரை இழந்தால், உயிரை விட்டுவிடுமாம். அத்தகையோர் மானமே அழியின் உயிர் விட்டு விடுவர். இதையே திருவள்ளுவரும் தம் திருக்குறளில் '**மானம்**' என்னும் ஓர் அதிகாரமாக அமைத்துப் பத்துக் குறட்பாக்களில் கூறியுள்ளார்.

தமிழகத்தைச் **சேர, சோழ, பாண்டியர்** என்னும் மூவேந்தர் முன்பு ஆண்டனர். ஒருகால் சேர நாட்டில் **சேரமான் கணைக்காலிரும்பொறை** என்னும் சேர வேந்தன் ஒருவன் இருந்தான். அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; வீரத்தில் மிகுந்தவன்; சிறந்த தமிழறிவும் உடையவன்; ஆதலால், தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தான். அவன் அவைக்களத்தில் **பொய்கையார்** என்ற சிறந்த புலவர் இருந்தார். பொய்கையார் **கணைக் கால் இரும்பொறைக்கு** ஆசிரியரும் ஆவர்.

சேரமான் கணைக்காலிரும்பொறை மானமே உயிர் என மதிக்கும் தன்மையுடையவன்; பல அரசர்களோடு போர்புரிந்து வெற்றிபெற்றவன். அவன் பொய்கையாரிடம் பாடம் கேட்டும், அள

வளாவியும் பேரறிஞனாய் விளங்கினான். அவனுக்குச் செய்யுள் இயற்றுவதிலும் நல்ல பயிற்சியுண்டு. பொய்கையாரும் கணைக்காலிரும்பொறையும் கொண்டிருந்த அன்பிற்கு ஓரளவில்லை.

அக்காலத்தில் சோழநாட்டில் **செங்கணான்** என்னும் சோழன் அரசனாய் இருந்தான். அவனும் வீரன்; தமிழறிவும் வாய்ந்தவன். சேரனுக்கும் சோழனுக்கும் போருண்டாயிற்று. அப்போர், **கழுமலம்** என்னும் இடத்தில் நடந்தது. அப்போரில் சேரனுக்குத் துணையாய் **நன்னன், அத்தி, கங்கன், எருமையூரன்** என்னும் குறுநில மன்னர்கள் வந்தார்கள். சோழன் செங்கணானுக்குப் **பழையன்மூவன்** என்பானைத் தவிர, வேறு துணை யாருமில்லை. போரில் பழையன்மூவனைக் கணைக்காலிரும்பொறை கொன்றுவிட்டான்; அதனோடு நில்லாது, பழையன்மூவன் பல்லைப் பிடுங்கிச் சேரன் தன் தொண்டிநகர்க் கோட்டைக் கதவில் அழுத்தி வைத்தான். இச்செயல் பழையன்மூவனை அவமானப்படுத்தியது போன்றதன்றோ?

பழையன்மூவன் போரிற் கொல்லப்பட்டதையும், இரும்பொறை அவனை அவமானப்படுத்தியதையும் கேட்ட செங்கணான், சீற்றம் மிகக் கொண்டான்; தன் நண்பனுக்கு நேர்ந்த அவமானத்தைத் தனக்கு நேர்ந்ததாகவே எண்ணினான்; போர்க்களம் குறுகினான். பகைவர்மீது சிங்கம்போலப் பாய்ந்தான். கடும்போர் நடந்தது. சேரனுடைய படைவீரர் எதிர்த்துப் போர்புரிய இயலாது ஓட்டமெடுத்தனர். சேரமான் கணைக்கால் இரும்பொறை போரில் சிறை பிடிக்கப்பட்டான். சோழன் சேரனைச் சிறையில் அடைத்தான்.

சேரன் சிறைப்பட்டான் என்பதை அறிந்தார் பொய்கையார்; அவனை விடுவிக்க எண்ணினர். அவர் கழுமலப் போரையும், செங்கணன் வெற்றியையும் சிறப்பித்துக் களவழி நாற்பது என்னும் நூலைப் பாடினர்; அந்நூலை எடுத்துக்கொண்டு சோழன் செங்கணனை அடைந்தார். செங்கணன் புலவரை அன்புடன் வரவேற்று உபசரித்தான். புலவர் தம் நூலைப் படித்து விளக்கினர். செங்கணன் புலவரின் கவிநயம் கண்டு வியந்தான். அவன் புலவரை நோக்கி, "புலவரே, உமக்கு வேண்டுவது யாது? எது கேட்பினும் தருவேம்," என்றான். புலவர், "அரசே! யாம் பொன்னை வேண்டியோ, புகழை வேண்டியோ உம்மைப் புகழவில்லை; எம்மன்னன் கணைக்காலிரும்பொறையைச் சிறையினின்றும் விடுதலை செய்ய வேண்டும்," என்றார்.

உயிரனைய தன் நண்பனை அவமானப்படுத்திய பகைவனையா சிறையினின்றும் விடுவிப்பது! சோழனுக்குத் தன் நண்பனை நினைக்கும்பொழுதெல்லாம் கணைக்காலிரும்பொறையின்மீது ஆறாச் சினம் எழும். ஆயினும், புலவர்க்கு யாது வேண்டினும் தருவதாகக் கூறிய வாக்கினைப் பொய்யாக்கலாமோ? கூடாதல்லவா? ஆதலால், சோழன் இருதலைக் கொள்ளியின் இடைப்பட்ட எறும்பு போலத் தவித்தான். 'சொன்னசொல் தவறலாகாது,' என்பதை நினைக்க நினைக்கச் சோழன் கோபம் தணிந்து வந்தது. அதனால், சோழன் செங்கணன் கணைக்காலிரும்பொறையைச் சிறையினின்றும் விடுதலை செய்தான்; அரசினையும் அளித்தான். புலவர் பொய்கையார் மனம் மிக மகிழ்ந்

தார்; சேரன் கணைக்காலிரும்பொறையோடு சேர நாடு போய்ச் சேர்ந்தார்.

சேரன் தன் நாட்டை அடைந்தும், அவன் மனம் அமைதியை அடையவில்லை. தான் பிறரால் மீட்கப்பட்டு வெளிவந்ததை எண்ணிக் கணைக்காலிரும்பொறை மனம் நொந்தான். அவமானம், இழிவு, வருத்தம் யாவும் ஒன்று சேர்ந்து அவனை வருத்தின. அவன் தனக்கு நேர்ந்த இழிவைப் போக்க எண்ணினன்; 'மானம் இழந்து வாழ்தலினும், போரில் இறப்பது மேலானது!' என்று எண்ணி, பெரும்படை திரட்டிக்கொண்டு, சோழனை எதிர்க்கச் சென்றான். சோழன் போருக்கு அஞ்சுவானே? அவனும் பெரும்படையுடன் வந்து எதிர்த்தான். கடும்போர் நடந்தது. சோழன் வெற்றி பெற்றான். போரில் கணைக்காலிரும்பொறை மீண்டும் சிறை பிடிக்கப்பட்டுச் சிறையில் அடைபட்டான்.

கணைக்காலிரும்பொறை மனம் நொந்து தவித்தான்; மணியை இழந்த நாகம்போல வருந்தினன்; உணவையும் நீரையும் மறந்தான். 'மானம் பட வந்த பின் வாழ்க்கை எதற்கு?' என எண்ணினன்போலும்! அவன் நொந்து வருந்தும் நிலையில் தேற்றுவார் அங்கு யார்? சேரன் களைப்புற்றான். நாவறண்டது; சோர்வு உண்டாயிற்று. சிறை காப்பாளர் நிற்பதைக் கண்டான்; சிறிது நீர் பெற்றுப் பருகிக் களைப்பை ஆற்றிக் கொள்ள எண்ணினன். அவன் காவலருள் ஒருவனை நோக்கி, "நா வறண்டுள்ளது; பருக நீர் கொண்டு வா," என்றான். சிறைப்பட்ட நிலையிலும் அவன் மிடுக்காக மொழிந்தான். அவன் வார்த்தை

களில் பணிவு தோன்றவில்லை. அரசன் அன்றோ அவன்! சிறைக்காவலனுக்கு அவன் அரசனானால் என்ன? அவன் கோபம் கொண்டு சிறிது காலம் தாழ்த்து நீர் கொணர்ந்தனன். நீரைக் கொடுக்கும்பொழுது காவலன் அரசனாயிற்றே என்று பணிவு காட்டவில்லை. அச்செயல் சேரன் நெஞ்



சைப் பிளந்தது. 'சிறைப்பட்டமையால் அன்றோ இந்த இழிவு!' என்று சேரன் எண்ணினான். அவன் அந்நீரைப் பருக மனம் கொள்ளவில்லை. 'நீரைக் குடித்து உயிர் வாழ்தலினும், இழிவு வந்த பின் இறப்பதே நல்லது!' எனத் துணிந்தான்; 'இரும்புச் சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய் போலச் சிறைக்குள் இருந்துகொண்டு நீரைக் குடித்து உயிர்வாழ்தல் வீரர்க்கு அழகுமன்று; ஆண்மையுமன்று,' என்று எண்ணினான்; நீரை

வாங்கிக் கீழே ஊற்றினுன் ; மானமே பெரிது என மதித்து உயிரை விட்டான். மானத்தைக் காக்க உயிரை விடுத்த அவ்வேந்தன், உயிர் விடுமுன் பாடிய பாடல், அவனது புலமையையும் உணர்ச்சி யையும் நன்கு விளக்குகின்றது. அச்செய்யுள் **புறநானூறு** என்னும் சங்கத்தொகை நூலில் உளது.

### பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) 'மானம்' என்பது யாது?

(ஆ) மானம் பற்றி இப்பாடத்திற் கூறப்பட்டுள்ள ஆன்ருேர் வாக்கியங்கள் யாவை?

(இ) பொய்கையார் யார்? அவர் பாடிய நூல் யாது?

(ஈ) சேரன் கணைக்காலிரும்பொறையைப் பற்றி நீ அறிவது என்ன?

(உ) பொய்கையார் சேரமானை எவ்வாறு சிறையினின்றும் விடுவித்தார்.

(ஊ) களவழி நாற்பது எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது?

(எ) 'மானமே பெரிதெனச் சேரன் மதித்தான்'—விளக்குக.

**2. கட்டுரை எழுதுக :**

(அ) சேர சோழ பாண்டியர்களின் தலைநகர்கள், கொடிகள், அவர்கள் நாட்டு ஆறுகள் மலைகள் என்பவற்றைப்பற்றி எழுதுக.

(ஆ) (1) "இருதலைக் கொள்ளியின் இடைப்பட்ட எறும்பு போல" "மணி இழந்த நாகம் போல" இப்பழமொழிகளை விளக்குக (2) இப்பழமொழிகளை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக (3) இவை வந்துள்ள சந்தர்ப்பத்தைக் கூறுக.

**3. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :**

மானம், கானம், பானம், ஒருகால், அவைக்களம், அளவளாவுதல்.

**4. பொருள் எழுதுக :**

மானம், அவைக்களம், உபசரித்தல், தணிதல், அளவளாவுதல், வியத்தல், அவமானம், தேற்றல், சீற்றம், இழிவு, பணிவு, தெய்வவசம்.



## 13. நட்புப்பேறு

பரத கண்டத்தில் உள்ள **தண்டகாரணியம்** என்னும் செறிந்த வனத்தில் **கர்ப்பூரகௌரம்** என்னும் தடாகம் ஒன்றுண்டு. அதில் **மந்தரன்** என்னும் பெயருடைய ஆமை ஒன்று வசித்து வந்தது. அத்தடாகத்தின் கரையிலிருந்த ஓர் ஆலமரத்தில் **இலகுபதனன்** என்னும் ஒரு காக்கை வாழ்ந்து வந்தது. அம்மரத்தின் வேர் களினிடையே ஒரு வளையை அமைத்துக்கொண்டு **இரணியகன்** என்னும் ஓர் எலி தங்கியிருந்தது. ஆலமரத்தின் அருகில் அடர்ந்து வளர்ந்திருந்த புதரொன்றினைச் **சித்திராங்கன்** என்னும் மான் தன் இருப்பிடமாகக் கொண்டு உறைந்து வந்தது.

அந்நான்கும் உபகாரம் செய்கிறவன் மித்திர னென்றும், அபகாரம் பண்ணுகிறவன் சத்துரு வென்றும் அறிந்து, நட்புக்கொண்டு, வாழ்ந்து வந்தன. ஒரு நாள் மேயச்சென்ற சித்திராங்கன் மாலையில் வராமையால், மற்ற மூன்றும் கவலையுள் ஆழ்ந்தன. அன்று இரவெல்லாம் அவை தூங்கவே யில்லை ; 'சித்திராங்கனுக்கு என்ன ஆபத்து நேர்ந் ததோ' என்று சிந்தித்துக்கொண்டும், தத்தம் மனத்துள் தோன்றியவற்றைக் கூறிக்கொண்டும் இரவைக் கழித்தன.

பொழுது புலர்ந்தவுடனே இலகுபதனன் பறந்து சென்று பலவிடங்களையும் பார்த்துக் கொண்டு வருகையில், சித்திராங்கன் ஒரு வேடன் பரப்பி வைத்திருந்த வலையில் அகப்பட்டுக்கொண் டிருந்ததைக் கண்டது; அதனருகிற் சென்று, "மித்திரா, உனக்கு இத்துன்பம் எங்ஙனம் நேரிட் டது?" என்றது. அது கேட்ட சித்திராங்கன், "நண்பா, இப்போது இதைக் கேட்டுப் பயனில்லை. நீ சென்று நம் நண்பன் இரணியகனை விரைவில் அழைத்து வந்தால், வேடன் வருவதற்குள் அவன் என் கட்டையறுத்து என்னை விடுவிப்பான்," என்றது.

அங்ஙனமே காகம் விரைந்து சென்று, தன் நண்பர்களிடம் மானுக்கு நேர்ந்த இடுக்கணைப் பற்றித் தெரிவித்தது. அது கேட்ட எலி,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

என்னும் வாக்குக்கிணங்க, ஒரு சிறிதும் காலம் தாழ்த்தாமல், மானிருந்த இடத்தை அடைந்தது. அதைக் கண்ட மான், தாயைக் கண்ட சேயைப்

போல் அகமகிழ்ந்து, "நண்பா, கணப்பொழுதும் தாமதியாமல் என் கட்டைச் சேதி. வேடன் வந்து விட்டால், நம்மனைவர்க்கும் ஆபத்து நேர்வது திண்ணம்!" என்று கூறியது. இதற்குள்ளாக மந்தரனும் அங்கு வந்து சேர்ந்தது.

இரணியகன் வலையின் கயிறுகளைச் சேதிக்கத் தொடங்கியது. அதற்குள் இலகுபதனன் எலியைப் பார்த்து, "மித்திரா, வேடன் அதோ வருகிறான். ஆகட்டும் சீக்கிரம்!" என்று கூறிற்று. எலியும் தன் முழுப்பலத்தோடு முயன்று, அதிசீக்கிரமாய்ச் சித்திராங்கன் வலையை அறுத்தது. உடனே அவை அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தன. அது கண்ட வேடன், "கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே!" என்று சிந்தித்துக் கொண்டே அவையோடிய திசையை உற்று நோக்கினான்; மற்ற மூன்றும் வெகு தூரம் ஓடி விட்டதையும், மந்தரன் மட்டும் மந்த நடையாய்ப் போய்க்கொண்டிருந்ததையும் கண்டான்; விரைந்தோடி அதனைப் பற்றித் தன் வில்லிற் சேர்த்துக் கட்டிக்கொண்டு, சிறிது மகிழ்ச்சியோடு செல்லலானான்.

மானும், எலியும், காகமும் அது கண்டு திகைத்தன. "துன்பம் நேர்ந்தபோது துக்கித்தல் கூடாது; திடமனத்தோடு அதினின்றும் விடுதலையடைகிறவனே அறிவாளி. ஆதலால், நான் கூறுகிறபடி செய்தால், நம் நண்பனை விடுவிக்கலாம்," என்றது எலி. "உயிரினும் அரிய நண்பனைக் காக்க எது வேண்டுமானாலும் செய்வோம். இப்போது செய்ய வேண்டுவது யாது? சொல்லும்," என்றன காகமும் மானும். "நாம் இப்போது

வேடனுக்கு முன்னே சென்று, வேடன் வரும் வழியிலுள்ள ஏரிக்கரையில், சித்திராங்கன் செத்தவனைப்போலக் கிடக்கும்படிச் செய்யவேண்டும். அவன்மீது இலகுபதனன் இருந்துகொண்டு கொத்துவதுபோல நடிக்க வேண்டும். அதை வேடன் கண்டால், மந்தரனைப் பிணித்துள்ள வில்லைக் கீழே வைத்துவிட்டுச் சித்திராங்கனிடம் போவான். நான் விழிப்பாயிருந்து மந்தரனை விடுவிப்பேன். மந்தரன் தண்ணீரில் இறங்கி விடுவான். வேடன் உங்கள் அருகில் வருவதற்குள் நீங்கள் ஓடிவிடுங்கள்; நானும் ஓடிவிடுகிறேன்,'' என்று கூறியது எலி.

அது கேட்ட மானும் காகமும் மகிழ்ந்தன. பிறகு அம்மூன்றும் தங்கள் ஏற்பாட்டின்படியே செய்து, ஆமையைக் காப்பாற்றின. ஏமாற்றமடைந்த வேடன், வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பும் இழந்தவனைப்போலத் துக்கமடைந்து, ''ஐயோ! கைக்கு வாராத பெரிய இலாபத்தை இச்சித்துக் கைக்கு வந்த சிறிய இலாபத்தையும் இழந்தேனே! யார்க்கும் அதிக ஆசை அதிக நட்டம்; 'கிடைத்த மட்டும் போதும்' என்று நினைக்கிறவனே அறிவாளி;'' என எண்ணிக் கொண்டே தன் வீட்டுக்குச் சென்றான்.

## பயிற்சி

**1. விடை எழுதுக:**

(அ) மந்தரன், இலகுபதனன், இரணியகன், சித்திராங்கன் என்பவை எவற்றின் பெயர்கள்?

(ஆ) சித்திராங்கனுக்கு நேர்ந்த விபத்தென்ன?

(இ) சித்திராங்கன் விடுதலையடைந்த வகை யாது?

(ஈ) மந்தரனுக்கு நேர்ந்த துன்பம் யாது?

(உ) மந்தரன் விடுவிக்கப்பட்டது எவ்வாறு?

(ஊ) மந்தரன் தப்பியபோது வேடன் மனத்தில் உதித்த எண்ணங்கள் யாவை?

2. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதில் வேறு சொற்களை அமைத்து எழுதுக:

(அ) தண்டகாரணியம் என்பது மரம் **செறிந்த** வனம்.

(ஆ) **தடாகத்தின்** கரையில் ஒரு காக்கை **வாழ்ந்து வந்தது.**

(இ) உபகாரம் செய்பவன் **மித்திரன்**; அபகாரம் செய்பவன் **சத்துரு.**

(ஈ) அவை மூன்றும் **கவலையால் நித்திரை** செய்யவில்லை.

3. கட்டுரை வரைக:

(அ) வேடன் வலையில் சிக்கிய சித்திராங்கன் விடுதலை பெற்ற வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

(ஆ) மந்தரனை விடுவிக்க அதன் நண்பர் மூவரும் நடித்த பொய் நாடகத்தைச் சுருக்கி வரைக.

4. பொருள் கூறுக:

செறிந்த, தடாகம், உறைந்தது, நட்பு, மித்திரன், சத்துரு, மகிழ்ந்தன, இச்சித்து.



## 14. கவிமணி

தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழ் நாடு. தமிழ் நாட்டில் வாழ்பவர் ‘தமிழர்’ எனப்படுவர். தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது; இனிமையானது. தமிழ்மொழியில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ‘தொல்காப்பியம்’ என்னும் நூல் உள்ளது. ‘சங்க நூல்கள்’ என்பவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவை.

தமிழ்மொழி காலத்திற்கு ஏற்றுற்போல் வளர்ச்சி அடைந்து சிறப்புற்றது. தமிழகம் காலத்திற்கேற்ற கவிஞர்களைத் தோற்றுவித்துள்ளது. இக்காலத்தில், பல புலவர்கள் தோன்றிக்

காலத்திற்கேற்பத் தமிழ்மொழியை வளப்படுத்தி யுள்ளார்கள். அப்புலவருள் சிலர் சி. சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, சென்னை அரசாங்க அரசவைக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, யோகி சுத்தானந்த பாரதியார், நவாலியூர் சோம சுந்தரப் புலவர், புரட்சிக்கவி பாரதிதாசன் என்பவர்.

குழந்தைகளிடம் அன்பு கொண்டு, குழந்தை களுக்கெனக் கவிகள் பாடியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை யாவர். அவர் பாடிய பாடல் தொகுதி 'மலரும் மாலையும்' என்னும் பெயர் பெறும். அந்நூலை அவர்,

"செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்தநூல் உரியதாய் என்றும் வாழ்கவே."

என்று உரிமையாக்குகிறார். இது, குழந்தை களிடத்தில் கவிமணி எவ்வளவு பேரன்புடையவர் என்பதை விளக்கும்.

தமிழ்நாட்டின் தெற்கெல்லை, 'குமரி முனை.' தமிழ்நாட்டின் தென்பகுதியும், திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்தின் தென்கோடியுமாய் அமைந்தது நாஞ்சில் நாடு என்பது. இந்நாட்டில் சுசீந்திரம் என்னும் சிவத்தலம் அமைந்துள்ளது. சுசீந்தி ரத்தை அடுத்து விளங்குவது தேரூர் என்னும் சிற்றூர். அவ்வூரில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பிறந்தார்.

கவிமணியின் தந்தையார், சிவதாணுப் பிள்ளை; தாயார், ஆதிலட்சுமி யம்மையார். கவி மணி 1876-ஆம் ஆண்டு பிறந்தார். கவிமணியின் தாய்வழிப் பாட்டனாரான மாணிக்க வாசகம்

**பிள்ளை** என்பவர், **காரியந்தாதி** என்னும் பிர பந்தத்தைப் பாடியவராவர். தந்தையார் வழியும் தமிழ்ப் பற்றுடைய குடும்பமே. எனவே, தாயார் வழியிலும், தந்தையார் வழியிலும் தமிழபிமான முண்டு.

தேசிக விநாயகம் பிள்ளை தம் ஊரிலிருந்த ஆரம்பப் பள்ளியில் கல்வி கற்ருர். பின்னர் தம் பத்தாவது வயதில் **கோட்டாறு** என்னும் ஊரி லிருந்த ஆங்கிலக் கலாசாலையில் மாணவராகி, **'மெற்றிக்குலேஷன்'** பரீட்சையில் தேறினுர். கவிமணிக்குப் பத்து வயதான பொழுது அரசியல் அலுவலிலிருந்த தந்தையார் காலமானுர். கவி மணி **எப். ஏ.** வகுப்பில் சேர்ந்தாராயினும், இடை யில் விடுத்துத் திருவனந்தபுரத்து **ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற்** பயின்று, ஆசிரியர் பரிட்சையில் தேர்ச்சி பெற்ருர்.

கவிமணிக்கு இளம்பருவத்திலிருந்தே தமிழ் மொழியில் அளவிலாப் பற்றிருந்தது. அதனுல், அவருக்குத் தமிழை நன்கு கற்கவேண்டும் என்னும் பேரார்வம் உண்டாயிற்று. தேரூர்க்கு அண்மையி லிருப்பது **'வாணன் திட்டு'** என்பது. அங்குத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மடம் ஒன்று உண்டு. அம்மடத்திற்கு அந்நாளில் **சாந்த லிங்கத் தம்பிரான்** என்பவர் தலைவராயிருந்தார். அவர் தமிழ்மொழியைச் சிறக்கக் கற்றவர். அவரிடம் மாணவர் சிலர் தமிழ் கற்று வந்தனர். கவிமணியும் அவரிடம் சென்று தமிழ் கற்று வந் தார். இலக்கிய இலக்கணங்களைக் கவிமணி ஐயம் திரிபறக் கற்ருர்; கவி பாடும் திறனையும் பெற்ருர். ஆசிரியர் விருப்பப்படி கவிமணி அந்நாளில்

'**அழகம்மை ஆசிரிய விருத்தம்**' என்னும் கவிதையைப் பாடினர்; பின்னர், சுசீந்திரத்துப் பெருமான்மீது '**சுசீந்தை மாலை**' என்னும் நூலையும் பாடினர்.

கவிமணி தம் இருபத்தைந்தாம் வயதில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். அவர் முதலில் கோட்டாற்றில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியராய் அமர்ந்தார்; பின்னர் நாகர்கோயில் போதனுமுறைக் கலாசாலையில் ஆசிரியரானர். அவரது தமிழ்ப் புலமையை உணர்ந்து அரசாங்கத்தினர் அவரைத் திருவனந்தபுரப் பெண்கள் கலாசாலைக்குத் தமிழாசிரியராக நியமித்தனர். தமிழாசிரியரான கவிமணி, குழந்தைகளுக்கென அரிய இனிய கவிதைகளை இயற்றலானர். கவிமணி தென்னிந்திய வரலாற்று ஆராய்ச்சியிலும், கல்வெட்டுக்களை ஆராய்வதிலும் வல்லவரானர். அவர் அக்காலத்தில் பல கட்டுரைகளை எழுதினர். அவை பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. பின்னர், கவிமணி பெண்கள் கல்லூரியின் தமிழாசிரியராய் இருந்து, 1931-ஆம் ஆண்டு ஓய்வு பெற்ருர்; அதன்மேல் நாகர்கோயிலுக்கு இரண்டு மைல் வடக்கேயுள்ள **புத்தேரி** என்னும் சிற்றூரில் தங்கி வாழ்ந்து வந்தார்.

கல்லூரிப் படிப்பை விட்டதும், கவிமணி உமையம்மையார் என்பவரை மணந்து, இல்லறம் நடத்துவாராயினர். பல்வேறு குடும்பக் கவலைகளிடையிலும் கவிமணி தமிழ்ப்பணி புரிதலை மறக்கவில்லை. ஓய்வு பெற்ற பின்னர் அவர் தாம் பாடிய கவிதைகளைத் தொகுத்து, '**மலரும் மாலையும்**' என்னும் பெயரால் வெளியிட்டார். '**மலட்**

ஆப் ஏஷியா' என்பது எட்வின் ஆர்நால்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய செய்யுள் நூல். அதனை 'ஆசிய ஜோதி' என்னும் பெயரால் அழகிய செய்யுட்களாக மொழிபெயர்த்தார் கவி மணி. பாரசீகமொழியிலுள்ள உமார் கய்யாம் பாடல்களையும் தமிழ்ச் செய்யுளாகக் கவிமணி பாடியுள்ளார். 'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் நூல் கவிமணியால் இயற்றப்பட்டது. அது நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் குடும்பத் தாய முறையைப் பரிகசிப்பது போன்ற கவிதை நூல். 'காதல் பிறந்த கதை' என்னும் நூல், கீர்த்தனைகளும் பாடல்களும் கொண்டது.

கவிமணியிடம் சிறந்த இயல்புகள் பல உண்டு. பிறரைக் கெஞ்சி நிற்கும் இயல்பு அவரிடம் இல்லை. அவர் அடிமைத் தன்மையை அறவே வெறுத்தவர். 'மானம் அழிய வாழ்தலிழிவு,' என் பது அவருடைய சிறந்த கொள்கை. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினர், 1940-ஆம் ஆண்டு, அவர்க்குக் 'கவிமணி' என்னும் பட்டத் தைச் சூட்டினர். கவிமணி அவா, வெகுளி, ஆடம் பரம் என்பவற்றை முற்றிலும் வெறுத்தவர்; அடக்கம், அமைதி, பணிவு, இன்சொல், எளிமை என்பவற்றை விரும்பி ஏற்றவர். செட்டி நாட் டரசர் ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியா ரவர்கள், தம் மாளிகையில் கவிமணியைப் பாராட்டுதற்கு ஒரு விருந்தளித்தார்; விருந்தின் முடிவில் ஆயிரம் ரூபாய் கொண்ட முடிப்பு ஒன் றையும் பரிசாக அளித்தார். 'முடிப்பு எதற்கு?' என்று முதலில் கேட்ட கவிமணி, பின்னர் அரசர் மனம் வருந்தாமலிருத்தற்காக ஏற்றுக்கொண்டு,

அந்த முடிப்பைக்கொண்டு திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பரிட்சையில் முதல் தரமாகத் தமிழில் தேர்ச்சி பெறும் மாணவர்க்கு ஆண்டுதோறும் பரிசு அளிக்குமாறு ஏற்பாடு செய்தார். இஃது ஒன்றே கவிமணி பொருளிற் பெரு விருப்பு உடையவரல்லர் என்பதைப் புலப்படுத்தும்.

கவிமணி குழந்தை போன்ற களங்கமற்ற தூய மனம் படைத்தவர். அவருள்ளத் தெளிவை அவருடைய பாடல்களிற் காணலாம். கவிமணி, தேசீயக் கவி சி. சுப்பிரமணிய பாரதியாரிடம் அளவிலாப் பற்றுடையவர். பாரதியார் பாடல்களைச் சுவைத்துப் படித்துத் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் கவிமணி என்பதைப் '**பாடிய வாய் தேனூறும் பாரதியார் பாடல்**' என்பதாலும்,

" பாப்பாப் பாட்டிலே—நெஞ்சைப்
பறிகொ டுத்தேனடா !
சாப்பா டேதுக்கடா !—சீனிச்
சர்க்கரை ஏதுக்கடா !"

என்பதாலும் அறியலாம். இத்தகைய பெரும் புலவரது ஆசியைப் பெற்ற பத்திரிகைகளும், தமிழ்க் கழகங்களும், ஆண்டு விழாக்களும் தமிழகத்தில் பல. இப் பெரும்புலவர் முதிர்ந்த வயதுடையவராயினும் படித்துக்கொண்டும், கவிகள் இயற்றிக்கொண்டும் வாழும் பாக்கியத்தைப் பெற்ற தமிழகம், பெறலரும்பேறு பெற்றதேயாகும்! தமிழ்ப் பணியில் தளராத ஊக்கங் கொண்ட கவிமணி அவர்கள் 1954-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) இக்காலப் புலவர்கள் யார்?

(ஆ) மலரும் மாலையும் என்பது யாது?

(இ) தேசிக விநாயகம் பிள்ளை குழந்தைகளிடம் பற்றுள்ளவர் என்பதை நீ எப்படி அறிவாய்?

(ஈ) ஆசிய சோதி என்பது யாது?

(உ) கவிமணியின் இயல்புகளை விளக்குக.

(ஊ) நீ பெரியவனானால் எவ்வாறு தமிழ்ப்பணி புரிவாய்?

**2. குறிப்பிட்டபடி அமைத்தெழுதுக :**

(அ) தமிழகம் காலத்திற்கேற்ற கவிஞர்களைத் தோற்றுவிக்கின்றது.—" கவிகள் " என்று ஆரம்பித்துக் கருத்துப் பிறழாமல் இவ்வாக்கியத்தை மாற்றி எழுதுக.

(ஆ) தமிழ் மிகவும் தொன்மையானது; இனிமையானது.—இதனை ஒரே வாக்கியமாக எழுதுக.

(இ) தமிழ்ப்பற்று, தமிழபிமானம், தமிழார்வம்.—இந்தத் தொடர்களை அமைத்து வாக்கியம் எழுதுக.

**3. பொருள் எழுதுக :**

தொன்மை, பற்று, அபிமானம், ஆய்வது, கல்வெட்டு, வெகுளி, ஆசி, ஐயம்திரிபு அற, கவிதை.

**4. எதிர்ச்சொல் தருக :**

போதனுமுறை, மானம், நியமித்தனர், வெகுளி, சிறுமியர்.

# 15. மின்சாரம்

முற்கால வாழ்க்கை நிலை வேறு; இக்கால நிலை வேறு. இரண்டிற்குமுள்ள வித்தியாசம் மிக அதிகம். அக்காலத்தில் காணாத பல அதிசயங்களும், வாழ்க்கையை எளிதும், இன்பமுமுடைய தாக்குவனவாகிய பல பொருள்களும் இக்காலத்தில் உள்ளன. மக்கள் அறிவு நாளுக்கு நாள் வளர்ச்சியுறுகிறது. மக்கள் அறிவின் துணைகொண்டு ஐம் பெரும்பூதங்களையும் தங்களுக்குத் துணைசெய்யத் தக்கனவாக ஆக்கிக்கொள்ளுகிறார்கள்; அதனால், பல நன்மைகளை அடைகிறார்கள்; புதிது புதிதாகப் பலவற்றைக் கண்டுபிடிக்கிறார்கள். அவை யாவும் வாழ்க்கையைச் சிறப்பிக்கப் பயன்படுகின்றன.

அறிவியற்கலையின் வளர்ச்சி, வாழ்க்கைக்கு நலம் பல விளைப்பது என்பதை நாம் அறிகிறோம். அறிவும், ஆராய்ச்சியும் மனிதனுக்கு இன்றியமையாதவை. இறைவன் அளித்த அறிவை ஆராய்ச்சியிற் பயன்படுத்தாவிடின், மனிதன் தான் பெற்றதை இழந்தவன் ஆகின்றான். மனிதன் அறிவும் ஆராய்ச்சியும் கொண்டு, தன் வாழ்க்கை நலத்திற்காகக் கண்டுபிடித்தவற்றுள் **மின்சாரம்** என்பதும் ஒன்று. மின்சாரம் உயரிய நாகரிக இன்ப வாழ்க்கைக்கு மிகவும் பயன்படுகின்றது.

**அம்பர்** என்னும் ஒரு பொருளைத் தேய்த்தால், அதிலிருந்து ஒரு சக்தி உண்டாகிறது. மக்கள் ஒரு வகை மீன்களினிடத்தில் அச் சக்தி இருப்பதைக் கண்டார்கள், அச் சக்தி அருகில் வரும் மனிதரை நடுங்கும்படி செய்தது. அம்மீன்களுக்கு **டார்ப்பிடோ மீன்கள்** என்று பெயர்.

மின்னலினிடத்தில் ஒளியுண்டாவதைக் காண் கின்ருேம். மிக உயரமான இடத்திலிருந்து கீழே விழும் நீர்வீழ்ச்சிகளினின்றும் அச் சக்தியை உண்டாக்கலாம். நீர்வீழ்ச்சியின் கீழ்ச் சில இயந்திரங்களை அமைத்து, நீர் விழும் வேகத்தால் அவற்றை இயங்கச் செய்யலாம். அவ்வியந்திரங் களிலுள்ள காந்தத்தின் மூலம் அச்சக்தியைப் பெறலாம்; அச்சக்தியைச் சேமித்து வைத்துப் பல வழிகளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அச்சக்திதான் மின்சாரம் என்பது.

மின்சாரத்திஞல் ஒளி, வெப்பம், இயக்கும் சக்தி என்ற மூன்றையும் பெறலாம். மழைக்காலத் தில் மின்னல் மின்னும் பொழுது பளீரென்று ஒளி உண்டாகின்றதன்ருே? அந்த மின்னல், மின் சாரமே. அதஞல், மின்சார சக்திகளுள் ஒன்று ஒளி என்பதை அறியலாம். மின்சாரத்தின் இயல்பு களை ஆராய்ந்து அறிந்த அறிவியல் நுண்கலைஞர், மின்சாரத்தைப் பல வழிகளிற் பயனுடையதாக்க முயன்றனர். அதஞல் விளைந்த நன்மைகள் பல. ஆகவே, மின்சாரம் மக்களுக்கு இந்நாளில் இன்றி யமையாததாகிவிட்டது.

பதினெட்டாம் நூற்ருண்டில் மின்சாரம் கண்டு பிடிக்கப்பட்டு உலகிற்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அறிஞர்கள் பற்பலர் மின்சாரத் தைப் பற்றி மிகவும் ஆராய்ச்சி செய்தனர். அவர் களுடைய ஆராய்ச்சியின் பயஞல் மின்சாரம் பற் பல அரிய செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. அதஞல் விளைந்த நலன்களும் பலவாம்.

இராக் காலங்களில் இருள் கவிந்துகொள்கின் றது. அப்பொழுது மக்கள் வெளிச்சத்தை நாடு

கின்றூர்கள். அவர்கள் விளக்குகளினுல் இருளைப் போக்கிக்கொள்கின்றூர்கள். மெழுகு வர்த்தி விளக்கும் மண்ணெண்ணெய் விளக்கும் நிறைந்த ஒளியைத் தருவனவல்ல. மற்றும் பரந்த இடத்திற்குப் பல விளக்குகளை அமைத்தலும் போதாது; தெளிவாக இருளும் நீங்காது. மின்சார விளக்குகள் மிகுந்த வெளிச்சம் தருவன; அழகு செய்வன. அவை ஒளி தருதலால், பொருள்கள் தெளிவாகப் புலனுகின்றன. அவை பௌர்ணமிச் சந்திரனை ஒப்ப ஒளி வீசுகின்றன. தெருக்களிலும், வீதிகளிலும் மிக்க வெளிச்சம் தரும் மின்சார விளக்குகள் இருத்தலால், நாம் அச்சமின்றிச் செல்கின்றோம். வீடுகளில் மின்சார விளக்குகள் ஒளி தந்து அழகு செய்கின்றன. விளக்கு எரிய மின்சாரம் தேவை.

வெய்யிற்காலத்தில் பகலிலும் இரவிலும் நமக்குக் காற்று வேண்டியிருக்கிறது. களைப்பை நீக்கிக் கொள்ளக் காற்று வேண்டும். கை விசிறியால் எவ்வளவு நேரம் விசிறிக்கொள்ள முடியும்? மின்சார விசிறி, நல்ல காற்றைத் தந்து, களைப்பைப் போக்கிச் சுகத்தை அளிக்கிறது. வெயிலில் நடந்து வந்தவர்கள் மின்சார விசிறியின்கீழ் அமர்ந்து களைப்பாறிக்கொள்கின்றூர்கள். விசிறி சுழல மின்சாரம் தேவை.

நாம் நெல், கோதுமை, அரிசி, மிளகாய், கோப்பிக்கொட்டை முதலியவற்றை உபயோகிக்கின்றோம். நெல்லைக் குற்றி அரிசியாக்கவும், கோதுமையையும் அரிசியையும் மாவாக அரைக்கவும், மிளகாய் கோப்பிக்கொட்டை இவற்றைப் பொடியாக அரைக்கவும் இயந்திரங்கள் உள்ளன. அவற்றை இயக்குவதும் மின்சாரமே.

நீர் இறைக்கவும், ஆடை துவைக்கவும், சமைக்கவும் வீட்டைச் சுத்தம் செய்யவும் மின்சாரம் மிகவும் பயன்படுகிறது. மின்சாரத்தினுல் கிணற்று நீரை இறைத்துப் பயிர்த்தொழிலும் நடைபெறுகின்றது. நெடுந்தொலைவில் இருப்பவர்களோடு நேரில் பேசுவதுபோலப் பேச, 'டெலிபோன்'[1] என்னும் கருவி உபயோகப்படுகிறதல்லவா? அதுவும் மின்சாரத்தினுல் இயங்குவதே.



நாம் படக்காட்சி கண்டு மகிழ்கிறேம். அதற்கும் மின்சாரம் தேவை. நூல் நூற்கவும், ஆடைகள் நெய்யவும், காகிதம் செய்யவும், அச்சடிக்கவும் இயந்திரங்கள் உள்ளன. அவற்றை இயக்குவதும் மின்சாரமே. பெரிய தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வேண்டுவதாகும். மின்சார சக்தி இயந்திரங்

1. Telephone

களை இயங்கச்செய்து, பலர் பல நாள் சேர்ந்து செய்ய வேண்டுவதை விரைவில் சில மணி நேரத்தில் குறைந்த செலவில் செய்துகொடுக்கிறது.

மின்சாரத்தாலேதான் வானொலி என்னும் ரேடியோ[1]வைக் கேட்டு மகிழ்கிறோம். வெவ்வேறு நகர்களில் நடைபெறும் பாட்டு, சொற்பொழிவு முதலியவற்றை உடனுக்குடன் நேரில் கேட்பது போலக் கேட்கிறோமல்லவா? பெரிய பட்டணங்களில் மின்சார வண்டி[2]களும், மின்சார இரயில்[3]களும் உள்ளன. அவை மிக விரைவாகச் செல்கின்றன. அதனால், பெரிய பட்டணங்களில் வேலை பார்ப்பவருக்கு அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் சிற்றூர்களிலும் வாழ்ந்துகொண்டு, மின்சார வண்டியிலும், மின்சார இரயிலிலும் அலுவலகம் சென்று வேலை பார்த்து வர இயல்கின்றது.

மின்சாரம் தெய்வசக்திபோல நமக்கு அருமையான பணிகளைச் செய்கிறது. ஆனால், மின்சாரத்தினிடம் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மின்சாரம் நம்மைத் தாக்குமானால், நாம் இறந்துவிடுவோம். நோயை நீக்குதற்கும் மருத்துவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். பல வகையிலும் பயன்படுவதான மின்சாரம், நம் நல் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானதாகும். அதனால், நாம் வாழும் இக்காலத்தை 'மின்சார யுகம்' என்றே கூறலாம் அன்றோ?

1. Radio. 2. Electric trams. 3. Electric trains

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

(அ) 'அறிவியற்கலையும் வாழ்க்கையும்' என்பது பற்றி நீ அறிவது என்ன ?

(ஆ) மக்கள் முதலில் மின்சாரத்தை எவற்றில் கண்டார்கள்?

(இ) மின்சாரம் எவ்வாறு உண்டாக்கப்படுகிறது?

(ஈ) மின்சாரம் இக்காலத்தில் எவ்வகைகளிற் பயன்படுகிறது.

(உ) 'மின்சாரம் மக்கள் வாழ்க்கையை இலகுவாக்குகிறது'—எப்படி ?

(ஊ) 'மின்சார யுகம்' என்பது நமது காலத்திற்கு எப்படிப் பொருந்தும்'

**2. வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக :**

(அ) இழந்தவன், வாழ்க்கை நலத்திற்காக, என்ற மூன்றையும் பெறலாம், இயங்குவதே அலுவலகம்.

(ஆ) ஒலி, ஒளி, ஒழி இவற்றின் பொருள் வேறுபாடு புலப்பட வாக்கியங்கள் எழுதுக.

**3. கட்டுரை வரைக :**

(அ) 'நல்வாழ்க்கையும் மின்சாரமும்' என்பது பற்றி உன் சொந்த நடையில் சிறு கட்டுரை வரைக.

(ஆ) 'மின்சாரத்தால் விளையும் பயன்கள்' என்பது பற்றி நீ அறிந்ததைச் சுருக்கி வரைக.

**4. பொருள் எழுதுக :**

வித்தியாசம், எளிது, பூதம், அறிவியற்கலை, நுண்கலைஞர், கவிந்து கொள்ளல், இன்றியமையாதது.

**5. எதிர்ச்சொல் தருக :**

இராக்காலம், இழந்தவன், அச்சம், விரைவு, சிற்றூர்.

# செய்யுட்பகுதி

## I. கடவுள் வணக்கம்

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை(ச்)
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே! (1)

—திருநாவுக்கரசர்.

(குறிப்புரை) மடநெஞ்சும் - இளமனத்தையும், சூழ்த்த மாமலர் - நிறைந்த உயர்வான மலர்களைக் கொண்டு, வினையேன் - வினை காரணமாகப் பிறந்தநான், நெடுங் காலமே வீழ்த்தவா - எனது நீண்ட வாழ்க்கையை வீணுக்கலாமா?

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதம் சிந்தித் தேத்துவாம் (2)

—H. A. கிருஷ்ண பிள்ளை.

(கு - ரை.) ஞானமும் நன்மையும் - அறிவும் அதனுல் ஏற்படும் நன்மையும், நனி - மிகவும், ஊனமும் பாவமும் - பழியும் பாவமும், தீனரட்சகன் பதம் - ஏழைகளுக்கு இரங்கிக் காப்பாற்றுபவன் பாதத்தை, ஏத்துவாம் - துதிப்போம்.

ஆதியாய் அனுதி யாகி
அரும்பொருள் அனைத்து மாகிச்
சோதியாய்ச் சொரூப ஞானச்
சுடரொளித் தீப மாகி
நீதியாய்த் திறமை யாகி
நித்தியா னந்த மாகி
மாதிரப் புயமு மான
மகம்மதே! வருகுவீரே! (3)

—மஸ்தான் சாகிபு

(கு - ரை.) ஆதியாய் - முதற் பொருளாய், அனாதியாய் - காலம் கடந்த பொருளாய், அரும்பொருள் - (தேடற்கரிய) பொருள்கள், சோதியால் - பிரகாசமாய், ஞானச் சொரூபம் - அறிவுருவம், சுடரொளி - சுடர்விட்டு ஒளிரும், நீதி - மெய்ப் பொருள், திறமை - சமர்த்து, நித்தியானந்தம் - பேரானந்தம், மாதிரப்புயமுமான - திசைபோன்ற தோளையுடையவனுமான.

# II. காதைப்பகுதி

## 1. நளவெண்பா

### சுயம்வர காண்டம்

#### நிடதநாட்டின் சிறப்பு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. (1)

(கு - ரை.) காமர் - அழகு, கயல் - கெண்டைமீன், காவி - கருங் குவளைமலர், முகை - அரும்பு, தளைஅவிழ - கட்டுவிட்டு விரிய, பூமடந்தை - இலக்குமி, நாட்டம் - கண், தகைமைத்து - பெருமையுடையது, சாகரம் - கடல், நாடு - நிடதநாடு.

#### மாவிந்த நாட்டுச் சிறப்பு

மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகும் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணை நகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி. (2)

(கு - ரை.) சந்திரன் சுவர்க்கி - (மள்ளுவநாட்டுச் சிற்றரசன்), தாமரையாள் - இலக்குமி, வைகும் - தங்கும், காமரு - அழகிய, முரணை நகர் - மள்ளுவ நாட்டின் தலைநகர்.

### நளனது ஆட்சிச் சிறப்பு

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ வுலகு. (3)

(கு - ரை.) சீதம் - குளிர்ச்சி, மதிக்குடை - சந்திரவட்டக் குடை, தாதவிழ் - (தாது + அவிழ்) மகரந்தம் சிந்தும், தாரான் - மாலையையுடையவன், அருகூட்டும் - அருகில் இருந்து (சோற்றை) ஊட்டும், ஆடல் - வெற்றி.

### நளன் பூஞ்சோலையை அடைதல்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவ
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன் [ளைத்
பூநாடிச் சோலை புக. (4)

(கு - ரை.) வாங்கு - வளைந்த, வளை - சங்கவளையல், வதனமதி - முகமாகிய சந்திரன், பூத்த - தோன்றிய, பூங் குவளை - அழகிய குவளை மலர்போலும் கண்கள், தேங்குவளை - (தேன் + குவளை) - தேன் பொருந்திய குவளைமலர்.

### நளன்முன் அன்னப்பறவை தோன்றுதல்

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர, நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. (5)

(கு - ரை.) நீணிறம் - (நீள் + நிறம்) மிகுந்த நிறம், பெயர - மாறுதலடைய, தாணிறம் - (தாள் + நிறம்) பாதத்தின் நிறம், பொய்கை - குளம், தலம் - இடம், மாணிறம் - (மாண் + நிறம்) மாட்சிமை பொருந்திய நிறம், அப்புள் - நீரினுள், முளரித்தலை - தாமரையில், வைகும் - தங்கும், அன்னப்புள் - அன்னப்பறவை.

**அன்னம் கலங்குதல்**

அன்னந் தனைப்பிடித்தங்(கு) ஆயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. (6)

(கு - ரை.) ஆயிழையார் - ஆராய்ந் தெடுத்த ஆபரணங்களையுடைய பெண்டிர், மலங்கிற்று - துன்புற்றது. வான் - பெருமைபொருந்திய, கிளை - சுற்றம்.

**நளன் அன்னத்திற்குத் தேறுதல் கூறல்**

'அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்,' என்றான்; களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். (7)

(கு - ரை.) அஞ்சல் - அஞ்சாதே, மடம் - அழகு - இளமை, அனமே - அன்னமே, அணி - அழகிய, வஞ்சி - ஒரு வகைக்கொடி, விஞ்சியது - சிறந்தது, மாண - மாட்சிமை பொருந்த, தார் - மாலை, மன் - அரசன்.

**அன்னம் தமயந்தியின் குணத்தைக் கூறுதல்**

நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா(ய்)
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா,—வேற்படையும்
வாளுமே கண்ணு, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு. (8)

(கு - ரை.) நாற்குணம் - (நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆய) நான்கு பெண்மைக் குணங்கள், நாற்படை - (தேர், யானை, குதிரை, காலாள் என்னும்) நான்கு சேனைகள், ஐம்புலன் - (காட்சி, மோத்தல், கேட்டல், சுவைத்தல், தொட்டறிதல் என்னும்) ஐந்து உணர்வுகள், அமைச்சு - மந்திரி, ஆர்க்கும் - ஒலிக்கும்.

**அன்னம் நளனுக்குத் தமயந்தியை மணம் புரிந்து வைப்பேன் என்று கூறிப்போதல்**

வீமன் திருமகளாம், மெல்லியலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையாய்! என்றுரைத்து நீங்கியதே—அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து. (9)

(கு - ரை.) மெல்லியல் - மென்மையான இயல்பு, வாமம் - அழகு, சேமம் - பாதுகாப்பு, ஒடுங்கிடையாள் - (ஒடுங்கு + இடையாள்) மெல்லிய இடையையுடைய தமயந்தி.

**தமயந்தி அன்னத்தைக் கண்டு வினவுதல்**

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடம்சேர்ந் தாங்கதனை
'என்னுடல்? சொல்' என்றாள் 'ஈங்கு' (10)

(கு - ரை.) வடிவு - மெய்ச்சொல் நன்னுதல் - அழகிய நெற்றியை உடைய தமயந்தி, (அன்மொழித் தொகை) என்நாடல் - என்ன விரும்புவது.

**அன்னம் நளனது சிறப்பை எடுத்துரைத்தல்**

செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்,—மெய்ம்மை
நளனென்பான், மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு. (11)

(கு - ரை.) செம்மனம் - களங்கமற்ற மனம், தண் அளி - குளிர்ந்த கருணை, மேனிலம் - தேவலோகம், நானிலம் - (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) நான்குவகை நிலங்களை உடைய பூமி.

### தமயந்தி, அன்னத்திடம் நளனைத் தனக்கு மணம் செய்துவைக்கும்படி வேண்டல்

வாவி யுறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி, என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. (12)

(கு-ரை.) வாவி - குளம், ஆவி - உயிர், காவினிடை - சோலையில், பார்வேந்தன் பாவை - தமயந்தி.

### வீமன் சுயம்வரச் செய்தி அனுப்புதல்

மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென்(று) இயம்பினன்-பைங்கமுகின்
கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் நன்னுடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு. (13)

(கு-ரை) வார்முரசம் - வார்களால் வரிந்து கட்டப் பெற்ற முரசம், அறைக - அடிக்க, பைங்கமுகு - பசுமையான பாக்கு மரம், வேந்தர்மேல் - வேந்தர்களிடம், தூதோட விட்டு - தூதனுப்பி.

### மன்னர் கூட்டம்

புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார்—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்தன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு (14)

(கு-ரை.) புள் - பறவை, உறையும் - வசிக்கும், பூங் கமலம் - அழகிய தாமரை, வாவி - தடாகம், தெள் அரிக்கண் - தெளிவான செவ்வரிகளையுடைய கண், பூமகள் - சரசுவதி, பொன் - இலக்குமி, பெருவேல் - போர் புரியும் வேலாயுதம், கோமகள் - அரசன் மகள்.

### தமயந்தி சுயம்வரத்திற்கு நளன் புறப்படுதல்

கெட்ட சிறுமருங்குல் கீழ்மகளிர் நீள்வரம்பின்
இட்ட பசுங்குவளை ஏரடித்த—கட்டி
கரையத்தேன் ஊறுங் கடல்நாடன் ஊர்க்கு
விரையத்தேர் ஊர்என்ருன் வேந்து. (15)

(கு - ரை.) கெட்ட சிறுமருங்குல் - சுருங்கிய சிறு இடை, கீழ் மகளிர் - மள்ளப் பெண்கள், நீள்வரம்பு (காரிகைகளின்) நீண்ட வரம்பு, இட்ட - எறிந்த, கட்டி - மண்கட்டிகள்.

### இந்திரன் அக்கினி முதலிய தேவர்கள் சுயம்வரத்திற்கு வருதல்

மால்வரைய வச்சிரத்தால் ஈர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணுடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணுடு நோக்கி மகிழ்ந்து (16)

(கு - ரை.) மால்வரையை - உயர்ந்த மலையின் சிறகுகளை, வச்சிரம் - வச்சிராயுதம், ஈர்ந்தான் - அரிந்தவனுகிய இந்திரன், கோள்வளை - திரட்சியான வளையலை அணிந்த தமயந்தி, சால்பு - மேன்மை, விண்ணுடு - தேவலோகம், மண்ணுடு - பூலோகம்.

### தமயந்தி சுயம்வர மண்டபத்திற்கு வருதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. (17)

(கு - ரை.) பொன்னின் - இலக்குமியை ஒத்த, மடம் - அழகு, புக்காள் - புகுந்தாள், மின்னிறத்து - மின்னலைப் போன்ற பிரகாசமுள்ள, செய்யதாள் - சிவந்தகால், சிறை - சிறகு, பொய்கைவாய் - குளத்தினிடத்து.

### நளன் வடிவுடன் இருந்த தேவர்களைக் கண்டு தமயந்தி ஐயுறல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார் ;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்(று)
ஊசலா டுற்ருள் உளம். (18)

(கு - ரை.) காவலர் - அரசர், சேடி - தோழி, ஈரிருவர் - (இந்திரன், வருணன், அக்கினி, யமன் முதலிய) நால்வர், பூவரைந்த - பூக்கள் சூட்டப்பெற்ற, உளம் - மனம், ஊசலாடுற்ருள் - தடுமாற்ற மடைந்தாள்.

### தமயந்தி நளனை அறிதல்

கண்ணிமைத்த லால்அடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே யன்னுள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. (19)

(கு - ரை.) காசினி - பூமி, தோய்தலால் - படிதலால், வண்ணம் - அழகிய நிறம், தாமரை விரும்பும் நன்னுதல் - தாமரை மலரைத் தனக்கு இருக்கையாக விரும்பும் நல்ல நெற்றியையுடைய இலக்குமி.

### தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டல்

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினுள் பொன். (20)

—புகழேந்திப்புலவர்.

(கு - ரை.) வெள்கி - வெட்கமடைந்து, சுளிக்க - கோபிக்க, கண்ணகல் - இடம் அகன்ற, ஞாலம் - உலகத்தார், களிகூர - மகிழ்ச்சி அடைய, வன்மாலை - கொடிய மயக்கத்தையுடைய மாலை, பொன் - இலக்குமியை யொத்த தமயந்தி.

## 2. சீருப்புராணம்

### நபி அவதாரப் படலம்

#### ஆமினா கனவு காணல்

மாத மொன்பதி லாமினா கனவினின் உதித்தே
வேத நான்முறை நேர்வழிக் குரியவர் விளங்கக்
கோதை யேபெறின் முகம்மது வெனப் பெயர் கூறென்(று)
ஆதிநாயகன் வரிசையீ சாநபி யறைந்தார் (1)

(கு - ரை.) வேதம் - மறை, கோதை - பெண், ஆதிநாயகன் - அனைத்துலகங்கட்கும் முதல் தலைவன்.

#### முகம்மதுநபி பிறத்தல்

கோதறப் பழுத்த மதுரமே கனிந்த
கொவ்வைவா யரம்பையர் வாழ்த்தித்
தீதற நெருங்கி ஏவல்செய் திருப்பச்
செழுங்கம லாசனத் திருந்த
மாதருக் கரசி யாமினா உதர
மனையிடத் திருந்துமா நிலத்தில்
ஆதரம் பெருக நல்வழிப் பொருளாய்
அகமது தோற்றின ரன்றே! (2)

(கு - ரை.) மதுரம் - இனிமை, அரம்பையர் - தெய்வப் பெண்களையொத்த நங்கையர், ஆதரம் - அன்பு, கமலாசனம் - வயிரங்களினாலமைந்த ஆசனம்.

நெறிநிலை திரியா மருண்மத மிகுந்து
நெடுநில மெங்கணும் பரந்து,
துறவறந் தவறி இல்லற மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் கால மிருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
மகம்மது நபிபிறந் தனரே. (3)

—உமறுப்புலவர்.

(கு - ரை). நெறிநிலே திரியா - மார்க்கவழி திரிந்து, மருள்மதம் - மயக்கத்தைக் கொடுக்கும் மதங்கள், நெடுநிலம் - பரந்த பூமி, இருளெனுங்குபிரின் குலமறுத்து - அஞ்ஞானத்தை நீக்கி, முழுமதி - பூரண சந்திரன்.

## 3. இரட்சணிய சரிதப் படலம்

### குமாரப் பருவம்

#### இயேசு சிலுவையைத் தூக்கிக் கொண்டு வீதி வழியே செல்லுதல்

கையயர்ந்து வாய்புலர்ந்து
 கண்ணிருண்டு காதடைத்து
வெய்ய சிலுவை சுமந்தலசி
 மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்து நடை
 தள்ளாடி
அய்யன் மறுகூடு வரக் கண்டார்
 அணிநகரார். (1)

(கு - ரை.) புலர்ந்து - வரண்டு, அலசி - வருந்தி, மறுகு - வீதி.

#### சிலுவையில் பிணித்து நடுதல்

ஈண்டினியான் புகல்வதெவன்
 எம்பெருமான் திருமேனி
தீண்டினர் சிலுவையொடு
 சேர்த்தினர் செங்கையிலுங்
காண்டகுசே வடியிலும்வெவ்
 விருப்பாணி கடாவினர்
நீண்டசிலு வையெடுத்து
 நிறுத்தினர் நிலங்கீண்டு. (2)

(கு - ரை.) கடாவினர் - செலுத்தினர், சேவடி - சிவந்த பாதங்கள், கீண்டு - தோண்டி.

**இவர்கள் தெரியாமல் செய்யும் பிழையைப் பொறுக்குமாறு வேண்டல்**

தன்னரிய திருமேனி சதைப்புண்டு
தவிப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு
படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென வறிகில்லார்
தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய்
மலர்ந்தார்நம் அருள்வள்ளல். (3)

(கு - ரை.) பன்னரிய - சொல்லுதற்கரிய, பாடு - துன்பம், பரிந்து - அன்புடன்.

**உயிர் நீங்குதல்**

மருவா ரளித்த புளிங்காடியை
வாங்கி யன்பின்
உருவாய்ந் தவர்யாவு முடிந்தவென்
றுய்த்தி யம்பி
ஒருவா தவெந்தா யுயிர்நல்கின
னுங்கை யென்னுத்
திருவாய் மலர்ந்து தலைசாய்ந்தனர்
சீவன் விட்டார். (4)

(கு - ரை.) மருவார் - பகைவர், புளிங்காடி—புளித்த பழரசம், உய்த்து - ஆராய்ந்து, பரிந்து - அன்புடன்.

**உயிர்த் தெழுதல்**

இன்னதோ ரமையந் தன்னில்
இருநில வுலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய
பரகதிப் பயனை யீட்டித்

துன்னிய ஜடவி யோகத்
துயிலுணர் சூழ்ச்சி யேபோல்
உன்னத தேவ மைந்த
னுயிர்த்தெழுந் தருளிப் போந்தார். (5)

—H. A. கிருஷ்ணபிள்ளை.

(கு - ரை.) அமயம் - சமயம், பரகதி - மேலாகிய நிலை, ஜடவியோகம் - உடல் விடுதல் (சாவு)

## 4. பஞ்சதந்திரம்

### வேடன் கதை

வனமொன்றி லொருவேடன்
வளர்குருவிக் கூட்டினொடும்
இனமொன்று வேட்டைக்கரு
விகளுமெடுத் தேதிரியக்
கனமிருண்டு மழைபெய்யக்
காற்றெழும்ப அவனடுங்கி
மனமருண்டோர் மரத்தின்கீழ்
வந்திருந்தான் ; அப்போது (1)

(கு - ரை.) வனம் - காடு, இனம் ஒன்று - சாதிக்குப் பொருந்திய, கனம் - மேகம், மருண்டு - திகைத்து.

தங்குமதன் மேலிருந்த
புருவொன்று தன்பேட்டை
'எங்ககன்ற தோவனத்தில்!
யாரேனும் பிடித்தாரோ!
மங்கியதோ!' எனப்புகல,
அதுகேட்டு வனசரன்றன்
அங்கையுறு கூட்டிலுற்ற
பெண்புரு அழுதுசொல்லும். (2)

(கு - ரை.) பேடு - பெண் பறவை, மங்கியதோ - இறந்ததோ, வனசரன் - காட்டில் திரிபவனுன வேடன், அம்கை - அழகிய கை, உறு - பொருந்திய.

‘ முன்வினையா லிதுபெற்றே
    ணுயினும்நின் மனையடைந்த
இன்னவனுக் குபகாரம்
    புரி, ’ எனலும் எரிகொளுவி
அன்னவனை அழைத்துடலின்
    குளிர்போக்கி, ‘ ஆகாரம்
என்னை நீ அருந்(து); ’ என்று,
    வீழ்ந்திறக்க, இவன் நோக்கி. (3)

(கு - ரை.) முன்வினை - முற்பிறப்பில் செய்த பாவம், இன்னவன் - இவன், எரிகொளுவி - தீமூட்டி, அருந்து - சாப்பிடு.

‘ அன்பினுல் நம்பொருட்டு
    வீழ்ந்த விதை அருந்தியிடில்
துன்பம்வரும், ’ எனப்பேட்டை
    விடுத்திடலும் ; சூழ்ந்ததுவும்
தன்புருடன் பிரிவதனுல்
    வீழ்ந்திறக்கத் தகுமிரண்டும்
இன்பமுறு தெய்வவுறு
    எய்திவா னுலகடைந்த. (4)

(கு - ரை.) தெய்வஉரு - தேவர் வடிவம், வான் உலகு - தேவலோகம், அடைந்த - அடைந்தன.

இரக்கமொடு வேடுவனும்
    எரிவீழ்ந்து கதியடைந்தான் ;
தரைக்குளுளம் தளர்ந்துசர
    ணர்த்தியென்று சார்ந்தார்க்கும்

புரக்கவருள் செயின்தாமே
பொன்றவரி னும்வரு மென்
றுரைத்துப்பொன் எச்சமிடும்
பறவைகதை யோதுமால். (5)

—வீரமார்த்தாண்ட தேவர்.

(கு - ரை.) எரி - தீ, கதி - மோட்சம், தரை - பூமி, உளம் தளர்ந்து - மனம் சோர்ந்து, சரண் ஆர்த்தி - அடைக்கலம், (காப்பாற்று) சார்ந்தார் - அடைந்தவர், புரக்க - காப்பாற்ற, அருள் - கருணை, பொன்ற - இறக்க, (அழியா) எச்சம் - மலம், ஓதும் - சொல்லும்.

## 5. குசேலோ பாக்கியானம்

[வறுமையால் வாடும் பிள்ளைகளைப் பார்த்து மனங் கலங்கும் சுசீலைக்குக் குசேலர் நல்லறிவு புகட்டும் பகுதி இது.]

**நிதி வேண்டாம் என்பதற்குக் கூறும் நியாயங்கள்**

மைந்தர்கள் தம்மைப் போற்ற
வளநிதி வேண்டும் என்றாய் ;
நந்திய பறவை கானம்
நயந்(து) உறை விலங்கு முன்னாள்
வந்தபல் உயிர்க்குச் சேம
வைப்(பு) உண்டோ? வருவாய் உண்டோ?
எந்திடத் தேனும் போய் ஒன்(று)
இரப்பது தானும் உண்டோ? (1)

(கு - ரை.) வளநிதி - மிக்க செல்வம், நந்திய (நத்திய) நத்துகின்ற, கானம் - காடு, சேமவைப்பு - சேமநிதி.

அல்லது நாளைக்(கு) என்செய்
வா(ம்) எனுங் கவலை உண்டோ?
எல்லையில் ஒன்றினால் ஒன்(று)
இடிப்(பு) உண்டு வாழ்தல் உண்டோ?

ஒல்லு(ம்) அவ் வுயிர்கள் தம்முள்
உணவிலா(து) இறந்த(து) உண்டோ ?
சொல், அரி, பரந்த உண்கண்
துடியிடைப் பேதை மாதே ! (2)

(கு - ரை.) ஒல்லும் - இணங்கும், அரி - செவ்வரி, பேதை - அறிவில்லாத.

கல்லினுட் சிறுதே ரைக்கும்
கருப்பை அண்டத்து (உ)யிர்க்கும்
புல் உண(வு) அளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி அண்ணல்
ஒல்லு(ம்) நின் மைந்தர்க் காவா(து)
ஒழிவனோ ? ஒழியான் உண்மை
மெல்லியல் கொண்ட துன்பம்
விடுவிடு ; மறந்தும் எண்ணல். (3)

—வல்லூர் தேவராச பிள்ளை.

(கு - ரை.) அண்டம் - முட்டை, புல் - அற்பம், துழாய் - துளசி, கன்னி - மாலை, அண்ணல் - திருமால், ஒல்லும் - பொருந்தும், ஒழிவு - மறைவு.

## 6. பாஞ்சாலி சபதம்

### துகிலுரிதல்

[துரியோதனன் பாண்டவரை வஞ்சனையாற் சூதாட்டத்தில் வென்று திரௌபதியைச் சபைக்கு இழுத்து வரும்படி துச்சாதனனுக்குக் கட்டளை இட்டான்.]

திரௌபதிக்கும் துச்சாதனனுக்கும் வாக்குவாதம்

தேவர் புவிமிசைப் பாண்டவர் ;—அவர்
தேவி, துருபதன் கன்னிநான் ;—இதை
யாவரும் இற்றை வரையினும்—தம்பி !
என்முன் மறந்தவ ரில்லைகாண்—தம்பி !

காவல் இழந்து மதிகொண்டாய் ;—இங்கு
கட்டுத் தவறி மொழிகிருய் ;—தம்பி !
நீவந்த செய்தி விரைவிலே—சொல்லி
நீங்குக என்றனள் பெண்கொடி. (1)

(கு - ரை.) துருபதன் கன்னி - துருபதன் குமாரி, இற்றைவரை - இன்றுவரை, காவல் - காத்தல், கட்டுத்தவறி - நெறிதவறி.

பாண்டவர் தேவியும் அல்லை நீ—புகழ்ப்
பாஞ்சாலத்தான் மகள் அல்லை நீ—புவி
ஆண்டருள் வேந்தர் தலைவனும்—எங்கள்
அண்ணனுக்கே அடிமைச்சி நீ,—மன்னர்
நீண்ட சபைதனிற் சூதிலே—எங்கள்
நேசச் சகுனியோ டாடியங்—குன்னைத்
தூண்டும் பணய மவன் வைத்தான்—இன்று
தோற்று விட்டான் தருமேந்திரன். (2)

(கு - ரை.) தேவி - மனைவி, அல்லை - அல்லள், பாஞ்சாலத்தான் - பாஞ்சால தேயத்தான் (துருபதன்), வேந்தர் தலைவன் - அரசர்க்கரசன், அடிமைச்சி - அடிமைப் பட்டவள், நேசம் - அன்பு, பணயம் - பந்தயம், தருமேந்திரன் - தருமராசன்.

ஆடி விலைப்பட்ட தாதிநீ,—உன்னை
ஆள்பவன் அண்ணன் சுயோதனன்—மன்னர்
கூடி யிருக்குஞ் சபையிலே—உன்னைக்
கூட்டி வருகென்று மன்னவன்—சொல்ல
ஓடிவந் தேனிது செய்திகாண் ;—இனி
ஒன்றுஞ் சொலாதென்னோ டேகுவாய்-அந்தப்
பேடி மகனொரு பாகன்பால்—சொன்ன
பேச்சுக்கள் வேண்டிலன் கேட்கவே ! (3)

(கு - ரை.) ஆடி - சூதாட்டத்திலே, பேடி - ஆண்மைத் தன்மையற்றவன்.

[துரியோதனன் ஆணையால் துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைப் பிடித்திழுத்து வந்து சபையில் நிறுத்தி அவளின் துகிலை உரியக் கண்ணன் கருணையால் துகில் வளருதல்.]

பொன்னிழை பட்டிழையும்—பல
புதுப்புதுப் புதுபுதுப் புதுமை களாய்
சென்னியிற் கைகுவித்தாள்—அவள்
செவ்விய மேனியைச் சார்ந்து நின்றே
முன்னரிய ஹரிநாமம்—தன்னில்
முழுநற் பயனுல கறிந்திடவே
துன்னிய துகிற் கூட்டம்—கண்டு
தொழும்பத்துச் சாதனன் வீழ்ந்து விட்டான்.
(4)

(கு - ரை.) இழை - நூல், சென்னி - தலை, ஹரி - திருமால், துகில் - ஆடை, தொழும்பன் - அடிமை.

பாஞ்சாலி சபதம் கூறல்

தேவி திரௌபதி சொல்வாள்—ஓம்
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன் ;
பாவி துச்சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து—குழல்
மீதினில் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்நான்—இது
செய்யுமுன் னேமுடி யேன்என் றுரைத்தாள்.
(5)

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

(கு - ரை.) செந்நீர் - சிவந்த நீர் (இரத்தம்), ஆக்கை - உடல், குழல் - கூந்தல்.

# III. நீதிப்பகுதி

## 1. திருக்குறள்

### தந்தைக்கு மகன் செய்யும் உதவி

மகன் றந்தைக் காற்றுமுதவி யிவன் றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல். (1)

(கு - ரை.) ஆற்றுமுதவி - செய்யுங் கைமாறுவது, என்னோற்றான் கொல் - என்ன தவத்தைச் செய்தானோ!

### அமிர்தமாயினும் விருந்தோடுண்

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (2)

(கு - ரை.) விருந்து - விருந்தினர், புறத்தது ஆக - (தன்வீட்டின்) புறத்திருக்க. சாவாமருந்து - அமிர்தம், வேண்டல்பாற்று அன்று - விரும்பப்படத் தக்கதன்றாம்.

### ஒழுக்கம் உயிரினும் மேலானது

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்.
உயிரினு மோம்பப் படும். (3)

(கு - ரை.) விழுப்பம் - மேன்மை, ஓம்பப்படும் - பாது காக்கப்படும்.

### தீயசெய்கைகள் தீயினும் கொடியவை

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். (4)

(கு - ரை.) தீயவை - தீவினைகள், தீய பயத்தலால் - தீமையையே தருதலால், தீயவை - அத்தீய வினைகள்.

### அறிவாளனது செல்வம் மக்கள் நீருண்ணும் கேணி

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு. (5)

(கு - ரை.) உலகு அவாம் - உலக நடையை விரும்பிச் செய்யும், பேரறிவாளன் திரு - பெரிய அறிவினையுடையவனது

செல்வம், ஊருணி - ஊரில் வாழ்வார் நீருண்ணுங் குளம், அற்று - போலும்.

### வாய்மையே அகத்தழுக்கைப் போக்கும்

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும். (6)

(கு - ரை.) புறம்தூய்மை - உடற்சுத்தம், அமையும் - உண்டாகும், அகந்தூய்மை - மனச்சுத்தம், வாய்மையான் - உண்மை பேசுவதால்.

### கோபம் கொடிய துன்பத்தைத் தரும்

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். (7)

(கு - ரை.) சினம் - கோபம், கொல்லும் - கடுந்துன்பங் களை உண்டாக்கும்.

### கற்றபடி செய்க

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. (8)

(கு - ரை.) கசடுஅற - குற்றம் நீங்க, அதற்குத்தக - அந்நூல்களிற் கூறும் வழிக்கு ஏற்றபடி.

### எண்ணும் எழுத்தும் இருகண்

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. (9)

(கு - ரை.) எண் - கணக்கு, என்ப - என்று கூறப் படுவன, எழுத்து - எழுத்தும், என்று - என்று கூறுவர், (அறிந்தோர்).

### சுற்றத்தைப் பேணுதல் வேண்டும்

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள. (10)

—திருவள்ளுவர்

(கு - ரை.) கரவா - மறையாமல், கரைந்து - இனத்தை அழைத்து, ஆக்கமும் - செல்வமும், அன்ன நீரார்க்கே - (காகம்போன்ற) அப்படிப்பட்ட குணம் உள்ளவர்க்கே, உள - உண்டாகும்.

## 2. நன்னெறி

முனிவினும் நல்குவர் மூதறிஞர் ; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் ;—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் ; எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை

—சிவப்பிரகாசர்

(கு - ரை.) முனிவினும் - கோபித்திருப்பினும், நல்குவர் - கொடுப்பர், மூதறிஞர் - மிக்க அறிவினையுடையவர், உள்ளக் கனிவிலும் - மனச்சந்தோஷமாக இருந்தகாலத்தும், கயவர் - கீழ்மக்கள், நனிவிளைவு இல் - நல்ல விளைவு இல்லாத, காயினும் - காயாய் இருப்பினும், ஆகும் - உபயோகப்படும், கதலி - வாழை, அறை - சொல்.

## 3. திரிகடுகம்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன் ;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்;
கோளாளன் என்பான் மறவாதான் ; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. (1)

(கு - ரை.) தாளாளன் - முயற்சியுடையவன், வேளாளன் - பிறர்க்கு உதவுபவன், விருந்து - புதியவன், கோளாளன் - பிறர்கூறும் நல்ல பொருள்களை மனதில் கொள்பவன், கேளாக - நட்பினராக.

கண்ணுக்(கு) அணிகலம் கண்ணோட்டம் ; காமுற்ற
பெண்ணுக்(கு) அணிகலம் நாணுடைமை ;—நண்ணும்
மறுமைக்(கு) அணிகலம் கல்வி ; இம் மூன்றும்
குறியுடையார் கண்ணே உள. (2)

—நல்லாதனர்

(கு - ரை.) அணிகலம் - நகை (ஆபரணம்). கண்ணோட்டம் - தாட்சணியம் (பழகியவர் கூறியதை மறுக்காதிருத்தல்), காமுற்ற - விரும்பிய, நாணுடைமை - வெட்கமுடைமை, நண்ணும் - அடையும், மறுமை - மறுபிறப்பு, குறியுடையார் கண்ணே - இயற்கையான அறிவுடையவரிடத்தே.

## 4. நான்மணிக்கடிகை

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமில்லாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞரில் போழ்தில் சினங்குற்றம் ; குற்றம்
தமரல்லார் கையகத் தூண்.

—விளம்பிநாகனார்

(கு - ரை.) கல்லாமை - படியாமலிருத்தல், வளமிலாப் போழ்தத்து - செல்வம் இல்லாத காலத்தில், வள்ளன்மை - பிறருக்குத் தன்னிடமுள்ளதைக் கொடுத்தல், கிளைஞர் இல் போது - சுற்றத்தார் இல்லாத காலத்தில், அமர் அல்லார் - தம்மிடம் உண்மை அன்பு இல்லாதவர், ஊண் - உணவு (உண்ணுதல்).

## 5. சிறுபஞ்சமூலம்

சிலம்பிக்குத் தன்சினை கூற்றம் ; நீள்கோடு
விலங்கிற்குக் கூற்றம் ; மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமாம் ; ஞெண்டிற்குத் தன்பார்ப்பு;
நாவிற்கு நன்றல் வசை.

—காரியாசான்

(கு - ரை.) சிலம்பி - சிலந்தி, சினை - முட்டை, கூற்றம் - யமன், கோடு - கொம்பு, விலங்கு - மிருகம், வலம்படா - வலிமையில்லாத, மா - கவரிமான், ஞெண்டு - நண்டு, பாம்பு, குஞ்சு, நா - நாக்கு, நன்று அல் வசை - நன்மை தருவதல்லாத பழிச்சொல்.

# IV பல்சுவைப்பகுதி

## 1. ஈழமண்டலச் சிறப்பு

[இப்பாடல்கள் பருளை விநாயகர் பள்ளு என்ற நூலில் உள்ளவை. இதன் ஆசிரியர் யாழ்ப்பாணத்து நல்லூரில் இருந்த சின்னத் தம்பிப் புலவர் அவர்கள்.]

பைப்ப ணிப்பகு வாய்ப்பட்ட திங்களிற்
பாயு மோதக் கடற்கரை தோறும்
இப்பி வாயிலின் முத்த மிலங்கிடும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே. (1)

(கு - ரை.) பைப்பணி - படத்தையுடைய பாம்பு, பகுவாய் - பிளந்த வாய், திங்களின் - சந்திரன்போல, ஓதம் - திரை, இப்பி - சிப்பி.

ஆட்டும் ஊசலின் ஆடுமின் ஞர்பொன்
அணிக லத்தின் மணிதெறித் தோடி
ஏட்டுக் காவலில் குயில் துயில் மாற்றிடும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே. (2)

(கு - ரை.) அணிகலம் - ஆபரணம், ஊசல் - ஊஞ்சல், மின்ஞர் - பெண்கள், மணி - இரத்தினக்கற்கள், ஏட்டுக்கா - பூவிதழ்களையுடைய சோலை, குயில்துயில் - குயிலினது நித்திரை.

[கீழ்வரும் பாடலைப் பாடியவர் யோகி சுத்தானந்த பாரதியார்]

வாரிசூழ் இலங்கை ; மேய
வானகக் கருணை யாலே
மாரிசூழ் இலங்கை ; நல்ல
மாந்தர்சூழ் இலங்கை ; ஆன்ம
வீரர்சூழ் இலங்கை ; அன்பின்
வெற்றிசூழ் இலங்கை ; நல்ல
தீரர்சூழ் இலங்கை வாழ்க
தினகரன் சோதி போல

(கு - ரை.) வாரி - சமுத்திரம், மாரி - மழை, தீரர் - மன வலிமை உடையவர், தினகரன் - சூரியன்.

## 2. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை யுலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

—சி. சுப்பிரமணிய பாரதியார்

(கு - ரை.) பாமரர் - கல்லாதார், இகழ்ச்சி - நிந்தை, பான்மை - தகுதி, தேமதுரம் (தேன்+மதுரம்) - மிகவும் இனிமை.

## தமிழ் இலக்கியங்கள்

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தமராகி ஒழுகுவமே. (1)

பாவின் சுவைக் கடல் உண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவில் இனிக்கப் பருகுவமே—நூலின்
நன்னயம் முற்றும் தெளிகுவமே (2)

தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி உணர்ந்தின் புறுவோமே. (3)

—சி. சுப்பிரமணிய பாரதியார்

(கு - ரை.) திருமறை - திருக்குறள், பா - பாட்டு, பார் - பூமி, தீம் - இனிமை, நயம் - சிறப்பு, ஊன் - உடம்பு, நிதம் - ஒவ்வொருநாளும்.

## 3. பொய் வருணனை

கல்லாத ஒருவனை நான்
"கற்ருய்" என்றேன்
காடெறியும் மறவனை
"நாடாள்வாய்" என்றேன்
பொல்லாத ஒருவனை நான்
"நல்லாய்" என்றேன்
போர் முகத்தை அறியானைப்
"புலியே(று)" என்றேன்
மல்லாடும் புயமென்றேன்
சூம்பற் ருேளை;
வழங்காத கையனை நான்
"வள்ளல்" என்றேன்
இல்லாது சொன்னேனுக்
"இல்லை" என்ருன்
யானும் மென்றன்
குற்றத்தால் ஏகின்றேனே.

(கு - ரை.) எரியும் - வெட்டும், பொல்லாத - கொடுமையை யுடைய, புலியேறு - வீரத்தில் ஆண்புலியை ஒத்தவன், மல் ஆடும்புயம் - மற்போருக்குரிய தோள், சூம்பல் - சுருங்கிய, வள்ளல் - வரையாது கொடுப்பவன், குற்றம் - தகுதியில்லாதவனைத் தகுதி உடையவன் என்று பணத்திற்காகக் கூறியது.

—தனிப்பாடல்

## 4. காத்தான் சத்திரம்

கத்துக்கடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் ;—குற்றி
உலையிலிட ஊர்அடங்கும் ; ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்

—காளமேகப் புலவர்

(கு - ரை.) கத்துகடல் - இரைகின்ற சமுத்திரம், அத்தமிக்கும்போது - சூரியன் மறையும் சமயம். ஊர் அடங்கும் - ஊரில் உள்ள அனைவரும் உறங்கிவிடுவர். வெள்ளி - விடிவெள்ளி, எழும் - உதிக்கும்.

## 5. ஆறுமுக நாவலர்

இல்லா ஏழை எளியவர்க்கு
இரங்கும் இனிய குணசீலன்
கல்லா தவரின் கல்நெஞ்சும்
கனியப் பேசும் கனிவுடையோன்
வல்லா ரறிஞர் செல்வரறம்
வளர்க்கும் ஈழ வளநாட்டான்
நல்லார் போற்றும் ஆறுமுக
நாவ லன்பேர் மறவோமே

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

தமிழ்நாடு ... சென்னை-600 008.
136356.

# புதிய தமிழ்ப்பாட நூல்கள்

இவை யாவும் இனிய தமிழில் காலத்திற்கு ஏற்பப் புத்தம் புதிய பாடங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டவை

| | | | | |
|---|---|---|---|---|
| உமா வாசகம் (கீழ்ப் பிரிவு) வண்ணப் படங்களுடன் | | ... | 50 | சதம் |
| உமா வாசகம் | I | ... | 50 | ,, |
| ,, | [illegible] | ... | 60 | ,, |
| ,, | III | ... | 70 | ,, |
| ,, | [illegible]V | ... | 80 | ,, |
| ,, | V | ... | 90 | ,, |
| ,, | VI | ... | ரூ. 1-25 | ,, |
| ,, | VII | ... | ரூ. 1-25 | ,, |
| ,, | VIII | ... | ரூ. 1-50 | ,, |

# UMA VACHAKAM

(TAMIL)

BOOK VI—STANDARD VI

KALAIVANI BOOK CENTRE

130, TRINCOMALI STREET, KANDY.

*Copyright*] [*Price* **Rs. 1/25**